தரம் 10

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)




அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீ லங்கா

Web: www.nie.lk
Email: info@nie.lk

# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி
## தரம் 10

(2015ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறும்)

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல் சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.

நாடகமும் அரங்கியலும்.
ஆசிரியர் வழிகாட்டி,
தரம் - 10
பாடத்திட்டம் - 2015.

© தேசிய கல்வி நிறுவகம், மகரகமை.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மகரகம.

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

அச்சுப்பதிப்பு :
பதிப்பகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப் பெறும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் வழியாகப் புதிய தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பெற்றது. தேசிய கல்வி ஆணைக்குழு வின் விதப்புரைகளுக்கமையத் தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுற்படுத்தப்பட உள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின்போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பெற்று, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட் டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிவு நிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள், ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பெற்ற பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப்படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பெற்ற பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பெற்ற பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங் களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்,**
தேசிய கல்வி நிறுவகம்.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப் பெறுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடையும் பொருட்டு, பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பெற்றுள்ள ஆசிரியர் வழிகாட்டியை, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

பாடநிறைவில், அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி, வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப்பெறுதல் வேண்டும்.

மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** **கல்விசார் அலுவல்கள் சபை,**
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **கலாநிதி ம. சண்முகலிங்கம்,**
விரிவுரையாளர் (ஓய்வு பெற்ற),
யாழ். பல்கலைக்கழகம்.

**பாட இணைப்பாக்கம்:** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.
**திரு. கே. ஜி. அஜித் ரூபசேன,**
செயற்றிட்டத் தலைவர், அழகியற்கல்வித் துறை.

**எழுத்தாளர் குழு:**
**(வெளிவாரி)** **திரு. க. திலகநாதன்,**
விரிவுரையாளர்,
தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
**திருமதி. செ. எ. வைதேகி,**
ஆசிரியர் சேவை, கிளி / பளை மத்திய கல்லூரி.
**திருமதி. கே. ஜீவாஜினி,**
ஆசிரியர் சேவை, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
**திருமதி. ச. ஜெயந்தி,**
ஆசிரியர் சேவை,
யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
**திரு. பி. ரவீந்திரன்,**
ஆசிரியர் சேவை, மட் / செட்டிபாளையம் ம.வி.
**திரு. இ. ஜெகநாதன்,**
ஆசிரியர் சேவை, மட்/ கோட்டைக்கல்லாறு ம.வி.
**திரு. யோ. யோன்சன் ராஜ்குமார்,**
ஆசிரியர் சேவை,
யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**(உள்வாரி):** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**செவ்விதாக்கம்:** **திரு. செ. செல்வகுமார்,**
விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**கணினிப் பதிப்பு:** **செல்வி. கமலவேணி கந்தையா**
தேசிய கல்வி நிறுவகம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவுப் பொருளாதார யுகத்தைக் குறித்து நிற்பதாகும். உலகம் கிராமமாகச் சுருங்கியதைப் போலவே, அறிவுத் திரட்டையும் மிகமிகச் சுருக்கமான தாக்கித் தருவது இந்த நூற்றாண்டின் சவால் மிக்க பணியாகும். உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் அதனை நோக்கியே குவிக்கப் பெற்றுள்ளன. தொழிற்றுறை மனிதன் இயந்திரமல்லன். அவனை மனிதனாகவே வைத்திருக்கக் கலைகளே பயனுறு பங்காற்று கின்றன. ஆதலால் அன்பு, கருணை, படைப்பாற்றல், ஒற்றுமை, நல்லிணக்கம், பிணைப்பு, பற்றுதி போன்றவற்றை மனிதர்களிடத்திற் பிரவாகிக்கச் செய்வதற்கு அழகியற் பாடங்கள் துணை செய்கின்றன.

நாடகம் மனிதரைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் தமக்குட் கொள்ளும் உறவை இரத்தமும் சதையுமாக வெளிப்படுத்துகிறது. அறிவுப் பொருளாதார யுகத்தில் மனிதருக்கு மிக வேண்டப்பெறுகின்ற தொடர்பாடற் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வு சார் நடத்தைகள், துல்லியமான, தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் தரம் 6 முதல் தரம் 13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப் பெற்றுள்ளது.

குறிப்பாகத் தரம் 6 மற்றும் தரம் 10 இற் செய்முறை சார்ந்த கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பெற்றுள்ளது. கதை சொல்லுதல், போலச்செய்தல், புதிதளித்தல், வகிபாகம் ஏற்று நடித்தல், வேடப் புனைவு, காட்சி விதானிப்புச் செய்தல், நாடக எழுத்துரு எழுதுதல், அதனை நாடகவாக்கம் செய்தல், கணினியின் பிரயோகம் என மாணவரின் படைப்பாற்றல் மற்றும் கற்பனை விருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் பாடத்திற் சேர்க்கப் பெற்றுள்ளன. அதேவேளை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பிற் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை இந்த ஆசிரியர் வழிகாட்டி சுட்டிக் காட்டுகிறது. ஒவ்வொரு பாடவிடய உள்ளடக்கம் தொடர்பிலும் கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு இங்கு முன்வைக்கப் பெற்றுள்ளது. அவற்றை மாணவர்களுடன் தொடர்புறுத்துவதற்கான முறையியல் தொடர்பில், சில முன்மாதிரியான உதாரணங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் பாடவிடயம், வகுப்பறைச் சூழல், மாணவரின் நிலை, பாடவேளை போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான முறையியலை வகுத்துக் கொள்ள முடியும். எவ்வாறெனினும், அவை மாணவரைச் செயற்படுபவராகவும் ஆசிரியரை வசதிசெய்யும் வகிபாகத்தைக் கொண்டிருப்பவராகவும் கொள்ளும் வகையில் அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

2015 முதல் கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்ட தேர்ச்சி மையக் கலைத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆசிரியர் வழிகாட்டியிற் சில அடிப்படையான கற்றற் பேறுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடவேளையையும் திட்டமிடும்போது, அக்கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவர்கள் எத்தகைய அடைவைக் காட்டுவார்கள் என்பதை எதிர்நோக்கிக் கற்றற் பேறுகளைகளைத் தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கணிப்பீடு மதிப்பீடுகளைச் செய்வதன் வழியாக எதிர்பார்க்கப் பெற்ற கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அவதானித்து, பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தேடலுக்கும், படைப்பூக்கத்திற்கும் வழிசமைக்கும் வகையிற் போதிய வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த தரத்திற் கற்கும் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு ஏற்ப, அமைக்கப் பெற்றுள்ள விடய உள்ளடக்கத் தினை எந்தளவிற்குக் கற்பிப்பது என்பதற்கான குறிப்புக்களாகப் பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன.

புதிதாக அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ள மற்றும் தேடிப் பெறக் கடினமான உள்ளடக்கங்கள் தொடர்பில் மாத்திரம் சற்று விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வகையிற் செய்முறை சார்ந்த கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயனுறுதி வாய்ந்ததாய் அமையும் என்று நம்புகின்றோம்.

**செயற்றிட்டக் குழு**

## உள்ளுறையாக


- பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- கலைத்திட்டக் குழு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் vi
- விரிவான பாடத்திட்டம்
  - அறிமுகம் viii-ix
  - தேசிய இலக்குகள் x
  - அடிப்படைத் தேர்ச்சிகள் xi-xii
  - பாடக் குறிக்கோள்கள் xiii
  - பாடத்திட்டம் xiv-ix
  - தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு xx
- கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் 1-84
- கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் 85-90

# அறிமுகம்

இலங்கையின் கல்வி மறுசீரமைப்புக்கான செல்நெறி தொடர்பில் 2007 குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாகும். உலகப் பரப்பில் நிகழ்ந்து வருகின்ற உலகமயமாதற் போக்குகளுக்கேற்ப மேற்கிளம்பிய, புதிய மாதிரியிலான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஒரு பண்பு மாற்றம் அந்த வருடத்தில் தான் தொடங்கியது. புதிய சகாப்தத்திற்கான கல்வி மறுசீரமைப்பு எனத் தெரியவந்த தேர்ச்சி மையக் கலைத்திட்ட நோக்கே அது. இதுவரை காலக் கல்விப் போக்கில் அறிதல் ஆட்சிக்கு மாத்திரமே வழங்கப்பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு அது முடிவுகட்ட முனைந்தது.

ஒன்றிணைந்த ஆளுமைப் பண்புகளான சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலான சிறந்த பொதுக் கல்வியை வழங்குவது முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

2015 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள, புதிய சகாப்தத்தின் இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது, தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கலைத்திட்டத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை ஆகும். ஏனெனில், அது அடுத்துவரும் இருபது ஆண்டுகளில் தேசிய, சர்வதேசிய ரீதியில் சந்திக்க நேரிடும் நோக்குகள், போக்குகள், மாறுதல்கள், சவால்கள் என்பவற்றிற்கான வருமுன் காக்கும் நடவடிக்கையாகும்.

உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்ப இலத்திரனியல் விருத்தி காரணமாக எமது அறிவுத் திரட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. பழைய அறிவின் இடத்தில் புதிய அறிவு தோன்றியுள்ளது. இந்த அறிவுப் பிரவாகம் காரணமாக, கைத்தொழில் யுகத்திலிருந்து அறிவுப் பொருளாதார யுகத்திற்கான மாறுதல் ஒன்று நடைபெற்று வருகிறது. உலக மனிதன் என்கிற கருத்தாக்கம் விருத்தியுற்று வருகிறது. எனவே, எமது மாணவர் சமூகம் படைப்பாற்றலற்ற மனன கலாசாரத்திற்குள் இருக்க முடியாது. இந்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வல்லமையுடைய தலைமுறையை உருவாக்குவது என்பது நமது பொதுக் கல்வித்துறைக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே,

1. தாமாக முன்வந்து தொடங்கும் மனப்பாங்குள்ள
2. தீர்மானங்களை எடுக்கும் திறனுடைய
3. பிரச்சினை தீர்க்கும் வல்லமையுடைய
4. முரண்பாடுகளை முகாமை செய்யும் ஆற்றலுள்ள
5. மற்றவர்களுடன் தாக்கவன்மையான தொடர்பாடலை மேற்கொள்ளத்தக்க

6. குழுவாகப் பணியாற்றும் இயலுமையும், மனமும் உள்ள
7. தலைமைதாங்கும் பண்புடைய
8. மொழியறிவுடைய

புதிய பரம்பரையொன்றை எழுச்சிபெறச் செய்யும் தேவை பொதுக் கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான, நிலைமைகள் சிந்தனைகளைக் கருத்துடன் உள்வாங்கிக் கொண்டுதான் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டம் ஆக்கப் பெற்றுள்ளது. நாடகம் மனிதர்களுடன் இரத்தமும் சதையுமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒரு அவைக்காற்றுக் கலை ஆகும். எனவே, நாடகம் மனிதரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், அபிலாஷைகள், விழுமியங்கள், திறன்கள் மற்றும் பண்பாடு என்பவற்றுடன் ஊடாடுகின்ற கலை வடிவம் ஆகின்றது. இதன் மூலமாக நல்லிணக்கம், ஒற்றுமை, பிணைப்பு, பற்றுறுதி போன்ற பண்புகளுடன் கூடிய ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களை விருத்தி செய்ய முடியும். ஆகவே, நாடகமும் அரங்கியலும் தேசிய இலக்குகளை அடைவதற்கான மிகநெருக்கமான பாடமாகவும் உள்ளது.

புதிய சகாப்தத்திற்கான இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது, கலைத்திட்டச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் செய்யப்பெறவில்லை. அதேவேளை, பாடத்திட்டத்தில் கற்றற் பேறுகள் என்கிற விடயம் இணைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவரிடம் எதிர்பார்க்கப்பெறுகின்ற அடைவைச் சுட்டுவனவாக கற்றற் பேறுகள் அமைகின்றன. கணிப்பீடு மதிப்பீடுகள் மூலம் கற்றற் பேறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த அடித்தளத்தில் நின்றே நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வியானது மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்கிற வகையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டமானது எழுத்துருவாக்கம், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, காட்சி விதானிப்பு போன்ற கலை நுட்ப விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது, இதன் ஊடாகத் தொழிற் தேர்ச்சியும், படைப்பாக்க ஆளுமையும் உடையவர்களாக மாணவர்கள் உருவாக முடியும். அதனுடன் கூடவே நாடகக் கலைஞர்களாக , மானுட நேயமிக்கவர்களாக, அழகியல் நயப்புணர்வுடையவர்களாக அவர்கள் மிளிர முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தவிர, பிரதான பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கான முறையாகவும், அவதானம், கருத்தூன்றல், தர்க்க சிந்தனை என்பவற்றிற்கான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யக் கூடிய துறையாகவும் நாடகம் வளர்ந்து வரும் பின்னணியில் நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு வழியாக மற்றப் பாடங்களையும் வினைத்திறனுடன் கற்க வசதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கு கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)***

# அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## I. தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

## II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

## III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.



**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தலும்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)**

## பாடக் குறிக்கோள்கள்

- அரங்கக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- படைப்பாக்கத் திறனைப் பெறுதல்.
- அழகியல் நயப்புடையவராதல்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கைக் கொண்டிருத்தல்.
- பண்பாட்டின் பாற் பற்றுறுதியும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கும் உள்ளவராதல்.
- தன்னாற்றலை இனங்கண்டு, செயல்முனைப்புடன் செயலாற்றுதல்.
- சமநிலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதல்.
- தலைமைத்துவப் பண்பை உடையவராதல்.
- தன்னைச் சூழவுள்ள உலகைப் புரிந்துகொண்டு, சமூகமயமாகும் பண்பைக் கொண்டிருத்தல்.
- முரண்பாடுகளை முகாமை செய்தல்.
- மனித சுபாவங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் மானுடப் பண்புகளைப் பெறுதல்.
- தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் திறன் பெறுதல்.
- நேர்மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
- சிறந்த தொடர்பாடற் திறனை கொண்டவராதல்.
- தாமாக முன்வந்து செயலாற்றும் திறன் பெறுதல்.
- இயற்கையோடு இசைந்து வாழப் பழகுதல்.
- வளர்ந்துவரும் விஞ்ஞான தொழினுட்ப சாதனங்களை அரங்கிற் கையாளும் ஆற்றலைப் பெறுதல்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உள ஆற்றுப்படுத்தலுக்கான அணுகுமுறையாக அமைதல்.
- ஏனைய பாடங்களை இலகுவாகக் கற்பதற்கான முறைமையாக அமைதல்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குதல்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல்.

# விரிவான பாடத்திட்டம்

## நாடகமும் அரங்கியலும்
## விரிவான பாடத்திட்டம் - தரம் 10

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 1.0 | நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.1 நாடகம் என்றால் என்ன என்பதனைக் கற்றுணர்ந்தவர் ஆவார். | • நாடகமும் அதன் மூலக்கூறுகளும். | • நாடகத்தின் அடிப்படையான இயல்புகளைக் கூறுவார்.<br>• நாடகம் ஏனைய கலைகளில் இருந்து வேறுபடும் விதத்தினை விவரிப்பார்.<br>• நடிகருக்குரிய பண்புகளை வெளித்தெரியச் செய்வார்.<br>• அரங்க வெளியின் இயல்புகளையும் வகைபாடுகளையும் தெரிந்தெடுப்பார்.<br>• கலைகளை வெவ்வேறு தளங்களில் நோக்கி அவற்றை ஏற்று மதிப்பார். | 01 |
| | | 1.2 நாடகத்தின் சிறப்பியல்புகளைக் கற்றறிந்தவர் ஆவார். | • நாடகத்தின் சிறப்பியல்புகள். | | 01 |
| | | 1.3 நாடகத்தை ஏனைய கலைகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கக்கூடியவர் ஆவார். | • நாடகமும் ஏனைய கலைகளும்<br>– நாடகமும் இலக்கியமும்.<br>- நாடகமும் இசையும்.<br>- நாடகமும் வானொலி நாடகமும்.<br>- நாடகமும் தொலைக்காட்சி நாடகமும். | | 03 |
| | | 1.4 நடிகருக்குரிய திறன்களையும், பண்புகளையும் கொண்டவர் ஆவார். | • நடிகருக்கான திறன்கள்.<br>• நடிகருக்கான பண்புகள். | | 02 |
| | | 1.5 அரங்க வெளி என்பதனை அறிந்து பயன்படுத்தவல்லவர் ஆவார். | • அரங்க வெளியின் இயல்புகள். | | 01 |
| | | 1.6 அரங்க வெளியின் வகைகளைக் குறிப்பிடக் கூடியவர் ஆவார். | • பல்வேறு அரங்க வெளிகள்.<br>• பாரம்பரிய நவீன அரங்க வெளிகளின் பகுதிகள் அன்றேல் பிரிவுகள். | | 02 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 2.0 | கற்பனையை நெறிப் படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப் படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார். | 2.1 படைப்பாக்கஞ் சார்ந்த பல் வேறு அசைவுகளில் ஈடுபடக் கூடியவர் ஆவார். | • இயல்பான அசைவுகள்.<br>• ஆக்கியல் அசைவுகள்.<br>• தாளத்திற்கு இசைவான அசைவுகள். | • பல்வேறு அசைவுகளில் ஈடுபட்டு அனுபவத்தினைப் பெற்றிருப்பார்.<br>• உடல், உள ஒத்திசைவை ஏற் படுத்தும் பொருட்டான பயிற்சி களில் ஈடுபடுவார்.<br>• பாத்திரம், நிகழ்ச்சி, சூழமைவு, பொருள்கள் என்பவற்றை அடிப் படையாகக் கொண்ட புதிதளித் தல்களில் ஈடுபடுவார்.<br>• சமகாலச் சிறு கதைகளை அடிப்படையாகக் கொண்டு நாடகச் சூழமைவுகளைப் படைப்பார்.<br>• நாடக எழுத்துருவொன்றுக்கான கூறுகளை விளங்கி நாடக எழுத்துருவை ஆக்கி, அதனை நாடகமாக்குவார். | 02 |
| | | 2.2 உடல்,உள ஒத்திசைவிற்காகப் பொருத்தமான படைப்பாக்கச் செயற்பாடுகளை மேற் கொள்ளக்கூடியவர் ஆவார். | • தாளங்கள், ஒத்திசைவு நயம் என்ப வற்றிற்கேற்ற படைப்பாக்கச் செயற்பாடுகள். | | 02 |
| | | 2.3 கணப்பொழுதிற் தீர்மானம் எடுக்கவும் உடனடியாகச் செயற்படவும் திறன் படைத் தவர் ஆவார். | • அரங்க விளையாட்டுக்கள். | | 01 |
| | | 2.4 தனித்தும் கூட்டாகவும் ஆக்க பூர்வமான சித்திரிப்புகளில் ஈடுபடக்கூடியவர் ஆவார். | • தனி மற்றும் கூட்டுப் புதிதளித்தல்கள்.<br>• புதிதளித்தல் பற்றிய விளக்கம்.<br>- பாத்திரம்.<br>- நிகழ்ச்சி.<br>- சூழமைவு.<br>- பொருள்கள். | | 03 |
| | | 2.5 வழங்கப்பெறும் புதிதளித்தல் களில் ஈடுபடக்கூடியவர் ஆவார். | • ஆசிரியரால் விதந்துரைக்கப்பெறும் புதிதளித்தல்கள். | | 03 |
| | | 2.6 நாடகப் பொருத்தமான சூழமை வுகளைப் படைக்க வல்லவர் ஆவார். | • சமகாலச் சிறுகதைகள் நிலைப்பட்ட நாடகச் சூழமைவுகள். | | 03 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 2.7 சமகால விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாடக எழுத்துருவை ஆக்க வல்லவர் ஆவார். | • நாடக எழுத்துரு எழுதுதல். | | 02 |
| | | 2.8 பொருத்தமான அரங்க உத்திகளைக் கையாண்டு எழுத்துருவை நாடகமாக்கக் கூடியவர் ஆவார். | • நாடகவாக்கம். | | 04 |
| 3.0 | நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.1 உடல், குரல், உள ஒருமைப் பாட்டுடன் நடிக்கக் கூடியவர் ஆவார். | • உடல் தளர்நிலைக்கான பயிற்சிகள்.<br>• சுவாசப் பயிற்சிகள்.<br>• குரல் மற்றும் பேச்சுப் பயிற்சிகள்.<br>• உள ஒருமைப்பாட்டுக்கான பயிற்சிகள்.<br>• புலனுணர்வுப் பயிற்சிகள். | • உடல், குரல், உளம் சார் பயிற்சிகளில் ஈடுபடுவார்.<br>• நவீன மற்றும் மரபுவழி நாடகப் பாடல்களை உணர்வு வெளிப் பட முன்வைப்பார்.<br>• மரபுவழிக் கூத்தொன்றின் பகுதியை நிகழ்த்திக் காட்டு வார்.<br>• விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை உரிய உத்தி நுட்பங்களின் உதவியுடன் நாடகமாக்குவதற்குத் திட்டமிடுவார்.<br>• விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நாடகமாக்கு வதற்கு அவசியமான துணைக் கலை அம்சங்களைத் திட்டமிட்டு முன்வைப்பார். | 04 |
| | | 3.2 நாடகப் பாடல்களை உணர்வு வெளிப்படப் பாடக்கூடியவர் ஆவார். | • மரபுவழி, நவீன நாடகப் பாடல்கள். | | 01 |
| | | 3.3 தெரிந்தெடுக்கப்பெற்ற மரபு வழிக் கூத்தின் கதைப் பகுதியினை ஆற்றுகை செய்யக் கூடியவர் ஆவார். | • தெரிந்தெடுக்கப்பெற்ற மரபுவழிக் கூத்து ஆற்றுகை. | | 05 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| | | 3.4 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை வாசித்து, நாடகப் பொருத்தமாகச் சொல்லாடக் கூடியவர் ஆவார். | • எழுத்துரு வாசிப்பு<br>குழந்தை ம. சண்முகலிங்கத்தின் "ஆரொடு நோகேன்"<br>• சொல்லாடுதல். | | 04 |
| | | 3.5 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவிலுள்ள பாத்திரங் களைச் சித்திரிக்கக்கூடியவர் ஆவார். | • பாத்திரச் சித்திரிப்பு. | | 02 |
| | | 3.6 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடக்கூடியவர் ஆவார். | • பாத்திர வகிபாகங்களுக்குப் பொருத்தமான அரங்கப் பொருள் களைத் திட்டமிடுதல்.<br>• வேடஉடை விதானிப்பு.<br>• ஒப்பனையைத் திட்டமிடுதல்.<br>• துணைக்கலை அம்சத் திட்டமிடுதலிற் கணினியை அறிமுகம் செய்தல். | | 08 |
| | | 3.7 பொருத்தமான அரங்க உத்தி களைக் கையாண்டு நாடகத் தை ஆற்றுகை செய்வார். | • நடிகர் தெரிவு முதல் ஆற்றுகை வரை. | | 04 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 4.0 | இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.1 இலங்கையில் நாடகக் கலையின் வரலாற்றுடன் தொடர்புடைய தொடக்க நிலைகளைப் பயின்று, அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை அடையாளப்படுத்தக்கூடியவர் ஆவார். | • நாடகப் பண்புடைய சமயச் சடங்குகளின் அரங்காற்றுகைப் பண்புகள்<br>- வேட்டைத் திருவிழா.<br>- குளுத்தி.<br>- ரட்டயகும. | • சுதேச நாடகப் பண்புடைய சடங்குகளை அறிந்து அவற்றை மதிப்பார்.<br>• சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைகளிற் காணப்பெறுகின்ற சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பண்புகளை இனங்காண்பார்.<br>• பயில்நிலையிலுள்ள பிரதேசக் கூத்துக்களையும், கூத்துக் கலைஞர்களையும் அறிந்து கூறுவதுடன், அக்கூத்துக்களின் பிரதான பண்புகளையும் முன்வைப்பார்.<br>• பயில் நிலையிலுள்ள இசை நாடக மரபின் அடிப்படையான அம்சங்களையும் இசை நாடக ஆளுமையிரையும் பட்டியலிடுவார்.<br>• மரபுவழி நாடகங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றைப் பேணுவதில் விருப்பம் காட்டுவார். | 03 |
| | | 4.2 நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்று அம்சங்களை அறிந்தவர் ஆவார். | • பறை மேளக்கூத்து.<br>• ஒயிலாட்டம்.<br>• சொக்கறி. | | 03 |
| | | 4.3 இலங்கையில் பயில்நிலையிலுள்ள பிரதேசக் கூத்து மரபு பற்றி எடுத்துரைக்க வல்லவர் ஆவார். | • பிரதேசக் கூத்துக்கள்.<br>- மட்டக்களப்பு (வடமோடி, தென்மோடி).<br>- யாழ்ப்பாணம் (வடமோடி, தென்மோடி, காத்தவராயன்).<br>- மன்னார் (வடபாங்கு, தென்பாங்கு).<br>- முல்லைத்தீவு (கோவலன் கூத்து).<br>- மலையகம் (காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர்). | | 05 |
| | | 4.4 இலங்கையில் பயில்நிலையிலுள்ள இசை நாடக மரபின் சமூக, பண்பாட்டு ஆற்றுகை அம்சங்களை அறிந்தவர் ஆவார். | • இலங்கையில் இசை நாடகம் - சுருக்கமான அறிமுகம்.<br>• இசைநாடகத்தின் அடிப்படையான அம்சங்கள்.<br>• இசை நாடக ஆளுமைகள். | | 06 |

| | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|---|
| 5.0 | நாடகத் தோற்றப் பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராக சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நயக்கக் கூடியவர் ஆவார்.<br><br>5.2 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார். | • நயத்தல் - குழந்தை ம.சண்முகலிங்கத்தின் “ ஆரொடு நோகேன்”<br>- கதை.<br>- கரு.<br>- கதைப்பின்னல்.<br>- உப பாடம்.<br>- மோடி.<br>- பாத்திரங்கள்.<br>- மோதுகைகள்.<br>- மேடைக் குறிப்புக்கள்.<br><br>• ஆற்றுகையை நயத்தல்.<br>- நாடக மோடி.<br>- பாத்திரச் சித்திரிப்பு.<br>- நால்வகைச் சித்திரிப்புக்களின் பிரயோகம். | • விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் கரு, கதைப் பின்னல், என்பவற்றை விளங்கி எழுத்துருவை நயப்பார்.<br>• சொல்லாடல்களை உணர்ச்சி பூர்வமாக முன்வைப்பார்.<br>• விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை வெவ்வேறு நோக்குநிலைகளில் நின்று பகுப்பாய்வு செய்வார்.<br>• நாடக ஆற்றுகையை நயப்பார்.<br>• நாடகத்தில் துணைக்கலைகள் பெறும் இடத்தை ஆராய்ந்து கூறுவார். | 08<br><br>07 |

## தரம் 10இல் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை இலகுபடுத்துவதற்கான தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு

| தவணை 1 | | தவணை 2 | | தவணை 3 | | மொத்த பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாட வேளைகள் | |
| 1.1<br>1.2<br>1.3 | 01<br>01<br>03 | 1.4 | 02 | 1.5<br>1.6 | 01<br>02 | 10 |
| 2.1<br>2.2<br>2.3<br>2.4 | 02<br>02<br>01<br>03 | 2.5<br>2.6 | 03<br>03 | 2.7<br>2.8 | 02<br>04 | 20 |
| 3.1<br>3.2 | 04<br>01 | 3.3<br>3.4<br>3.5 | 05<br>04<br>02 | 3.6<br>3.7 | 08<br>04 | 28 |
| 4.1<br>4.2 | 03<br>03 | 4.3<br>4.4<br>5.1 | 05<br>06<br>04 | 5.1<br>5.2 | 04<br>07 | 32 |
| | 24 | | 34 | | 32 | 90 |

# கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

# கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம்

**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்

**தேர்ச்சி மட்டம் 1.1 :** நாடகம் என்றால் என்ன என்பதைக் கற்றுணர்ந்தவர் ஆவார்.

**செயற்பாடு 1.1 :** ''நாடகத்தின் மூலக்கூறுகளை அறிவோம்''

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- நாடகத்தின் மூலக்கூறுகளைப் பட்டியலிடுவார்.
- நாடகத்தின் மூலக்கூறுகளுக்கிடையிலான தொடர்பினை முன்வைப்பார்.
- நாடக மூலக்கூறுகள் நாடகத்தில் இணைந்து தாக்கம் விளைவிப்பதை உணர்ந்திருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- நாடகத்தின் பிரதான மூலக்கூறுகளான நடிகர், பார்ப்போர், ஆற்றுகை வெளி என்பவற்றை முனைப்புறுத்திக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுங்கள்.
- நாடகம் ஒன்றை நேரடியாகவோ அன்றேல் இறுவட்டு மூலமோ பார்க்கச் செய்து, அந்நாடக ஆற்றுகை வழியாக மேற்கிளம்பும் நாடக மூலக்கூறுகளை மாணவர்கள் இனம் கண்டு கொள்ள வழிப்படுத்துங்கள்.
- நடிகன், பார்ப்போர், ஆற்றுகை வெளி என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றுத் தாக்க வன்மையான கட்புலப் பெறுகைக்கு வழிவகுப்பதை மாணவர் உணர்ந்து கொள்ளத்தக்க வகையிற் கற்றல் - கற்பித்தல் முறையியலைத் திட்டமிட்டுங்கள்.
- தேவை கருதிக் கலந்துரையாடல்கள், குழுச் செயற்பாடுகள் என்பவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் தேவைக்கேற்பச் சுருக்கக் குறிப்புக்கள் எடுத்துக் கொள்ள வழிசமையுங்கள்.
- நாடக ஆளுமையினருடன் கலந்துரையாடல்களை நடத்தவும், நாடக நூல்களை வாசிக்கவும் வாய்ப்பளிப்பதன் மூலம் நாடக மூலக்கூறுகள் பற்றிய அறிவை விசாலிக்கச் செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- நடிகர்.
- பார்ப்போர்.
- ஆற்றுகை வெளி.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- நாடகக் காணொளி இறுவட்டு.
- நேரடி ஆற்றுகை.
- நாடக மூலக்கூறுகளை விளக்கும் நூல்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடக மூலக்கூறுகளைப் பட்டியலிட்டுக் காட்டுவார்.
- நாடகமொன்றில் அவை இணைந்து செல்லும் பாங்கை எடுத்துரைப்பார்.
- நாடக நயப்பிற்கு நாடக மூலக்கூறுகள் துணை செய்யும் விதத்தை வெளிப்படுத்துவார்.
- நடிகன், பார்ப்போர், ஆற்றுகை வெளி என்ற பதங்களுக்கு விளக்கமளிப்பார்.
- நாடகத்தை நயப்பார்.

**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்

**தேர்ச்சி மட்டம் 1.2 :** நாடகத்தின் சிறப்பியல்புகளைக் கற்றறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 1.2 :** "நாடகத்தின் சிறப்பியல்புகளை அறிவோம்"

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- நாடகத்தின் சிறப்பியல்புகளைக் கூறுவார்.
- நாடகத்தின் சிறப்பியல்புகளை அறிந்து, அவற்றைப் பயன்படுத்துவார்.
- நாடகத்தின் சிறப்பாற் பெருமிதமுறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- கீழ்க்காணும் சிறப்பியல்புகளை அழுத்தும் வகையிற் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டைத் திட்டமிடுங்கள். நாடகமானது:
  * ஆற்றுவோர் - பார்ப்போர் நேரடித் தொடர்பைக் கொண்டிருக்கும்.
  * பெரும்பாலும் எழுத்துரு ஒன்றைக் கொண்டிருக்கும்.
  * எழுத்துரு இல்லாமலும் நாடகம் ஆற்றுகை செய்யப்படலாம்.
  * சம்பவத் தொடர் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
  * கதை பொருத்தமான சூழமைவுகள் மூலம் சித்திரிக்கப்படும்.
  * யாதாயினும் ஒரு மோடியைக் கொண்டிருக்கும்.
  * நால்வகைச் சித்திரிப்பினூடாக வெளிப்படுத்தப் பெறும்.
  * ஆற்றுகையில் அரங்க வெளியின் இயல்பு செல்வாக்குச் செலுத்தும்.
  * கணப்பிரசன்னமானது.
  * பார்ப்போரின் பதிற்குறி தாக்கம் செலுத்தும்.
  * நடிகனைப் பிரதான ஊடகமாகக் கொண்டது.
  * ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகும்.

- கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைக் கீழ்க்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.
  - நாடகமொன்றின் ஒரு பகுதியைக் காட்சிப்படுத்துங்கள் (DVD).
  - அது தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  - விதந்துரைக்கப்பெற்ற அன்றேல் பிறிதொரு நாடக எழுத்துருவின் ஒரு பகுதியை நாடக வாசிப்புச் செய்யுங்கள் (Readers Theatre).
  - அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - நாடகத்தின் சிறப்பியல்புகளை ஒருவர் ஒன்று வீதம் பளிச்சிடு அட்டையில் (flash card) எழுதிக் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
  - ஒத்த பண்புகளை ஒன்றாகக் கூட்டங்கள் ஆக்குங்கள்.
  - அவற்றுள் விடுபட்ட பிரதான கருத்துக்களை முன்வைப்பதற்கான குறிப்புக்களை வழங்குங்கள்.
  - தொகுத்து விளக்கமளியுங்கள்.
  - கலந்துரையாடுங்கள்.
  - நாடகத்தின் சிறப்பியல்புகளைப் பட்டியற்படுத்திக் குறிப்பெடுப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
  - மேற்குறிப்பிடப்பெற்ற சிறப்பியல்புகள் தவிர்ந்த வேறும் பல சிறப்பியல்புகள் காணப் பெற முடியும் என்பதை மனதில் இருத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- மோடி.
- நால்வகைச் சித்திரிப்பு.
- கணப்பிரசன்னம்.
- பதிற்குறி.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இறுவட்டுக்கள்.
- எழுத்துரு - ஆரொடு நோகேன்.
- A4 தாள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடகத்தின் சிறப்பியல்புகளைப் பட்டியலிடுவார்.
- நாடகச் சிறப்பியல்புகளை இனங்கண்டு கூறுவார்.
- நாடகத்தின் நயப்பிற்கு அவை துணை செய்யும் விதத்தை முன்வைப்பார்.
- நாடகச் சிறப்பியல்புகள் மேலெழும் வகையில் நாடகத்தைத் தயாரிக்க ஆவல் கொள்வார்.
- கூட்டுணர்வை வெளிப்படுத்துவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- அரங்க ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்.
- அரங்கியல் - பேராசிரியர். சி. மௌனகுரு.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.



**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** நாடகத்தை ஏனைய கலைகளில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 1.3 :** "நாடகத்தினை ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு நோக்குவோம்"

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- நாடகக் கலையின் தனித்துவத்தைப் புரிந்து கொண்டிருப்பார்
- நாடகக் கலையை ஏனைய கலைகளுடன் ஒப்பு நோக்கிப் பார்ப்பார்.
- நாடகக் கலையுடன் ஏனைய கலைகள் தொடர்புறுமாற்றை விவரிப்பார்.
- மேடைக் கலையாகிய நாடகம் தொழினுட்பக் கலைகளில் இருந்து வேறுபடும் முறையை அறிந்திருப்பார்.
- கலைகளை வெவ்வேறு தளங்களில் நோக்கி, அவற்றினை ஏற்று மதிப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

- மேடை நாடகக் கலையானது இலக்கியம், இசை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றில் இருந்து வேறுபட்டது என்பதனை அறிதலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
  - * நாடகக் கலையின் தனித்துவம்.
  - * நாடகத்திற்கும் ஏனைய கலைகளுக்குமான வேறுபாடுகள்.
  - * இலக்கியமும் - நாடகமும்.
  - * இசையும் - நாடகமும்.
  - * வானொலி நாடகமும் - நாடகமும்.
  - * தொலைக்காட்சி நாடகமும் - நாடகமும்.
- விடய உள்ளடக்கத்திற்கு ஏற்பக் கற்றல் - கற்பித்தற் திட்டமிடலைச் செய்யுங்கள்.
- நாடகக் கலையின் தனித்துவமானதும், சிறப்பானதுமான இயல்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள். உதாரணமாகக் கீழ்வரும் விடயங்களை முன்னிறுத்துங்கள்.
  - * நாடகம், மனித மோதல்களை வெளிப்படுத்தும் கலைவடிவம்.
  - * பாத்திரங்களின் நேரடி உரையாடல் மூலமும் செயல்களின் மூலமும் நகர்த்தப்படுவது.
  - * உடனடியாக, பார்ப்பவரை எதிர்கொள்வதுடன் பதிற்குறிகளைத் தோற்றுவிப்பது.
  - * நாடகத்தில் பல கலைகளும் சங்கமிக்கின்றன.
  - * நாடகம் கூட்டு முயற்சியினால் உருவாவது.
  - * 'சுவைபட வந்தனவெல்லாம் ஓரிடத்தே வந்தனவாகத் தொகுத்துக் கூறும்' பண்புக்குரியது.
- மாணவர்களை 5 குழுக்களாக வகைப்படுத்துங்கள். மேடை நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம், இலக்கியம், இசை என ஒவ்வொரு தலைப்பினையும் ஒவ்வொரு குழுவுக்கு வழங்குங்கள். இக்கலைகள் பற்றிய தகவல்களை அன்றேல் கட்டுரைகளைத் தேடி வழங்குங்கள். ஒவ்வொரு குழுவும் தத்தமக்குத் தரப்பட்ட விடயங்களை நன்கு அறிந்து பட்டிமன்றமொன்றுக்குத் தயாராக வருமாறு அறிவுறுத்துங்கள்.
- அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குத் தரப்பட்ட கலைகள் தொடர்பாக வாதிடவும், விளக்கமளிக்கவும் சந்தர்ப்பமளியுங்கள்.
- இப்பட்டிமன்றச் செயற்பாட்டிற்கு நடுவராக இருந்து அவதானித்துத் தீர்ப்பு வழங்குங்கள்.

- நிறைவில், நாடகக் கலையின் சிறப்பினை வலியுறுத்துவதுடன் அது ஏனைய கலைகளில் இருந்து வேறுபடுமாற்றினைத் தெளிவுபடுத்திக் குறிப்பு எழுதச் செய்யுங்கள்.
- ஏனைய கலைகளில் இருந்து நாடகம் வேறுபடுமாற்றினையும், அதனூடாக நாடகக் கலையின் தனித்துவத்தினையும் உணர்ந்து கொள்ளச் செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- இலக்கியம்.
- இசை.
- வானொலி நாடகம்.
- தொலைக்காட்சி நாடகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- சிறந்த நாடகமாகக் கொள்ளப்படத்தக்க நாடகமொன்றின் காணொளி இறுவட்டு.
- இறுவட்டினைப் பிரயோகம் செய்யும் கருவி.
- ஏனைய கலைவடிவங்கள் பற்றிய தகவற் குறிப்புக்கள், கட்டுரைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடகக் கலைக்குரிய தனித்துவமான இயல்புகளை எடுத்துரைப்பார்.
- நாடகக் கலை ஏனைய கலைகளில் இருந்து வேறுபடுவதனை நிரூபணம் செய்வார்.
- இலக்கியம், இசை, வானொலி, தொலைக்காட்சி நாடகங்களின் தனித்துவங்களை இனங் காட்டுவார்.
- மேடை நாடகக் கலையின் மீதான அபிமானத்தினை அதிகரிப்பார்.
- பொருத்தமான ஊடகங்களைப் பொருத்தமான விடயங்களுக்குப் பயன்படுத்தும் அறிவுத் தெளிவைப் பெறுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- வானொலி நாடகம் எழுதுவதெப்படி - அராலியூர் சுந்தரம்பிள்ளை.
- அரங்கவியல் - சக்திப் பெருமாள்.
- தொலைக்காட்சியும் நிகழ்ச்சிகளும் - அருணா செல்லத்துரை.



**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்

**தேர்ச்சி மட்டம் 1.4 :** நடிகருக்குரிய திறன்களையும் பண்புகளையும் அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 1.4 :** ''நடிகருக்கான திறன்களையும் பண்புகளையும் அறிந்து கொள்வோம்''

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- நடிப்பதற்குரிய திறன்களை அறிந்திருப்பார்.
- நடிகர் தம்மைப் பயிற்சியினால் வளர்த்துக் கொள்ள வேண்டு மென்பதை உணர்ந்திருப்பார்.
- நடிகருக்குரிய பண்புகளை வெளித்தெரியச் செய்வார்.
- உடல், குரல், உளச் செயற்பாடுகளால் நடிப்பதற்குத் தயாராவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- நடிப்பு என்பது உடல், உளம், குரல் இணைந்த ஒத்திசைவு மூலம் வெளிக்கொணரப்படும்.
- பல்வேறுபட்ட நடிப்பு முறைகள் காணப்படுகின்றன. பொதுவாக இயல்பான நடிப்பு, மோடியுற்ற நடிப்பு என்ற வகைப்பாட்டுக்குள் உள்ளடக்கலாம்.
- நடிப்பிற்கு ஆர்வம், உள்ளார்ந்த ஆற்றல், மனஉறுதி, பயிற்சி ஆகிய அனைத்தும் அவசியம் ஆகும்.
- நடிகன் ஐம்புலன்களினாற் பெறும் அனுபவங்களைப் பிறிதொருவருக்கு அன்றேல் பலருக்கு விளங்கத்தக்க வகையில் நடிப்பின் மூலம் எடுத்துக் காட்டலாம்.
- நடிகன் சகல அனுபவங்களையும் நிஜவாழ்வின் அனுபவங்களில் இருந்தும், தமது கற்பனையைப் பயன்படுத்தியும் படைப்பாக்கம் செய்யலாம்.
- நடிகரிடம் பின்வரும் பண்புகளை விருத்தி செய்வதற்குப் பயிற்சி அவசியமானதாகும்.
  - ஒற்றுமையாகச் செயற்படும் மனப்பாங்கு.
  - ஏற்றுக்கொள்ளும் தன்மை.
  - ஆர்வம்.
- நடிகர் பிறிதொரு ஆளாக ஆள்மயமாதற்கு நடிகருக்குத் திறன்களும் பண்புகளும் அவசியமானவை.

  ஆகிய விடயங்கள் தொடர்பிற் பாடத்திட்டமிடல் இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.

- மாணவர்கள் அனைவரையும் இணைத்து அரங்க விளையாட்டு ஒன்றினை விளையாட விடுங்கள்.
- அரங்க விளையாட்டு ஒன்றைச் செய்வதன் ஊடாகக் கிடைக்கும் திறன்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மீண்டும் பல்வேறு உணர்வுகள் வெளிப்படத்தக்க அரங்க விளையாட்டு அன்றேல் யாதாயினுமொரு நிகழ்ச்சியினைக் கூறி அவற்றைச் செயற்படுத்த வழிப்படுத்துங்கள்.
  * உதாரணமாக, வட்டமாக எல்லோரும் நிற்றல். நடுவில் உள்ள ஒருவர் ஒரு பாத்திரத் தினைச் செய்வதற்கு வழிப்படுத்தல்.
  * அவர் அப் பாத்திரத்தினைத் தன்னுள் உள்வாங்கிச் செய்வதற்கு ஊக்கமளித்தல்.
  * அப் பாத்திரத்தினைச் செய்து கொண்டே இன்னொருவரிடம் சென்று அதனைக் கையளிக்க வேண்டும். அவர் அப் பாத்திரத்தினைப் பெற்றுக் கொண்டு வட்டத்தின் நடுவே வரும்போது வேறொரு பாத்திரமாகச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள். இவ்வாறு தொடர்ச்சியான செயன்முறைக்கு உட்படுத்தலாம்.
- பின்னர், அனைவரையும் குழுக்களாக்கி அவர்களிடம் மேற்கண்டவாறு நடிப்பதற்கான திறன்களையும், பண்புகளையும் கலந்துரையாடி அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

- அட்டவணைப்படுத்திய விடயங்களை முன்மொழியச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அனைத்துக் குழுக்களினதும் முன்மொழிதல்களின் பிற்பாடு, நடிகரின் திறன்கள், பண்புகள் பற்றிய தொகுப்பைக் கூறி, அவற்றை அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- திறன்கள்.
- பண்புகள்.
- அரங்க விளையாட்டு.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- இசைக்கருவிகள்.
- உடல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நடிப்பு என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- நடிப்பிற்குரிய திறன்களைப் பட்டியலிடுவார்.
- நடிகரிடம் விருத்தி செய்யப்பட வேண்டிய பண்புகளை அறிக்கைப்படுத்துவார்.
- நடிப்பு பற்றி அறிஞர்களின் கூற்றுக்களைத் தேடி அறிவதில் ஆர்வம் காட்டுவார்.
- நடிப்பதற்கான திறன்களையும், பண்புகளையும் வளர்த்துக் கொள்ள ஆர்வம் காட்டுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- நடிப்பிலக்கணம் - திரு. M. A. ஜீவன்
- அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர். கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்



**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்

**தேர்ச்சி மட்டம்1.5 :** அரங்க வெளி என்பதனை அறிந்து பயன்படுத்தவல்லவர் ஆவார்.

**செயற்பாடு 1.5 :** "அரங்க வெளியை அறிந்து கொள்வோம்"

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- அரங்க வெளி பற்றி அறிந்திருப்பார்.
- அரங்க வெளிக்கும், நாடக அளிக்கைக்குமான தொடர்பினை விளக்கி முன்வைப்பார்.
- அரங்க வெளியைப் பயன்படுத்தும் வல்லமையைப் பெற்றிருப்பார்.
- அரங்க வெளியின் இயல்புகளைப் புரிந்து கொண்டு நாடகத்தை நயப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- நாடகமொன்றை நடிப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடம் அரங்க வெளி எனக் கொள்ளப் படுகிறது (தற்காலிக அரங்குகளாகவோ/ மக்கள் கூடும் இடங்களாகவோ அமையலாம்).
- ஆற்றுவோரும் பார்ப்போரும் சங்கமிக்கின்றபோது அரங்க வெளியானது அர்த்தமுள்ள அழகியல் வெளியாக மாற்றமடைகின்றது.
- பண்டைய காலத்திற் தீக்குவியற் களம், யாகக்களம், பூசைக்களம் போன்ற இடங்கள் அரங்க நிகழ்விடங்களாகக் காணப்பட்டன.
- அரங்க வெளியானது உயர்த்தப்பட்டதாகவோ, சமதரையாகவோ காணப்படலாம்.
- அரங்க வெளிகள் வெவ்வேறு வடிவங்களைக் கொண்டவை (வட்டம், சதுரம், செவ்வகம், மற்றும்).
- அரங்க வெளிகளின் வடிவ மாற்றமானது ஆற்றுகை முறைமையிலும், ஆற்றுவோர் பார்ப்போர் உறவிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.
- ஒவ்வொரு அரங்க வெளிகளும் தமக்கேயுரிய தனித்துவப் பண்புகளைக் கொண்டிருப்பினும் சில பொதுவான இயல்புகளையும் கொண்டுள்ளன.
  * நடிப்பதற்குப் போதுமான இடவசதியைக் கொண்டிருத்தல்.
  * பார்ப்போர் ஆற்றுகையைப் பார்க்கத்தக்க வகையில் அமைந்திருத்தல்.
  * நாடகக் கலைஞர்களுக்குத் தேவையான குறைந்தபட்ச வசதிகளையேனும் கொண்டிருத்தல்.
- ஆற்றுகை வடிவங்களிற்கேயுரிய அரங்க வெளிகளும் உண்டு.
  * கூத்து - வட்டக்களரி.
  * சொக்கரி - களத்து மேடு.
  * கோலம் - தானாயம்பெல.
  * நாடகம - கரலிய.

மேற்குறித்த விடயப் பரப்புக்களுக்கேற்பப் பாடத்திட்டமிடல் மேற்கொள்ளப்பெறுதல் வேண்டும்.
- அரங்க வெளியின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அரங்க வெளிகளை மாணவர்கள் இனங்கண்டு கூறுவதற்கான வாய்ப்பினை வழங்குங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி அரங்கவெளி பற்றிய கருத்துக்களை முன்வந்து கூறச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான இறுவட்டுக்களின் துணையுடன் அரங்க வெளி பற்றியும், அதன் இயல்புகள் பற்றியும் மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- அரங்க வெளி.
- அழகியல் வெளி.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- அரங்க வெளிகள் சார்ந்த வரிப்படங்கள், ஒளிப்படங்கள்.
- அரங்க வெளிகளை அறியத்தக்க வீடியோ காட்சிகள்.
- பொருத்தமான நாடக ஆற்றுகைகள்.
- இணையத்தளத் தகவல்கள்.
- DVD player.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- அரங்க வெளி பற்றி விளக்கிக் கூறுவார்.
- அரங்க வெளிக்கும் நாடக அளிக்கைக்குமான தொடர்பினை எடுத்துரைப்பார்.
- அரங்க வெளியைக் கையாளும் ஆற்றலைக் காட்டுவார்.
- அரங்க வெளியின் இயல்புகளைப் புரிந்து கொண்டு ஆற்றுகையை நயந்துரைப்பார்.
- அரங்க வெளியின் இயல்புகளை மனங்கொண்டு நாடகத் தயாரிப்புக்களைத் திட்டமிடுவார்.

**உசாத்துணை நூல்கள்:**

- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்.
- நாடகத் தொழில்நுணுக்கம் காட்சியமைப்பு - இரா. இராசு.
- Seven Ages of theatre - Richard Southern.
- அரங்கக் கட்டுமானம் - க. திலகநாதன்.





**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்

**தேர்ச்சி மட்டம் 1.6 :** அரங்க வெளியின் வகைகளைக் குறிப்பிடக்கூடியவராவார்.

**செயற்பாடு 1.6 :** "அரங்க வெளிகளை இனங்காண்போம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- பல்வேறு அரங்க வெளிகளையும் அறிந்திருப்பார்.
- அரங்க வெளிகளை வரைந்து விளக்குவார்.
- அரங்க வெளியின் பகுதிகளைக் குறிப்பிடுவார்.
- அரங்க வெளி பண்பாட்டினை வெளிப்படுத்தவல்லது என்பதனை உணர்ந்திருப்பார்.


**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- செவ்வக வடிவ முகப்புக் கொண்ட நாடக அரங்கு/ படச்சட்ட அரங்கு (pictur Frame Theatre).
- துருத்திய அரங்கு / முன்துருத்திய அரங்கு (Thrust stage).
- வட்டவடிவ அரங்கு (Areana theatre).
- திறந்தவெளி அரங்கு (Open air theatre).
- சூழல் அரங்கு (Environmental theatre).
- தெருவெளி மற்றும் படைப்பாக்க அரங்கு (street and creative theatre).
- அரங்க வெளியின் வடிவமைப்புக் கருதி அவை; திறந்தவெளி நிகழ்விடங்கள் (Out door), உள்ளக நிகழ்விடங்கள் (In door) என இருவகையாக வகைப்படுத்தப்படுகின்றன.
- அரங்க வெளிகளின் வடிவ மாற்றம் ஆற்றுவோர் - பார்ப்போர் அமர்வு நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.
  * வட்டவடிவம் - சுற்றி வரப் பார்ப்போரைக் கொண்டது (வட்டக்களரி).
  * அரைவட்டம் - மூன்று பக்கப் பார்ப்போரைக் கொண்டது (ரோம அரங்கு, கரலிய).
  * படச்சட்ட அரங்கு - ஒரு பக்கப் பார்ப்போரைக் கொண்டது.

- அரங்க வெளியின் வடிவ மாற்றம் ஆற்றுகையிலும் ஆற்றுவோர், பார்ப்போர் உறவுநிலையிலும் தாக்கத்தைச் செலுத்தும்.
- நவீன அரங்க நிகழ்விடமாகக் கொள்ளப்படும் புறசீனிய அரங்கானது; படச்சட்ட மேடை, வில்வளைவு மேடை என அழைக்கப்படுகின்றது.

- படச்சட்ட மேடையானது பல்வேறு உட்கட்டுமானங்களைக் கொண்டிருக்கும்.
  * தீயணைப்புத் திரை (Fire Curtain).
  * காட்சித் திரை (Act Curtain).
  * தொங்கு திரைகள் (Borders).
  * பக்கவாட்டுத் திரைகள் (Wings).
  * விண்திரை (Cyclorama).
  * முன்மேடை (Apron).
  * இசைக் கலைஞர்கள் தளம் (Orchestrapit).

- நெறியாளர், நடிகர், ஒளிவிதானிப்பாளர், காட்சி விதானிப்பாளர் ஆகிய அரங்கக் கலைஞர்கள் தமது பணிகளை இலகுபடுத்துவதற்காகப் படச்சட்ட மேடையானது பல்வேறு பகுப்புக்களுக் குட்படுத்தப் பெறுகின்றது.




- ஆயினும் அரங்கக் கலைஞர்கள் தமது தேவை கருதி இதனை மேலும் பல பகுதிகளாக வகுத்துக் கொள்ள முடியும்.
- தேவைக்கேற்ப அரங்கின் வடிவமைப்பை மாற்றியமைக்கக்கூடிய, இடத்துக்கிடம் காவிச் செல்லத்தக்க அரங்குகளும் உண்டு.
- இந்த விவரங்களை அணுகும் வகையிற் பாடத்திட்டமிடல் மேற்கொள்ளப்பெற வேண்டும்.

**செயற்பாடு - I**

- வகுப்பறையில் மாணவர்களைச் சுயாதீனமாக உலாவ விடுங்கள்.
- ஆசிரியர் கூறுகின்ற வடிவத்தினை (வட்டம், முக்கோணம், சதுரம், மற்றும்) மாணவர் அனைவரும் இணைந்து உடலினால் உருவாக்க வழிப்படுத்துங்கள். இதனை ஓர் விளையாட்டாக்குங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி வெவ்வேறுபட்ட அரங்கப் படங்களைக் குழுவுக்கு ஒன்றாக வழங்குங்கள்.
- மாணவர் அவ் அரங்கப் படங்களை வரைந்து, காட்சிப்படுத்தி, அது பற்றி விளக்கமளிக்க வாய்ப்பளியுங்கள்.
- பொருத்தமான இறுவட்டுக்களைப் பயன்படுத்தி அரங்கவெளிகளின் வகைப்பாடுகளை, பகுப்பு நிலைகளை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துங்கள்.

**செயற்பாடு - II**

- மாணவர்களை இரண்டு குழுக்களாக்குங்கள்.
- படச்சட்டமேடை, வட்டக்களரி ஆகிய அரங்க வெளிகளின் படங்களைக் குழுவுக்கு ஒன்றாக வழங்குங்கள்.
- தமக்கு வழங்கப்பட்ட ஆற்றுகை வெளியினை அடிப்படையாகக் கொண்டு யாதாயினுமொரு நிகழ்வை நிகழ்த்திக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் வேறுபட்ட ஆற்றுகை வெளி சார்ந்த அனுபவங்களைக் கலந்துரையாட லூடாகக் கேட்டறியுங்கள்.
- பொருத்தமான நாடக இறுவட்டுக்களைத் துணையாகக் கொண்டு ஆற்றுகை வெளியிற் பார்ப்போர், ஆற்றுவோர் உறவுநிலை, அரங்க வடிவமும் அதன் அளிக்கை முறைமையும் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- படச்சட்ட அரங்கு.
- துருத்திய அரங்கு.
- சூழல் அரங்கு.
- விண்திரை / வான்திரை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- அரங்க வெளியின் வரைபடங்கள், ஒளிப்படங்கள்.
- நாடக இறுவட்டுக்கள்.
- டிமைன் தாள்.
- பெயின்ரிங்ஸ்ரிக்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- அரங்க வெளிகளின் வகைகளை அறிந்து கூறுவார்.
- அரங்க வெளிகளை வரைந்து விளக்கும் வல்லமையைக் காட்டுவார்.
- அரங்க வெளிகளின் பகுதிகளை இனங்காண்பார்.
- அரங்க வெளிகளின் படங்களைச் சேகரிக்கும் ஆர்வத்தை வளர்ப்பார்.
- ஆற்றுகையில் அரங்க வெளியின் செல்வாக்கை விளங்கிக் கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**

- அரங்கவியல் - முனைவர் சக்திப்பெருமாள்.
- நாடகத் தொழில்நுணுக்கம் காட்சியமைப்பு - இரா. இராசு.
- Empty Space - Peter Brook.
- Seven Ages of theatre - Richard Southern.
- அரங்கக் கட்டுமானம் - க. திலகநாதன்.





**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1 :** படைப்பாக்கம் சார்ந்த பல்வேறு அசைவுகளில் ஈடுபடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 2.1 :** ''படைப்பாக்க அசைவுகளில் ஈடுபடுவோம்''

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- அசைவுகளில் ஈடுபட்டு அனுபவத்தினைப் பெற்றிருப்பார்
- படைப்பாக்கம் சார்ந்த பல்வேறு அசைவுகள் பற்றியும் அறிந் திருப்பார்.
- இயல்பான அசைவுகளுக்கும், ஆக்கியல் அசைவுகளுக்குமிடை யிலான வேறுபாட்டினை உணர்ந்திருப்பார்.
- அசைவுகளுக்கும், தாளத்திற்குமிடையிலான தொடர்பை அனுப வங்கள் ஊடாகப் பெற்றிருப்பார்.
- தாளப் பிரமாணங்களுக்கேற்ப அசைவுக் கோலங்களை மேற் கொள்வார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பல்வேறு வகையான அசைவுகள் உள்ளன.
  (இயல்பான அசைவு, ஆக்கியல் அசைவு, தாளத்திற்கு அமைவான அசைவு).
- அன்றாட வாழ்விற் செய்யப்படும் அசைவுகள் இயல்பான அசைவுகள் எனவும், அவற்றைக் கற்பனைத் திறனுடன் இணைத்து வெளிப்படுத்தல் ஆக்கியல் அசைவு எனவும் விளங்கிக் கொள்ளல்.
- இயல்பான அசைவிற்கும் ஆக்கியல் அசைவிற்கும் வேறுபாடு உண்டு என்பதை விளங்கி கொள்ளல்.
- உடலைப் பயன்படுத்திப் பல்வேறுபட்ட தாளத்திற்கு அமைவான கோலங்களையும், தளவுருக்களையும் கூட்டாகப் படைக்க முடியும்.
- ஒரு அசைவினை வெவ்வேறு விதமாக மேற்கொள்ளும்போது நபர்களுக்கேற்ப அசைவுகள் வேறுபடும் இயல்பு கொண்டவை.
- அசைவுகளின் போது உடல், நெகிழ்ச்சித் தன்மை கொண்டதாக இருத்தல் சிறந்தது.
  போன்ற விடயங்களை முதன்மைப்படுத்திப் பாடத்தைத் திட்டமிடுங்கள்.
- மாணவர்கள் அனைவரையும் சுயாதீனமாக நடப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அனைவரையும் ஒருவரோடு ஒருவர் மோதாவண்ணம் நடக்க வழிப்படுத்துங்கள்.
- இயல்பான அசைவிற்கான சில செயற்பாடுகளை ஆசிரியர் அறிவுறுத்தலாம்.
- செயற்பாடுகளினூடே அனைவரையும் வட்டமாக நிற்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- வட்டத்தில் நிற்பவர்களுக்கு எண் சூட்டி, ''கைதட்டி எண் சொல்லுதல்'' எனும் அரங்க விளையாட்டினை விளையாட வழிப்படுத்துங்கள்.
- இவ்விளையாட்டினைச் சுயாதீனமாக அசைந்து செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- கைதட்டுவதை நிறுத்தி, கைகளைத் தாளத்திற்கு அசைய விடுவதனூடாக ஆட்டத்தினைக் கட்டியெழுப்புங்கள் (பொருத்தமான இசைக்கருவியைக் கையாளலாம்).
- அனைவரையும் ஆட்டத்தின் ஊடே குழுக்களாவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் பல்வேறுபட்ட படிமங்களை உருவாக்குவதற்கு அறிவுறுத்துங்கள்.
  உதாரணம்:- ஒற்றுமை, முரண்பாடு, மகிழ்ச்சி, பெருமிதம், மற்றும்).
- ஒரு குழுவின் படிமத்தை ஏனைய குழுவினர் பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இசைக்கும், தாளத்திற்குமேற்ப ஆட்டங்களும் அதனூடான படிமங்களும் வேறுபடுமாற்றை அறிவுறுத்துங்கள்.

- அசைவில் இருந்து ஆட்டத்திற்குச் செல்லும்போது ஒவ்வொருவரிடமும் காணப்பட்ட மன உணர்வுநிலை பற்றியும், அதனூடாக உருவாக்கப்பட்ட படிமங்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
    - ஆக்கபூர்வமான அசைவுகளுக்கு ஊடாகக் கருத்து வெளிப்பாடு, உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றைப் புலப்படுத்த முடியும்.
    - அசைவியக்கத்தின் மூலம் நாடகச் சூழமைவுகளைப் படைப்பாக்கம் செய்ய முடியும்.

**முதன்மைப் பதங்கள்:**
- படைப்பாக்கம்.
- அசைவுகள்.
- தாளப் பிரமாணம்.
- ஆக்கியல் அசைவுகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இசை மாத்திரம் உள்ள இறுவட்டு.
- இறுவட்டு இசைக்கும் கருவி.
- இசைக்கருவிகள் - றபான் / தாளம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- தாளத்திற்கு ஏற்ப உடலைக் கையாள்வார்.
- இசையை ரசிப்பதில் விருப்பம் காட்டுவார்.
- கூட்டாகச் சேர்ந்து செயலாற்றுவதில் ஈடுபாடு காட்டுவார்.
- இயல்பான அசைவு, ஆக்கியல் அசைவு மற்றும் தாளத்திற்கிசைவான அசைவுகளை இனங்காண்பார்.
- அசைவுகள் ஊடாகச் செய்யக்கூடிய அரங்க விளையாட்டுக்களைப் பட்டியற்படுத்துவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- உடல் அசைவும் உடல் மொழியும் - கலாநிதி. ஸ்ரீதரன்.
- நடிப்பிலக்கணம் - ஜீவன். M. A.





**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2 :** உடல் - உள ஒத்திசைவிற்காகப் பொருத்தமான படைப்பாக்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடியவராவார்.

**செயற்பாடு 2.2 :** “தாளங்கள், ஒத்திசைவு நயம் என்பவற்றிற்கேற்ற படைப்பாக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவோம்”

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- படைப்பாக்கச் செயற்பாடுகளை உடல் - உள ஒத்திசைவோடு மேற்கொள்வார்.
- படைப்பாக்கச் செயற்பாடுகளில் தாளங்கள், ஒத்திசைவு நயம் என்பவற்றின் முக்கியத்துவம் பற்றிய அறிவுடையவராவார்.
- தாளம் மற்றும் ஒத்திசைவுடனான படைப்பாக்கச் செயற்பாடு களை நயப்பார்.
- அத்தகைய படைப்பாக்கங்களால் மகிழ்ச்சியுறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- உடல் - உள ஒத்திசைவிற்காகப் பொருத்தமான படைப்பாக்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளல் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.
- எந்தவொரு படைப்பாக்கச் செயற்பாட்டிற்கும் உடல் - உள ஒத்திசைவு இன்றியமையாத தாகும்.
- நடிகன் சித்திரிப்புத் திறனை விருத்தி செய்துகொள்ள உடல் - உள ஒருமைப்பாடு உதவுகிறது.
- யாதேனுமொரு தாளத்தின்படி அன்றேல் சந்தத்தின்படி உடலைக் கையாள்வதற்கு உடல்- உள ஒருமைப்பாடு இன்றியமையாததாகும்.
- உடலிற்கும் உள்ளத்திற்குமான தொடர்பை விளங்கிக் கொள்வதற்கு உள ஒருமைப்பாடு அவசியம்.
- படைப்பாக்கச் செயற்பாட்டின் முழுமையில் உடல் - உள ஒத்திசைவின் பங்களிப்பு முக்கியமானதாகும்.
- உடல் - உள ஒத்திசைவு மூலம் கற்பனைத் திறனை விருத்தி செய்யலாம்.

**செயற்பாடு - I**
- ஒலிக்க விடப்படும் இசையைச் செவிமடுக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் தமது அனுபவங்களைத் துணையாகக் கொண்டு இசை தரும் படிமங்களைக் கற்பனை வழி மேலும் வளர்த்தெடுக்க வழிப்படுத்துங்கள்.
- மனதிற் தோன்றிய படிமங்களை மாணவர்கள் கூட்டாக இணைந்து நிகழ்த்திக் காட்ட வழிப்படுத்துங்கள்.
- பயிற்சியின்போது பெற்ற அனுபவங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**செயற்பாடு - II**
- ஒலிக்க விடப்படும் இசையைச் செவிமடுத்தவாறு மாணவர்களை வட்டமாக நிற்க வழிப் படுத்துங்கள்.
- வட்டத்தினுள்ளே மாணவர் ஒருவரை முன்வரச் செய்து இசைக்குப் பொருத்தமான வகையில் விரும்பிய யாதாயினுமொரு ஆடலை ஆட வாய்ப்பளியுங்கள்.

- தொடர்ந்து வட்டத்தின் உள்ளே நின்று ஆடுகின்ற மாணவர், வட்டத்தில் நிற்கும் பிறிதொரு மாணவரை வட்டத்தினுள்ளே அழைத்து, ஆடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி விட்டு வட்டத்தில் நிற்கும் ஏனைய மாணவர்களுடன் இணைந்து கொள்வார். வட்டத்தினுள்ளே நிற்கும் மாணவர் பிறிதொரு ஆடலை ஆடுவார்.
- இதைப்போன்று அனைத்து மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கிப் புதிய புதிய ஆடல்களை ஆட வழிப்படுத்துங்கள்.
- உடல் அசைவுகளுக்கு ஏற்ப, உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்களையும் உள நிலைக்கு ஏற்ப உடலில் ஏற்படும் மாற்றங்களையும் அவதானிக்கச் செய்து கலந்துரையாடுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- ஒத்திசைவு நயம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இறுவட்டுக்கள்.
- றபான், மிருதங்கம்.

### கணிப்பீடும் மதிப்பீடும்:
- உடல் - உள ஒத்திசைவு பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பார்.
- படைப்பாக்கச் செயற்பாட்டில் உடல் - உள ஒத்திசைவின் முக்கியத்துவம் பற்றிக் கருத்துத் தெரிவிப்பார்.
- உடல் - உள ஒத்திசைவைப் படைப்பாக்கச் செயற்பாடுகளிற் கையாளுகின்ற நுட்பத்தை விளங்கிக் கொள்வார்.
- உடல் - உள ஒத்திசைவினூடாகச் சந்தப்பாங்கான அசைவைக் கட்டியெழுப்புவார்.
- படைப்பாக்கச் செயற்பாட்டில் ஈடுபடும் பழக்கத்தைப் பெற்றிருப்பார்.

### உசாத்துணை நூல்கள்:
- நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர். சே. இராமானுஜம்.
- உடல் - குரல் ஒருங்கிணைவு - பேராசிரியர். சே. இராமானுஜம்.



**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3 :** கணப்பொழுதிற் தீர்மானம் எடுக்கவும் உடனடியாகச் செயற்படவும் திறன் படைத்தவர் ஆவார்.

**செயற்பாடு 2.3 :** "அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவோம்"

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- அரங்க விளையாட்டுக்களை விளையாடுவார்.
- அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதன் ஊடாகக் கணப் பொழுதிற் தீர்மானம் எடுக்கவும் உடனடியாகச் செயற்படவுமான பழக்கத்தைப் பெற்றிருப்பார்.
- அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவதனூடாகப் புதிய படைப் பாக்கங்களைக் கண்டுபிடிப்பார்.
- அரங்க விளையாட்டுக்களில் விருப்பமுடையவராவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
"கணப்பொழுதிற் தீர்மானம் எடுக்கும் ஆற்றலையும் கவனமாகச் செயற்படும் தன்மையையும் வளர்த்துக் கொள்வதற்கு அரங்க விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறும் விதத்தை நோக்குவதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்"

- விளையாட்டுக்கள் பல்வகைத்தன்மை கொண்டு காணப்படுகின்றன.
  (கிராமிய விளையாட்டுக்கள், வழி விளையாட்டுக்கள், அரங்க விளையாட்டுக்கள்).
- அரங்க விளையாட்டுக்கள் வகுப்பறையிலும் பொது மண்டபங்களிலும் விளையாடக் கூடியவை.
- அரங்க விளையாட்டு என்பது ஒருவரை நடிப்பிற்குத் தயராக்குவதற்கு அவரது உடல், குரல், உள்ளம் என்பவற்றிற்கு வழங்கப்படும் பயிற்சி எனலாம்.
- அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் உடல் உளச் சமநிலை, உற்சாகம், தொடர்பாடற் திறன், கருத்தூன்றல், ஒற்றுமை, புரிந்துணர்வு போன்ற குண இயல்புகளைக் கட்டியெழுப்ப முடியும்.
- அரங்க விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் புதிய படைப்பாக்கத்தினைச் செய்யக் கூடியவராகவும் தேவைக்கேற்ப உடனடியாகத் தீர்மானம் எடுக்கக்கூடியவராகவும் இருப்பார்.
- நடிகனின் நடிப்பாற்றலை விருத்தி செய்வதற்கு அரங்க விளையாட்டுக்கள் துணை நிற்கின்றன.
  - கற்பனையாற்றல்.
  - அவதானம்.
  - கருத்தூன்றல்.
  - தொடர்பாடற் திறன்.
  - கிரகித்தல்.
  - மனனம்.
  - உடனடித் தீர்மானம்.
- மாணவர்கள் அனைவரையும் இணைத்து, ஆடும் வீடும் எனும் விளையாட்டை விளையாட வழிப்படுத்துங்கள்.
  அன்றேல் கணப்பொழுதிற் தீர்மானம் எடுத்துச் செயற்படக்கூடிய வேறு விளையாட்டுக்களை விளையாட வழிப்படுத்துங்கள்.
- விளையாட்டின் பின்னர், விளையாடியதாற் பெற்ற உணர்வுகள், பயன்கள், பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- விளையாட்டின் போதான தமது செயற்பாடுகளை மீள நினைவுபடுத்துங்கள்.

- இவ்விளையாட்டின்போது கவனக் குறைவாக இருந்த சந்தர்ப்பங்கள், உன்னிப்பாகச் செவி மடுத்த சந்தர்ப்பங்கள், தொடர்ந்து விளையாடுவதற்காகக் கையாண்ட உத்திகள் போன்றவற்றைப் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் அனைவரையும் வட்டமாக நிற்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அனைவருக்கும் 7 up எனும் அரங்க விளையாட்டினை விளையாடும் முறை பற்றி விளக்கம் அளியுங்கள்.
- அரங்க விளையாட்டில் ஈடுபடும்போது கவனமாக ஈடுபட வழிப்படுத்துங்கள்.
- கவனமாக இருப்போர் நீண்டநேரம் விளையாட்டில் நிலைத்திருப்பதையும் கவனக் குறைவாக விளையாட்டில் ஈடுபடுவோர் விரைவாக வெளியேறி விடுவார்கள் என்பதையும் தெளிவு படுத்துங்கள்.
- உன்னிப்பாகச் செவிமடுத்தல், கணப்பொழுதிற் தீர்மானம் எடுத்துத் துரிதமாகச் செயற் படுத்துதல் என்பவற்றிற்கு ஊக்கமளியுங்கள்.
- இவ்விளையாட்டின்போது இறுதி வரை நிற்பவரையும் ஆரம்பத்தில் வெளியேறியவரையும் தத்தமது அனுபவங்களைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- விளையாட்டுக்களை விளையாடும்போது ஏற்பட்ட உடல், உள ஒருமைப்பாடு, ஒற்றுமை, புரிந்துணர்வு, தொடர்பாடற் திறன் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுங்கள்.
- அரங்க விளையாட்டுக்கள் நடிப்பிற்கு எவ்வாறு உதவுகின்றன என்பதை அறிக்கைப்படுத்த வாய்ப்பளியுங்கள்.
- எழுமாற்றாகச் சில மாணவர்களின் குறிப்புரையைக் காட்சிப்படுத்த வசதியளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- அரங்க விளையாட்டு.
- கருத்தூன்றல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- மிருதங்கம் / றபான் / டொல்கி.
- A4 தாள்.
- மாக்கர்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- அரங்க விளையாட்டின் முக்கியத்தைக் குறிப்பிடுவார்.
- கவனமாகச் செவிமடுப்பதில் விருப்புக் காட்டுவார்.
- கணப்பொழுதிற் தீர்மானம் எடுக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- அரங்க விளையாட்டுக்களை அட்டவணைப்படுத்துவார்.
- வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கும் அன்றேல் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை அடைந்திருப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**
- அரங்க விளையாட்டுக்கள் - தொம்சன்.
- சிறுவர் அரங்கு - முத்து இராதாகிருஸ்ணன்.

**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4 :** தனித்தும் கூட்டாகவும் ஆக்கபூர்வமான சித்திரிப்புக்களில் ஈடுபடக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 2.4 :** ''விருப்பமானவற்றைப் புதிதளிப்போம்''

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- புதிதளித்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதனூடாகப் படைப்பு அனுபவத்தினைப் பெற்றிருப்பார்.
- முன்னாயத்தமின்றிய புதிதளித்தற் செயற்பாடுகள் மூலம் உடனடியாக இயங்குதலுக்குரிய வினைத்திறனை வெளித்தெரியச் செய்வார்.
- பாத்திரம், நிகழ்ச்சி, சூழமைவு, பொருள்கள் என்பவற்றைப் பயன்படுத்திப் புதிதளித்தல்களைக் கண்டுபிடிப்பார்.
- புதிதளித்தல்களில் ஈடுபடும்போது தம்மைத்தாம் அறியும் சுயவிளக்கம் பெற்றிருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- நாம் வாழும் சூழலிற் பலவிதமான பாத்திரங்கள், நிகழ்ச்சிகள், சூழமைவுகள், பொருள்கள் காணக் கிடைக்கின்றன.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்தி அவற்றைப் புதிதளிக்க முடியும்.
- பாத்திரம், நிகழ்ச்சி, சூழமைவு, பொருள்கள் என்பவற்றை முன்னாயத்தமின்றிச் சித்திரித்தலே புதிதளித்தல் ஆகும்.
- இதனைக் கூட்டாகவும் தனித்தும் மேற்கொள்ளலாம்.
- ஆக்கபூர்வமான சித்திரிப்பு அனுபவங்கள் நாடகத் தயாரிப்பிற்கும் நாடக எழுத்துரு எழுதுவதற்கும் உதவும்.

  ஆகிய விவரங்கள் மேற்கிளம்பும் வகையிற் பாடத்தைத் திட்டமிடுங்கள்.
- புதிதளித்தல்களின் தன்மைக்கு ஏற்ப மாணவரைத் தனியாகவோ, குழுவாகவோ செயற்பட வழிப்படுத்துங்கள்.
- கீழ்க் கண்டவாறான பல்வேறு தலைப்புக்களை மாணவர்களே திட்டமிட்டு ஆயத்தம் செய்யச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  - (1) சூழமைவு உ+ம்:- வீதியோட்ட / மரதன் ஓட்ட ஆரம்பம்.
  - (2) பாத்திரம் உ+ம்:- வெளிநாட்டுப் பயணத்திற்காகப் பணம் செலுத்தி ஏமாற்றப்பட்டுப் திரும்பியவர்.
  - (3) நிகழ்ச்சி உ+ம்:- தேசிய ரீதியில் வெற்றி பெறுதல்.
  - (4) பொருள் உ+ம்:- சூழலிற் கிடைக்கும் பொருள் (தண்ணீர்ப் போத்தல், தும்புத்தடி).
- தமது தலைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தனித்தோ அன்றேற் குழுவாகவோ தத்தம் சித்திரிப்புக்களை முன்வைப்பதற்கு இடமளியுங்கள்.
- ஒவ்வொரு முன்வைப்பின் நிறைவிலும் ஏனையோரின் கருத்தை வெண்பலகை / கரும்பலகை யிற் பட்டியற்படுத்துங்கள்.
- யாதாயினும் ஒரு சித்திரிப்புத் தொடர்பாக அனைவரும் சேர்ந்து கலந்துரையாட இடமளியுங்கள்.
- கலந்துரையாடப்பெற்ற விடயங்களை உள்ளடக்கி, அனைவரும் சேர்ந்து கூட்டாக முன்வைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- புதிதளித்தல்.
- சித்திரிப்பு.
- சூழமைவு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இசைக்கருவிகள்.
- பல்வேறு பொருள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- புதிதளித்தல் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- உடனடிச் சித்திரிப்பைச் சுயாதீனமாகச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- புதிதாக யாதேனுமொன்றைக் கற்பனை செய்து படைப்பை உருவாக்குவார்.
- கூட்டாகச் செயற்படும் திறனை விருத்தி செய்து கொள்வார்.
- கணப்பொழுதிற் பொருத்தமான தீர்மானங்களை எடுக்கும் திறனைப் பெறுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- அரங்கவியல் - முனைவர் சக்திப் பெருமாள்.
- உடல் அசைவும் உடல் மொழியும் - கலாநிதி ஸ்ரீதரன்.
- நடிப்பிலக்கணம் - ஜீவன் .M.A.



**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5 :** வழங்கப்பெறும் புதிதளித்தல்களில் ஈடுபடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 2.5 :** "வழங்கப்பெறும் புதிதளித்தல்களில் ஈடுபடுவோம்"

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- வழங்கப்பெறும் புதிதளித்தல்களில் உடனடியாக ஈடுபடுவார்.
- உடனடி இயங்குதல்களினூடாகப் புத்தாக்கத் திறனை வெளிப் படுத்துவார்.
- தாம் பங்குகொள்ளும் நாடகங்களிற் புதிதளித்தலூடாகப் பெற்ற அனுபவத்தினைப் பயன்படுத்துவார்.
- கற்பனைத் திறனை வெளிக்காட்டுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- புதிதளித்தல் என்பது பற்றி முன்னர் கற்றதை நினைவுபடுத்துங்கள்.
- இதன் மூலம்,
  - கற்பனைத் திறன்.
  - தொடர்பாடற் திறன்.
  - படைப்பாற்றற் திறன்.
  - கூட்டாகச் செயற்படும் திறன்.
  - சரியான தீர்மானமெடுக்கும் திறன்.

  போன்றன விருத்தியடையும்.
- நடிப்புத் திறனை வளர்ப்பதற்கு இந்தத் திறன்கள் துணைபுரியும் என்ற விவரங்கள் மேற்கிளம்பும் வகையிற் பாடத்தைத் திட்டமிடுங்கள்.
- வழங்கப்பெறும் பொருளைப் பயன்படுத்திப் புதிதளித்தலில் ஈடுபடுவதற்கு ஒரு சில மாணவருக்கு எழுமாற்றாகச் சந்தர்ப்பமளியுங்கள்.
- புதிதளித்தலின் பயன்பாடு பற்றிக் கலந்துரையாடி அவற்றைப் பட்டியற்படுத்த வழிப் படுத்துங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- பொருத்தமான சூழமைவுகளைத் தெரிவுசெய்து, குழுவுக்கு ஒன்றாக வழங்குங்கள்.
- ஆயத்தம் செய்வதற்கு 3 நிமிட அவகாசம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவாகச் சித்திரிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சித்திரிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- கற்ற விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள இடமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- கற்பனை.
- படைப்பாற்றல்.
- தொடர்பாடற் திறன்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- சூழமைவுகள் தொடர்பான ஒளிப்படங்கள்.
- சூழமைவுகள் சார்ந்த இறுவட்டுக்கள்.
- இசைக்கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நடிப்பாற்றலை வளர்க்கப் புதிதளித்தல் உதவும் விதத்தை எடுத்துரைப்பார்.
- வழங்கப் பெறும் சூழமைவுக்குப் பொருத்தமாகக் கற்பனை செய்து படைப்பை உருவாக்குவார்.
- கூட்டாகச் செயற்படும் உணர்வை வெளிப்படுத்துவார்.
- பொருத்தமான தீர்மானங்களைக் கணப்பொழுதில் எடுக்கும் திறனைப் பெறுவார்.
- சித்திரிப்புக்காக அனுபவங்களைப் பயன்படுத்துவதன் மூலம் தம்மிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துவார்.

**உசாத்துணை நூல்கள்:**

- கவின்தமிழ் - வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள வெளியீடு - 2012.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - நாடகமும் அரங்கியலும், தரம் - 9 (2010 முதல்)





**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்2.6 :** நாடகப் பொருத்தமான சூழமைவுகளைப் படைக்கவல்லர் ஆவார்.

**செயற்பாடு 2.6 :** "சமகாலச் சிறுகதைகளில் இருந்து நாடகப் பொருத்தமான சூழமைவுகளை இனங்காண்போம்"

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- சிறுகதைகளுக்குள் நாடகச் சூழமைவுகள் இருப்பதை இனங் கண்டிருப்பார்.
- அக்கதையிலுள்ள சூழமைவுகளை நாடகமாக மாற்றக்கூடிய நுட்பங்களைக் கண்டுபிடிப்பார்.
- சூழமைவுக்குப் பொருத்தமான கதாபாத்திரங்களை உருவாக்குவார்.
- நாடகப் பாத்திரங்களை நடிப்பார்
- சிறுகதைகளை நயப்பார்

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திப் பாடத் திட்டமிடலை மேற்கொள்ளுங்கள்.
  - புனை கதைகளில் சிறுகதையுமொன்று.
  - சமகால வாழ்வினைப் பிரதிபலிக்கும் இலக்கியங்களிற் சிறுகதை முதன்மையானது.
  - சிறுகதைகளை நாடகமாக்கும் பாரம்பரியம் நீண்டகாலமாக நடைமுறையில் உள்ளது.
  - நாடகத்துக்குரிய சிந்தனை, கதை கரு, சிறுகதைகளுக்குட் சிறப்பாகக் காணப்படுகின்றது.
  - சிறுகதைக்குட் காணப்படும் நாடகச் சூழமைவுகளை இனங்காண்பதன் மூலம் அச் சிறுகதையை நாடகமாக்கலாம்.
- செழியனின் 'கதை' என்ற நாடகமாக்கப்பட்ட சிறுகதையின் காணொளியை, அன்றேல் நாடகமாக்கப்பட்ட வேறு ஏதாவது சிறுகதை ஒன்றினைப் பார்வையிடச் செய்யுங்கள். அன்றேல் நாடக எழுத்துருவாக்கப் பெற்ற சிறுகதையையும் நாடக எழுத்துருவொன்றையும் ஒப்பிட்டு நோக்கச் செய்யுங்கள்.
- சிறுகதை நாடகமாக்கப்பட்டபோது நாடக எழுத்துருவில் ஏற்படுத்தப் பெற்ற மாற்றங்களைக் கலந்துரையாடுங்கள். எடுத்துக்காட்டாக,
  - சிறுகதையில் கதை படர்க்கை நிலையிற் கூறப்பட நாடகம் 'தன்மை, முன்னிலை, படர்க்கை' என மூவிட நோக்கிலும் பாத்திரங்களின் உரையாடல்கள் மூலம் கூறப்படு கின்றது.
  - சிறுகதையில் பாத்திரங்கள், நகர்வுகள், செயல்களைக் கதாசிரியனே கூறுகின்றான். ஆனால் நாடகத்தில் பாத்திரங்களே நகருகின்றன; உரையாடுகின்றன.
  - சிறுகதையை வாசிக்கும்போது மனவெளியிலேயே காட்சிப்படிமம் உருவாகின்றது. நாடகம் வெளியில் பட்டவர்த்தனமாக உயிருடன் வெளிப்படுகின்றது.
- மாணவர்களைக் குழுவாகவோ அன்றேல் தனித்தனியாகவோ செயற்பாட்டுக்குத் தயார் செய்யுங்கள். தெரிவு செய்த சிறுகதைகள் சிலவற்றை வழங்குங்கள். (உ+ம்:- அ. செ. முருகானந்தத்தின் 'மனிதமாடு', வ. அ. இராசரெத்தினத்தின் 'தோணி', சானாவின் 'நாட்டியப் பெண்') அச் சிறுகதைகளை நன்கு விளங்கி வாசிக்கச் செய்யுங்கள்.
- வாசிக்கும்போது அச்சிறுகதைகளுக்குட் காணப்படும் நாடகச் சூழமைவுகளை இனங்காணச் செய்யுங்கள். இனங்கண்டவற்றைக் குறிப்புரையாக எழுதப் பணியுங்கள்.

- மாணவர்கள் இனங்கண்ட சூழமைவுகளை முன்வைக்கச் செய்து கலந்துரையாடுங்கள். சிறுகதைக்குட் காணப்படும் நாடகப் பாங்கான விடயங்களை வலியுறுத்துங்கள். எடுத்துக்காட்டாக,
  - சிறுகதைக்குள் கதைக் கரு, மோதல், கதைபின்னல், பாத்திரம் போன்ற விடயங்களும், தொடக்கம் - நடு - முடிவு என்ற வளர்ச்சிப்படியும் காணப்படுகின்றன. இவை நாடகங் களிலுமுள்ளன. அதனால் இவை சிறுகதையை நாடகமாக்குவதற்குத் துணைபுரிகின்றன.
  - சிறுகதையின் பாத்திரங்கள், மோதல்கள், சம்பவங்கள், பார்த்தல் நிலையில் காட்சி யாக்கக்கூடிய வலிமையுடன் காணப்படலாம். அவற்றினை இனங்காண்பதும் நாடக ஆக்கத்திற்கு அடிப்படையானது.
- மாணவர்கள் முன்வைத்த குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது தெரிவை முதன்மைப்படுத்தி நாடகச் சாத்தியமான கதைகளை மட்டும் தெரிந்தெடுங்கள்.
- மாணவர்களின் தொகைக்கு ஏற்பவும், வசதிக்கேற்பவும் குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு கதையை வழங்கி அக்கதையின் ஒரு பகுதியை நாடகமாக நடிப்பதற்குப் பணியுங்கள்.
- அவர்கள் உருவாக்கிய நாடகத்தினை அளிக்கை செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அளிக்கையில் அவதானித்த விடயங்களையும், சிறுகதைகளை நாடகமாக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களையும் கலந்துரையாடி முன்வையுங்கள்.
- இவ்வாறு தயாரிக்கப் பெற்ற நாடக அளிக்கையை மேலும் மெருகூட்டிப் பாடசாலையின் மன்ற நிகழ்ச்சி ஒன்றில் ஆற்றுகை செய்யலாம் என்பதனையும் கருத்திற் கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள்:**
- புனைகதை.
- சிறுகதை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- தெரிவு செய்யப்பட்ட சிறுகதைகள். மனித மாடு, தோணி, நாட்டியப் பெண்.
- 'கதை' நாடகக் காணொளி / வேறு காணொளி இறு வட்டுக்கள்.
- நாடகத்திற்குத் தேவையான பிற மூலகங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- சிறுகதைகளுக்குட் காணப்படும் நாடகப் பண்புகளை இனங்காண்பார்.
- சூழமைவுகளை நாடகமாக்கக்கூடிய நுட்பங்களைக் கண்டுபிடிப்பார்.
- சிறுகதையொன்றினை நாடகமாக்க முடியும் என்ற நம்பிக்கையைப் பெறுவார்.
- சிறுகதைக்கும் நாடகத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு கூறுவார்.
- சிறுகதைகளை வாசிக்கும் ஆர்வம் தூண்டப் பெறுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஈழகேசரி சிறுகதைகள்.
- ஒரு கூடைக்கொழுந்து - சிறுகதைத் தொகுதி.
- வெள்ளிப் பாதரசம் - சிறுகதைத் தொகுதி.
- படைப்புக் கலை - பேராசிரியர். மு. சுதந்திரமுத்து.

**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.7 :** சமகால விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாடக எழுத்துருவை ஆக்கவல்லவர் ஆவார்

**செயற்பாடு 2.7 :** "நாடக எழுத்துரு எழுதுவோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- சமகால விடயப் பொருள்களை மையமாகக் கொண்டு நாடக எழுத்துருவை ஆக்குவார்.
- நாடக எழுத்துருவின் கூறுகளை விளங்கியிருப்பார்.
- நாடக எழுத்துருவாக்கத்தில் ஈடுபடும் அனுபவத்தினூடாகப் படைப்பாக்கத் திறனைப் பெற்றிருப்பார்.
- நாடக எழுத்துருக்களைத் தேடி வாசிக்கும் முனைப்பைக் காட்டுவார்.
- சிறந்த நாடகாசிரியராக மாறுவதற்கான பண்புகளையும், திறன் களையும் வெளிப்படுத்துவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

- எழுத்துருவின் பண்புகளில் மோதுகை பிரதானம் ஆகும்.
- மோதுகை / முரண் பின்வரும் நிலைகளுக்கிடையில் உருவாகலாம்.
  - மனிதன் தனக்குள் முரண்படுதல்.
  - தனிமனிதன் - தனிமனிதன்.
  - தனிமனிதன் - சமூகம்.
  - சமூகம் - சமூகம்.
  - மனிதன் - சூழல்.
- கருப்பொருளை மையமாகக் கொண்டு எழுத்துரு ஆக்கப்படும்.
- எழுத்துருவினுள் ஒரு கதையோட்டம் காணப்படும் (நிகழ்ச்சித் தொடர்).
- கருப்பொருள் சம்பவங்களாற் கட்டியெழுப்பப்பட்டிருக்கும்.
- எழுத்துருவிற் பல பாத்திரங்கள் உள்ளடங்கியிருக்கும்.
- பாத்திரங்களுக்கிடையிலான சொல்லாடல் மூலம் நாடகம் வளர்த்துச் செல்லப்படும்.
- மேடையில் நடிப்பதற்குரியது எனும் நோக்கிலேயே எழுத்துரு எழுதப்படும்.
- விளக்கத்துக்காக, மேடைக்குறிப்புக்கள் உள்ளடக்கப்படுவது சிறந்தது.
- பெரும்பாலும் சமகால விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு எழுத்துரு எழுதப்படும். மேற்குறித்த விவரங்களை மையப்படுத்திப் பாடத்திட்டமிடலை மேற்கொள்ளுங்கள்.
- தாம் வாழும் சூழலில் நிலவும், தாம் அறிந்த பிரச்சினைகளை ஒவ்வொருவராகக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- அவற்றைப் பட்டியற்படுத்துங்கள்.
- குறிப்பிடப் பெற்ற பிரச்சினைகளைத் தொகுதிகளாக வகைப்படுத்திக் காட்சிப்படுத்துங்கள்.
  உதாரணம்:- குடும்பம்சார் பிரச்சினைகள்.
  - கல்விசார் பிரச்சினைகள்.
  - கட்டிளமைப் பருவப் பிரச்சினைகள்.
  - சமூகம்சார் பிரச்சினைகள்.
  - சூழலியற் பிரச்சினைகள்.
  - சமயம், ஒழுக்கலாறு பற்றிய பிரச்சினைகள்.
- வகைப்படுத்தப்பட்டுள்ளவற்றுள் இருந்து மாணவரது சூழலுக்கும், வயதுக்கும் மிகப் பொருத்தமான பிரச்சினையைத் தெரிவு செய்யுங்கள்.

- மாணவரைச் சோடியாகச் செயற்படுவதற்கு வழிப்படுத்துங்கள்.
  (TPS முறையைப் பயன்படுத்தலாம்.)
- தெரிவு செய்யப்பெற்ற ஒரு தலைப்பை அன்றேல் பிரச்சினையை அனைத்துச் சோடிகளுக்கும் வழங்குங்கள்.
- எழுத்துருவிற்கு அவசியமான பின்வரும் பண்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - கரு.
  - பாத்திரம்.
  - சொல்லாடல்.
  - கதைப்பின்னல்.
  - மோதுகை.
  - மேடை.
  - மேடைக் குறிப்புக்கள்.
- கருவுக்குப் பொருத்தமான சூழமைவுகளை உருவாக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான பாத்திரங்கள், அவற்றுக்குரிய சொல்லாடல்களைக் கட்டியெழுப்புவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு சோடியினரதும் ஒவ்வொரு பகுதிகளைப் பாத்திர உணர்வுடன் வாசிப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனையோரது கருத்துப் பரிமாற்றத்துக்கு இடமளியுங்கள்.

**குறிப்பான அறிவுறுத்தல்கள்:**
- மாணவரைச் சோடியாக்குவதற்கு விரும்பிய அணுகுமுறைகளைக் கையாளலாம்.
  T - Think - சிந்தி.
  P - Pair - சோடிசேர்.
  S - Share - பகிர்ந்து கொள்.

**முதன்மைப் பதங்கள்:**
- நாடக எழுத்துரு.
- விடயப் பொருள்.
- மோதுகை.
- சொல்லாடல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- A4 தாள்.
- நாடக எழுத்துருக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடக எழுத்துருவுக்கு மோதுகை அவசியம் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- நிகழ்ச்சிகள் தர்க்கரீதியாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பாத்திரப் பண்பின் வேறுபாட்டுக்கேற்ப, நாடகச் செயல்கள் வேறுபடும் என்பதை விளங்கிக் கொள்வார்.
- சமூகத்திற் பல்வேறு வகையான பாத்திரங்களும், பல்வேறு வகைப்பட்ட பிரச்சினைகளும் உள்ளன என்பதை இனங்காண்பார்.
- சமூக அனுபவங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- நாடக எழுத்துருக்கள்
  - ஆரொடு நோகேன்
  - நேயத்தே நின்ற நிமலம்
  - நாடக வழக்கு - கட்டுரைத் தொகுதி
  
  } குழந்தை ம. சண்முகலிங்கம்.
  - சண்ணரது கல்வியியல் அரங்கு - சி. ஜெய்சங்கர்.

**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல்சார் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு படைப்பாக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்2.8 :** பொருத்தமான அரங்க உத்திகளைக் கையாண்டு எழுத்துருவை நாடகமாக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 2.8 :** ''நாடகமொன்று நடிப்போம்''

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**
- ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நாடகமாக்கிக் காட்டுவார்.
- நாடகமாக்கும்போது அரங்கின் மூலகங்களைப் பிரயோகம் செய்வார்.
- தயாரிப்பின்போது அரங்க உத்திகளைக் கண்டுபிடிப்பார்.
- நாடகவாக்கம் செய்யும் கலையைப் பழக்கப்படுத்துவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- கீழ்க்கண்ட விவரங்களை மையப்படுத்திப் பாடத்திட்டமிடலை மேற்கொள்ளுங்கள்.
  * நாடக எழுத்துருவை நாடகமாக மாற்றுவதற்கு நெறியாளர் ஒருவர் அவசியம்.
  * நாடக எழுத்துருவை ஆற்றுகையாகத் தயாரிக்கையில் நெறியாளர் அதனை ஏனைய கலைஞர்களுடன் கூட்டாகச் சேர்ந்து திட்டமிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.
  * கருத்து நிலையிலுள்ள எழுத்துரு காட்சிநிலையாவதற்கு நடிகன் பிரதானமானவன்.
  * பொருத்தமான முறைகள் மூலம் பாத்திரத்திற்குப் பொருத்தமான நடிகர்களைத் தெரிவு செய்து கொள்ள வேண்டும்.
  * தயாரிப்புக்கான பயிற்சி, அரங்கத் துணைக் கலைகள் என்பவற்றைத் திட்டமிடுதல் வேண்டும்.
  * நாடகத்துக்காக முறையாகப் பயிற்சி பெறுதல் வேண்டும்.
  * நடிகனது உடல், குரல், அசைவு மற்றும் இசை, மேடைப்பொருள் ஒளி ஆகிய அரங்க மூலகங்கள் அனைத்தையும் விசேட விளைவுகளைத் தோற்றுவிக்கக்கூடியவாறு பயன்படுத்தக்கூடிய அரங்க நுட்பங்களைக் கையாளுதல் அவசியம்.
  * நாடகத்தை அளிக்கை செய்ய முன்பு தேவையான அனைத்தையும் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.
  * நாடக அளிக்கைக்குப் பார்ப்போர் அவசியம்.
  * நாடக அளிக்கையின் பின்னான பார்ப்போரது எதிர்வினைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- மாணவரை எண்ணிக்கைக்கேற்ப 2 அன்றேல் 3 குழுக்களாக்குங்கள்.
- ஏற்கெனவே மாணவர்களால் எழுதப்பெற்ற நாடக எழுத்துருக்களில் இருந்து குழுவுக்கு ஒன்று வீதம் தெரிவு செய்யச் சந்தர்ப்பம் அளியுங்கள் (தேர்ச்சி மட்டம் 2.7).
- ஆற்றுகை உருவாக்கத்தில் நெறியாளரின் அவசியம் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- குழுவுக்கு ஒருவர் வீதம் நெறிப்படுத்தும் ஒருவரைத் தெரிவு செய்ய வழிப்படுத்துங்கள்.
- எழுத்துருவிலுள்ள பாத்திரங்களுக்குப் பொருத்தமான நடிகரைத் தெரிவு செய்து பயிற்சி பெறுவதற்கு இடமளியுங்கள்.
- நடிகரின் ஆள்மேற்கொள்ளலுக்குத் துணைபுரியுமாறு வேடஉடை, ஒப்பனையைப் பயன் படுத்த வழிப்படுத்துங்கள்.
- சூழலிற் கிடைக்கும் வளங்களைக் கொண்டு பொருத்தமான இசை, காட்சி விதானிப்பை ஒழுங்கமைப்பதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- நடிகனது உடல், குரல், அசைவு மற்றும் ஒலி, ஒளி, இசை, மேடைப்பொருள், வேடஉடை ஒப்பனை ஆகிய அரங்க மூலகங்களையும் அரங்க உத்திகளாகக் கையாளமுடியும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

* ஒவ்வொரு குழுவாகத் தம் ஆற்றுகையை நிகழ்த்தும்போது, ஏனையோரைப் பார்போராகத் தொழிற்படுவதற்கு இடமளியுங்கள்.
* ஒவ்வொரு குழுவினது ஆற்றுகை தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றம் செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

**குறிப்பான அறிவுறுத்தல்கள்:**
* தயாரிக்கப் பெற்ற ஆற்றுகையை அரங்க நிகழ்வாகவோ, மாணவர் மன்றச் செயற் பாடாகவோ நிகழ்த்திக் காட்டலாம்.

**முதன்மைப் பதங்கள்:**
* அரங்க நுட்பம் / உத்தி.
* அரங்க மூலகம்.
* நாடகத் தயாரிப்பு.
* ஆற்றுகை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
* நாடக எழுத்துரு - ஆரொடு நோகேன்.
* இசைக்கருவிகள்.
* ஒப்பனைப் பொருள்கள்.
* நாடக ஆற்றுகை - இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
* நாடகத் தயாரிப்பொன்றுக்குத் தேவையான அடிப்படையான படிமுறைகளைக் குறிப்பிடுவார்.
* நாடகத் தயாரிப்பு என்பது ஒரு கூட்டுமுயற்சியாகும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
* நாடகத்தைப் பார்ப்போர் முன்னிலையில் அரங்க உத்திகளைக் கையாண்டு நடித்துக் காட்டுவார்.
* திட்டமிடல் முக்கியமானது என்பதை ஏற்றுக் கொள்வார்.
* கூட்டாகச் செயற்படுவதற்கு அர்ப்பணிப்பு அவசியம் என்பதை விளங்கிக் கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
* நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
* அரங்கின் பரிமாணங்கள் (தொகுப்பு நூல்) - தெ. மதுசூதனன்.



**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1 :** உடல், குரல், உள ஒருமைப்பாட்டுடன் நடிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.1.1 :** ''உடற்தளர்வுப் பயிற்சிகளில் ஈடுபடுவோம்''

**பாடவேளை :** 01

**கற்றற் பேறுகள் :**
- உடற் தளர்நிலையைப் பெற்றிருப்பார்.
- உடற் சமநிலையைப் பேணும் முறையினை அறிந்திருப்பார்.
- உடற்பயிற்சி மூலம் சிறந்த நடிப்பினை வெளிப்படுத்தலாம் என்பதை உணர்ந்திருப்பார்.
- குழுவாக இயங்கும் மனப்பக்குவத்தைக் கொண்டிருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- உடற் தளர்வுப் பயிற்சியில் ஈடுபடும்போது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
  - உடலுறுப்புகள் என்புகள், தசைகளால் இணைக்கப்பட்ட போதிலும் அவற்றைத் தளர்த்த முடியும்.
  - தலை முதல் கால் வரை பெரும்பாலான உடலுறுப்புகளைத் தளர்வாக வைத்திருக்கலாம்.
  - உடலுறுப்புக்களைத் தளர்த்தும்போது உடலில் லேசான தன்மை உணரப்படும்.
  - உடலைத் தளர்த்தலானது உள்ளத்தைத் தளர்த்துவதிலும் செல்வாக்கு செலுத்தும்.
  - உடற் தளர்த்தற் பயிற்சியில் ஈடுபடுதலானது சித்திரிப்புப் பணியை வெற்றிகரமாகச் செய்வதற்குத் துணையாக அமையும்.
  - பாத்திரமேற்று நடிக்கும்போது அப்பாத்திரங்களுக்குட் பிரவேசிப்பதற்கு உடற் தளர்வுப் பயிற்சி முக்கியமானது.
  - உடலுக்குப் பாதிப்பு ஏற்படாவண்ணம் பொருத்தமான வழிகாட்டல்களுடன் உடற் தளர்வுப் பயிற்சிகளைச் செய்தல் வேண்டும்.

  மேற்படி விடயங்களை மனதில் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.
  - மாணவர்கள் அனைவரையும் இடவசதியுள்ள ஓர் இடத்திற் தனியொரு குழுவாக ஒன்று கூட்டுங்கள்.
  - இசை உருப்படிகள் கொண்ட இசைத்தட்டுகளை இசைக்க விடுங்கள்.
  - இசையைக் கேட்டபடியே அவர்களை நடக்க விடுங்கள்.
  - பின்னர் ஓரிடத்தில் நின்று படிப்படியாகத் தோள், நெஞ்சுப் பகுதி, வயிறு, இடுப்பு, கால்கள் ஆகிய உறுப்புகளைத் தளர்த்திக் கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
  - முழு உடலையும் தளர்த்துவதற்காக, ஒலிக்க விடப்பட்ட இசைக்கேற்பச் சிறிய அசைவு ஒன்றினை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
  - அவ்வசைவினை விரைவுபடுத்திய பின்னர் சமநிலைக்குக் கொண்டு வருவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
  - இப்பயிற்சி தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
  - அவற்றின் அனுபவத்தை அறிக்கைப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- உடற் தளர்வு.
- ஒருமைப்பாடு.
- உடற் சமநிலை.

**தரவிருத்தி உள்ளீடுகள்** : • மெல்லிய இசை உருப்படிகள்.
• இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- உடற் தளர்வுப் பயிற்சிகளைச் செய்து காட்டுவார்.
- உடலையும் உள்ளத்தையும் தளர்த்த முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- சுயாதீன உள்ளத்தோடு செயற்படுவார்.
- ஆரோக்கிய வாழ்விற்கு அடிகோலுவார்.
- உடலைத் தளர் நிலையில் வைத்திருப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**

- நாடகத்தின் அடிப்படைத் தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
- ஸ்ரெனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.



**தேர்ச்சி 3.0** : நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1** : உடல், குரல் ஒருமைப்பாட்டுடன் நடிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.1.2** : ''சுவாசப் பயிற்சி, குரற் பயிற்சிகளில் ஈடுபடுவோம்''

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- உடல், உளச் செயற்பாட்டில் மேம்பாட்டினை அடைந்திருப்பார்.
- அரங்கப் பயிற்சிகள் மூலம் சிறந்த நடிப்பினை வெளிப்படுத்தலாம் என்பதை உணர்ந்திருப்பார்.
- ஆற்றுகையின் வெற்றிக்கு உடல், குரல் முக்கியமானது என்பதை அறிந்து கூறுவார்.
- தொடர்ந்து சுவாசப் பயிற்சியில் ஈடுபடும் பழக்கத்தை உடைய வராக இருப்பார்.
- குரற்பயிற்சி காரணமாகக் குரல்வழிச் சித்திரிப்பிற் செம்மை யடைந்திருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
பின்வரும் விடயங்களைக் கருத்தில் கொண்டு கலந்துரையாடுங்கள்.
- சுவாசப் பயிற்சி, குரற் பயிற்சி என்பவற்றின் முக்கியத்துவம்.
  - வாழ்வியல் சார்ந்த முக்கியத்துவம்.
  - அரங்குசார்ந்த முக்கியத்துவம்.
- உட்சுவாசமும், வெளிச்சுவாசமும்.
- சுவாசப் பயிற்சியில் ஈடுபடும் முறைமை.
- குரற் பயிற்சி பெறுவதன் மூலம் குரலின் வீச்சையும் ஒலியின் பண்பையும் மாற்றியமைத்துக் கொள்ள முடியும்.
- குரற் பயிற்சியானது நடிப்பிற்கு மிகவும் முக்கியமானது.
- குரற் பயிற்சியின் மூலம் குரலைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் வெளிப்படுத்திக் கொள்ளவும் முடியும்.
- குறிப்பாக, அரங்கில் நடிக்கும்போது பார்ப்போர் கூடத்தின் பின்வரிசைக்குக் கேட்கக்கூடிய தாகச் சொல்லாடலை முன்வைப்பதற்கு இப் பயிற்சி சிறந்தது.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைத் திட்டமிடுங்கள். பாடவேளைகளுக்கு ஏற்ப விடயப்பரப்பை வகுத்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் அனைவரையும் கண்களை மூடியவாறு சூழலின் பல்வேறு ஒலிகளையும் கவனமாகச் செவிமடுப்பதற்கு வழிப்படுத்துங்கள் (ஓரிரு நிமிடங்கள்).
- கண்களை மூடியபடி, தமது உடலில் நிகழும் சுவாசச் செயன்முறையில் மனதைச் செலுத்தி அவதானிக்கச் செய்யுங்கள்.
- உட்சுவாசித்த வளி உடலிருந்து வெளியேறும்போது உடலில் ஏற்படும் மாற்றத்தைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.
- மூக்கினாற் சுவாசித்து வாயினால் வெளிச்சுவாசத்தினை மேற்கொள்ளுமாறு கூறுங்கள்.
- ஆழமாக உட்சுவாசித்து மெதுவாக வெளியேற்றுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- கைகளை உயர்த்திச் சுவாசிப்பதற்கும் கைகளைத் தொங்கவிட்டுச் சுவாசத்தினை வெளியேற்று வதற்கும் வழிப்படுத்துங்கள்.
- மூக்குத் துவாரங்களை இரு விரல் நுனியினால் அழுத்திப் பிடித்து ஓரிரு சொற்களைப் பேசுமாறு அறிவுறுத்துங்கள்.
- உட்சுவாச வளியை உள்ளெடுத்தவாறு இரண்டு சொற்கள் பேசுமாறு கூறுங்கள்.

- சொற்களைப் பிறப்பிப்பதற்கு வாய்க்குழியிலுள்ள தொண்டை, நாக்கு, பற்கள், உதடுகள் போன்றன வகிக்கும் முக்கியத்துவத்தைக் கூறுங்கள்.
- குரற் பயிற்சியானது நடித்தலில் மிக முக்கியமான ஒன்றாகும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- பல்வேறுபட்ட ஒலிகளைக் குரலினால் எழுப்புவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- குரற் பயிற்சி பெறுவதன் மூலம் ஒவ்வொருவரும் தமது குரல் வீச்சுக்களை அறிவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- எமது உடலில் தசைநார்களை அழுத்துவதன் மூலம் ஒலி பிறப்பிக்கப்படும் 5 இடங்களையும் கூறி, அவற்றின் மூலம் ஒரு சொல்லைக் கூற வழிப்படுத்துங்கள்.
  (அடிவயிறு, நெஞ்சு, தொண்டை, மூச்சு, உச்சந்தலை).
- குரல் பிறப்பிக்கப்படும் இடங்கள் நாடகத்தில் எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- சுவாசப் பயிற்சி, குரற் பயிற்சியின் பயன்களை அட்டவணைப்படுத்த வாய்ப்பளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- சுவாசப்பயிற்சி.
- குரற் பயிற்சி.
- குரல் வீச்சு.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- றபான் அன்றேல் ஏதேனும் தோற்கருவி.
- மனித உடலின் சுவாசத் தொகுதிப் படங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- சுவாசப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.
- ஆரோக்கியமான வாழ்விற்குச் சுவாசப் பயிற்சிகளில் ஈடுபடுவது பொருத்தமானது என்பதை ஏற்றுக் கொள்வார்.
- மனிதனாற் பல்வேறு ஒலிகளை எழுப்ப முடியும் என்பதை எடுத்துக் காட்டுவார்.
- பயிற்சியினூடாகக் குரலைக் கட்டுப்படுத்தப் பழகிக் கொள்வார்.
- வெவ்வேறு ஒலிகளை வெவ்வேறு விதமானதாகக் கையாள முடியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- உடல், உள, குரல் ஒருங்கிணைப்பு - சே. இராமானுஜம்.
- நாடகக்கலை - (பிரெக்ட்) இராமசாமி.
- ஸ்ரெனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.



**தேர்ச்சி 3.0** : நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : உடல், குரல் ஒருமைப்பாட்டுடன் நடிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.1.3** : "புலனுணர்வுப் பயிற்சியில் ஈடுபடுவோம்"

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- உடல், உளத் தளர்வு பெற்றிருப்பார்.
- அரங்கப் பயிற்சிகள் மூலம் சிறந்த நடிப்பினை வெளிப்படுத்துவார்.
- அரங்கில் சுயாதீனமான உள்ளத்துடன் செயற்படுவார்.
- தமது நாளாந்தப் பணிகளை நேர்த்தியாகச் செய்வதில் ஆர்வம் காட்டுவார்.
- உடல், உள ஒருமைப்பாட்டினை வெளிப்படுத்துவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

- அரங்கக் கலை பயிலும் மாணவர்களுக்குப் புலன்களின் பயிற்சி முக்கியமானது.
- மனித உடல், ஆறு புலன்கள் மூலம் உணர்ச்சிகளைப் பெற்றுக் கொள்கின்றது.
- புலன்களினால் உணரப்படும் புலனுணர்வுகள் தொடர்பான பயிற்சிகள், வகிபாகமேற்று நடித்தலிற் செல்வாக்கு செலுத்தக்கூடியன.
- வாழ்க்கையிற் பல்வேறு சவால்களை ஏற்றுக் கொள்வதற்குப் புலனுணர்வுப் பயிற்சிகள் முக்கியமானவை.
- புலனுணர்வுப் பயிற்சியளித்தலிற் பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும்.
  - கண், காது, மூக்கு, நாக்கு, உடல், உள்ளம்.
- உடல், உள ஒருமைப்பாட்டைப் பேணுவதற்குப் புலனுணர்வுப் பயிற்சி பெரிதும் துணை புரிகின்றது.

மேற்படி விடயங்களை மனதில் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைத் திட்டமிடுங்கள்.

- மாணவர்கள் அனைவரையும் குழுக்கள் ஆக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு புலனுணர்வுப் பயிற்சியில் ஈடுபட வழிப்படுத்துங்கள்.
  - செவிப்புலன்களைக் கூர்மையாக்குவதற்குரிய பயிற்சிகளைக் கண்டறியுங்கள்.
  - கண்களுக்குரிய பயிற்சிகளைக் கண்டறியுங்கள்.
  - உடல்சார்ந்த பயிற்சிகளைத் தேடியறியுங்கள்.
  - உள்ளம் சார்ந்த அன்றேல் தியானம் தொடர்பான பயிற்சிகளைக் கண்டறியுங்கள்.
  - நுகர்தலுக்குரிய பயிற்சிகளைக் கண்டறியுங்கள்.
  - சுவையுணர்வுத் திறன் தொடர்பான பயிற்சிகளைக் கண்டறியுங்கள்.
- பயிற்சிகளில் ஈடுபட்டதன் பின்பு புலனுணர்வுப் பயிற்சியினால் ஏற்படும் பயன்களை அட்டவணைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- புலனுணர்வு.
- உள ஒருமைப்பாடு.
- தியானம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- மனதை ஒருநிலைப்படுத்தக்கூடிய இறுவட்டு அன்றேல் ஒலிப்பேழை.
- இசைக்கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- புலனுணர்வு என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- மனித உடலுக்குப் புலனுணர்வுகள் கிடைக்கும் வழிகளைப் பெயரிடுவார்.
- நடிப்பதற்கு உட, உள ஒருமைப்பாடு தேவையானது என்பதை விளங்கிக் கொள்வார்.
- ஆரோக்கிய வாழ்வுக்கு வழியமைத்துக் கொள்வார்.
- புலனுணர்வுப் பயிற்சியின் வழியாக ஒழுக்கமான ஒரு சமூகத்தின் பிரசையாவதற்கு ஆவன செய்வார்.

**உசாத்துணை நூல்கள்:**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி நாடகமும் அரங்கியலும் தரம் - 10 (2007 முதல்) - தேசிய கல்வி நிறுவகம்.
- ஸ்ரனிஸ்லவஸ்யின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.



**தேர்ச்சி 3.0** : நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.1** : உடல், குரல், உள ஒருமைப்பாட்டுடன் நடிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.1.4** : "உள ஒருமைப்பாட்டிற்கான பயிற்சிகளில் ஈடுபடுவோம்"

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள்** :
- உளச் சமநிலையுடன் செயற்படுவார்.
- தன்னம்பிக்கையை வளர்த்திருப்பார்.
- உள ஒருமைப்பாடு தொடர்பான பயிற்சிகளை அறிந்திருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- தலைமுதல் கால்வரையிலான சகல பகுதிகளிலும் என்புகளும் தசைகளும் இணைக்கப் பட்டுள்ளன.
- உடலுறுப்புக்களைத் தளர்த்தும்போது உள்ளம் இலேசாகும் தன்மையை நாம் உணரலாம்.
- உடலைத் தளர்த்துதல் ஆனது உள்ளத்தைத் தளர்த்துவதிற் செல்வாக்குச் செலுத்தும்.
- உள்ளத்தைத் தளர்த்துதல், ஏற்கும் பாத்திரத்தினை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் துணைபுரியும்.
- பாத்திரமாக மேடையில் உலா வருவதற்கு உள்ளம் நெகிழ்ச்சியான தன்மை அடைய வேண்டும்.
- உடல், உளத் தளர்வால் மேடையில் சுயாதீனமான உள்ளத்துடன் செயற்பட முடியும்.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

- அனைவரையும் தமக்கு விருப்பமான இடங்களில் அமருவதற்கு வழிப்படுத்துங்கள்.
- இசைத்தட்டுகளில் அன்றேல் வானொலிப் பெட்டியில் ஒரு இராகத்தினை இசைக்க விடுங்கள். (பூபாளம் / மோகனம்)
- அனைவரையும் கண்களை மெதுவாக மூடச்செய்து இசையைக் கேட்பதற்கு வழிப் படுத்துங்கள்.
- சிறிது நேரத்தின் பின்னர் உடலுறுப்புக்களைப் படிப்படியாகத் தளர்த்திக் கொள்ளச் செய்யுங்கள்.
- இப்போது உடல் இலேசான தன்மையில் உள்ளதை நோக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இந்த இசையின் ஊடே அவர்களை அழகிய பூந்தோட்டத்திற்கோ அன்றேல் மலைச்சார லுக்கோ அழைத்துச் செல்லுங்கள்.
- அவர்கள் முன்னைய பொழுதிற் சென்றதையோ அன்றேல் ஏனையோர் கூறக் கேட்ட அனுபவத்தையோ கருத்திற் கொண்டு அவர்களை அழைத்து செல்லுங்கள்.
- அங்கே அவர்கள் மகிழ்வுடன் இருப்பதற்கும் அவற்றை நயப்பதற்கும் ஊக்கமளியுங்கள்.
- அவ்வாறே மெதுவாகக் கண்களைத் திறக்க வழிப்படுத்துங்கள்.
- அவை தொடர்பாகக் கலந்துரையாடி, கண்ட விடயங்களை ஏனையோருக்குப் பகிர்ந்தளிக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- கற்பனை உலகு.
- உள்ளம்.
- ஒருமைப்பாடு.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- வானொலிப் பெட்டி.
- இறுவட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- உள்ளத்தைத் தளர்த்தும் பயிற்சிகளில் ஈடுபடுவார்.
- சுயாதீனமான உள்ளத்துடன் செயற்படுவார்.
- கற்பனை வெளியைக் கண்டு எடுத்துரைப்பார்.
- உடலையும் உள்ளத்தையும் தொடர்புறுத்துவார்.
- உள ஒருமைப்பாட்டினால் ஏற்பட்ட உணர்ச்சிகளைப் பகிர்வார்.

**உசாத்துணை நூல்கள்:**

- நாடகத்தின் அடிப்படைத் தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
- ஸ்ரனிஸ்லவஸ்யின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2 :** நாடகப் பாடல்களை உணர்வு வெளிப்படப் பாடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.2 :** ''உணர்ச்சி ததும்பப் பாடல்களைப் பாடுவோம்''

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களை அறிந்திருப்பார்.
- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களைப் பாடுவார்.
- தமது பண்பாட்டிற் காணப் பெறும் பாடல்களை நயப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களை மனதில் கொண்டு செயலாற்றுங்கள்.
  - பாடல்கள் பல்வேறு வகைப்பட்டவை.
    * கிராமியப் பாடல்.
    * சிறுவர் பாடல்.
    * நாடகப் பாடல் (மரபு / நவீனம்).
    * விடுகதைப் பாடல்.

- இரசனை, படிப்பினை, மகிழ்வளிப்பு போன்ற பல்வேறு நோக்கங்களுக்காக நாடகப் பாடல்கள் பாடப்படுகின்றன.
- நாடகப் பாடல்கள் ஒவ்வொன்றும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கியிருக்கும்.
  * உணர்வு.
  * விடயப் பொருள்.
  * செயல்.
  * பாத்திர அறிமுகம்.
- நாடகப் பாடல்களைக் கேட்டல், கிரகித்தல், பாடுதல் எனும் ஒழுங்கு நிலையிற் பயிலுதல் சிறப்பானது.
- நாடகப் பாடல்களைப் பிரதானமாக மரபுவழி, நவீன பாடல்கள் என வகைப்படுத்தலாம்.
- நவீனம் மற்றும் மரபுவழி நாடகப் பாடல்களிடையே வேறுபாடுகள் உள்ளன.

இந்த விடயங்களை அழுத்தும் வகையில் பாடத்திட்டமிடலை மேற்கொள்ளுங்கள்.
- மாணவர்களை அமைதியாக இருந்து, ஒலிக்க விடப்படும் பாடலைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள் (மரபுவழி அன்றேல் நவீன பாடல்).
- அப்பாடல் தொடர்பான ஓரிரு கருத்துக்களை வினவுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கித் தமக்குத் தெரிந்த நாடகப் பாடல்களைக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவும் கீழ்வரும் நாடகங்களின் பாடல்களைப் பாட வழிப்படுத்துங்கள். தேவையாயின் இசைக்கருவிகள் அன்றேல் தேவைப்படும் வசதி வாய்ப்புக்களை வழங்குங்கள்.
  - பொறுத்தது போதும்.
  - பூதத் தம்பி.
  - காத்தவராயன் கூத்து.
  - வசந்தன் கூத்து.
  - புதியதொரு வீடு.
  - காமன் கூத்து.
- அப்பாடல்கள் எவ்வகை சார்ந்தன? எந்த நாடகத்தில் இடம்பெற்றவை? எச்சந்தர்ப்பத்திற் பாடப்பெறுவது? என்பது போன்றன விடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள்.

- ஒவ்வொரு குழுவினது பாடல்களையும் அனைவரும் கேட்பதற்கும் பாடுவதற்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- பாடும்போது உணர்வு மேற்கிளம்பும் வகையிற் பாட ஆற்றுப்படுத்துங்கள்.
- இவ்வாறான நாடகப் பாடல்களைத் தேடியறிந்து பாடுவதற்கு வாய்ப்பளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- விடுகதைகள்.
- கிராமியப் பாடல்.
- விடயப் பொருள்.
- மரபுவழி.
- நவீனம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :
- ஒலிப்பேழை.
- பாடல்கள் (மரபுவழி, நவீனம்) கொண்ட இறுவட்டு.
- இசைக்கருவிகள் - தாளம், றபான், டோல்கி, மத்தளம்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களை உணர்வு வெளிப்படப் பாடுவார்.
- மரபுவழி, நவீன நாடகப் பாடல்களை, தேடி அறிக்கைப்படுத்துவார்.
- நாடகப் பாடல்களை ரசிக்கும் மனப்பக்குவத்தை அடைவார்.
- கருத்து வெளிப்பாட்டுடனும் வாழ்வனுபவ பாவங்களுடனும் பாடல்களைப் பாடிக் கருத்தை விளக்குவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- சிறுவர் நாடகப் பாடல் - செயல்திறன் அரங்க இயக்கம்.
- யாழ்ப்பாணத் தென்மோடி இசைமெட்டுக்கள் (இறுவட்டுக்கள்) - திருமறைக் கலாமன்றம்.
- இசை நாடக இசைமெட்டுக்கள் நூல் - திருமறைக் கலாமன்றம்.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.3 :** தெரிந்தெடுக்கப் பெற்ற மரபுவழிக் கூத்தின் கதைப்பகுதியினை ஆற்றுகை செய்யக்கூடியவராவார்.

**செயற்பாடு 3.3 :** ''மரபுவழிக் கூத்தினை ஆற்றுகை செய்வோம்''

**பாடவேளை :** 06

**கற்றற் பேறுகள் :**
- மரபுவழிக் கூத்துக்களின் ஆற்றுகைப் பண்புகளை அறிந்திருப்பார்
- ஆற்றுகை வெளிக்கும் அளிக்கைக்குமான தொடர்பினைக் கூறுவார்.
- மரபுவழிக் கூத்தின் கதைப்பகுதி ஒன்றினை ஆற்றுகை செய்யும் விருப்பத்தை பெற்றிருப்பார்.
- மரபுவழிக் கூத்தின் கதைப்பகுதி ஒன்றினை ஆற்றுகை செய்யக் கூடியவராக இருப்பார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான யாதேனுமொரு கற்பித்தல் முறையைக் கையாள முடியும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.
  தேர்ந்தெடுக்கப் பெற்ற மரபுவழிக் கூத்தின் கதைப்பகுதி ஒன்றினை ஆற்றுகை செய்யும் போது,
    * மரபுவழிக் கூத்தின் ஆற்றுகைப் பண்புகள்.
    * மரபுவழிக் கூத்தின் கட்டமைப்பு.
    * கூத்தின் ஆடல், பாடல், நடிப்பு என்பவற்றின் ஒருங்கிணைவு.
    * கூத்தின் பாத்திரவாக்கம்.
    * கூத்துக்கான வெளியும், வெளியின் இயல்பினூடான ஊடாட்டமும்.
    * கூத்தின் பகுதி ஒன்றினைப் பயின்று நடித்தல்.

  போன்ற விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

## செயன்முறை - 1

- கிடைக்கக்கூடிய கூத்து அளிக்கை ஒன்றின் காணொளியைப் பார்வையிடச் செய்யுங்கள். அன்றேல் கூத்து ஆற்றுகை ஒன்றினை நேரடியாகப் பார்வையிடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பார்வையிட்ட கூத்தின் ஆற்றுகைப் பண்புகளைக் கலந்துரையாடி முன்வையுங்கள்.
  * கூத்தில் பாத்திரங்கள் சபையோரால் அன்றேல் கட்டியகாரனால் அறிமுகம் செய்யப்படும். அன்றேல் பாத்திரங்களே தம்மைத்தாம் அறிமுகம் செய்யும்.
  * நடிப்பானது படர்க்கைப் பண்புடன் / எடுத்துரைக்கும் பண்புடன் காணப்படும்.
  * அண்ணாவியார், பிற்பாட்டுப் பாடுவோர், வாத்தியம் இசைப்போர் அரங்கிலேயே பிரசன்னமாகி இருப்பர்.
  * பாத்திரத்தின் வெளிப்பாடு ஆடலும், பாடலும் உரையாடலும் இணைந்த மோடியுற்ற நடிப்புப் பாங்குடன் காணப்படும்.
  * உரையாடல்கள் பாடலாகவே காணப்படும். சிறிய அளவில் ஊட்டு வசனங்கள் காணப்படும்.
  * அரங்கவெளியின் தன்மைக்கு ஏற்ப, ஆற்றும் முறைமை வேறுபட்டிருக்கும். உதாரணமாக, வட்டக்களரியில் நான்கு பக்கமும் சுழன்றாடும் பண்பு காணப்படும்.
  * கூத்தின் கதை பாத்திரங்களாலும் சபையோராலும் வளர்த்துச் செல்லப்படும்.

## செயன்முறை - 2

- உங்கள் பிரதேசத்துக்குரிய நன்கு பரிச்சயமான கூத்து வகைக்குரிய பிரதி ஒன்றினைத் தெரிவு செய்யுங்கள்.
- அப்பிரதியில் மாணவர்களைக் கொண்டு நிகழ்த்தக்கூடிய கதைப்பகுதி ஒன்றினைத் தெரிவு செய்யுங்கள்.
- தெரிவு செய்த கூத்தின் எழுத்துருவை மாணவர்களுக்கு வழங்குங்கள். அக்கூத்தின் பண்புகளையும் அடிப்படைகளையும் விளக்கி, அதனை ஆற்றுகை செய்வதற்குத் தயார்ப் படுத்துங்கள்.
- பின்வரும் ஒழுங்கில் கூத்தின் பகுதியைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடலாம்.

**(1) கூத்தின் பாடல்களைப் பயிற்றுதல்.**

தெரிவு செய்த கூத்தின் பகுதியில் வருகின்ற பாடல் மெட்டுக்களை மாணவர்கள் அனைவரும் பயிலும்படி செய்யுங்கள்.

பாடல்களை மெட்டுப் பிசகாத வகையில், தொனி வேறுபாடுகளுடன், சுருதி தாளத்துடன், உணர்வு வெளிப்பாட்டுடன், பாத்திரப் பண்புகளுடன் பாடப் பயிற்றுங்கள்.

**குறிப்பு:-** மரபுவழி பிசகாத வகையில் பாடல்களைப் பயிற்றுவியுங்கள். ஆசிரியர் இதற்காகக் கூத்துக் கலைஞர்களினதோ, நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்களதோ உதவியை நாடுவது ஆரோக்கியமானது.

**(2) ஆடல்களைப் பயிற்றுதல்.**

- தெரிவு செய்த கூத்தின் பகுதிக்குரிய ஆடல்களை எல்லா மாணவர்களுக்கும் பயிற்றுவியுங்கள்.
  * நிற்றல்.
  * தாளத்துக்குக் கால் போடுதல்.
  * தாளத்துடனான நடை.
  * தாளப் பிடிப்புடனான அசைவுகள்.
  * ஆடற் கோலங்கள்.
  * துரித ஆட்டம்.
  * பாத்திரப் பண்பினை உட்கொண்ட ஆட்டம்.

**(3) ஆடலையும் பாடலையும் இணைத்து நிகழ்த்துவதற்குப் பயிற்றுவித்தல்.**

* பாடலின் கதி ஆடலுடன் ஒத்துவரல்.
* பாடலையும் ஆடலையும் பொருந்தும் வகையில் இணைத்தல்.
* பாத்திரப் பண்புகளுடன் வெளிப்படுத்துதல்.
* உணர்வுகளை வெளிப்படுத்துதல்.
* கதைப்போக்கிற்கான ஊடாட்டத்தை வெளிப்படுத்தல்.
* மோடியுற்ற / செயலாக்கமான அசைவுக்கோலம்.

## செயன்முறை - 3

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவும் யாதாயினுமொரு கூத்தின் தெரிந்தெடுக்கப் பெற்ற பகுதியை நிகழ்த்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அவர்கள் விரும்பியவாறு அரங்க வெளியைத் தெரிவு செய்யத் தூண்டுங்கள்.
- குழு ஆற்றுகை மூலம் பாத்திரங்களைச் சிறப்பாக நிகழ்த்தவல்ல மாணவர்களைத் தெரிவு செய்து ஒன்றுபடுத்துங்கள்.
- தெரிவு செய்யப்பெற்ற மாணவர்களுக்கு அதிக ஒத்திகையை வழங்கிப் பொருத்தமான ஒரு சந்தர்ப்பத்தில், கூத்தின் பகுதியைப் பாடசாலையில் மேடையேற்றம் செய்யத்தக்க வகையில் முழுமைப்படுத்துங்கள்.
- ஏனைய மாணவர்களுக்கு மேடை, வேடஉடை, ஒப்பனை, இசை போன்ற ஏனைய அரங்கச் செயற்பாடுகளுக்குரிய பணிகளைப் பகிர்ந்தளியுங்கள்.

- குறிப்பிட்ட நாளில் அரங்கின் அனைத்து மூலகங்களுடனும் களரிஏற்றம் / மேடையேற்றம் செய்யுங்கள்.
- ஆற்றுகையின் பின்னர் அதன் அனுபவத்தினையும், அபிப்பிராயங்களையும், குறிப்புக்களாக எழுதுவதற்குப் பணியுங்கள். எழுதும் விடயங்களிற் பின்வரும் முக்கியத்துவங்களை வலியுறுத்துவதற்கு முற்குறிப்பு வழங்குங்கள்.
    * கூத்துக்கும் ஏனைய நாடக முறைமைக்குமான வேறுபாடு.
    * கூத்து அளிக்கையை மேற்கொள்வதில் இருக்கும் சவால்கள்.
    * அரங்க வெளி ஏற்படுத்திய தாக்கம்.
    * பார்ப்போரின் எதிர்வினைகள் / பதிற் குறிகள்.

**முதன்மைப் பதங்கள் :**
- மரபுவழிக் கூத்து.
- கட்டமைப்பு.
- அண்ணாவியார்.
- பிற்பாட்டுக்காரர்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- கூத்தின் காணொளி இறுவட்டு.
- அவ்வப் பிரதேசக் கூத்துப் பிரதிகள்.
- தெரிவு செய்யப்பட்டு நகல் எடுக்கப்பட்ட கூத்தின் பிரதிகள்.
- வேட உடைகள்.
- கூத்தளிக்கைக்குரிய ஏனைய அரங்கப் பொருள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- கூத்தின் ஆற்றுகைப் பண்புகளை எடுத்துரைப்பார்.
- தமது பிரதேசக் கூத்து மரபின் சில ஆடல் பாடல்களை நிகழ்த்திக் காட்டுவார்.
- கூத்தினைப் பயின்று மேடையேற்றிய அனுபவத்தினை அறிக்கை செய்வார்.
- மரபுவழிக் கூத்துக்கள் தொடர்பான பற்றுணர்வினைப் பெறுவார்.
- கூத்து தொடர்பான விடயங்களைச் சேகரிக்கத் தொடங்குவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- தமிழ்க் கூத்துக் கலை - சி. மௌனகுரு.
- வட இலங்கை நாட்டார் அரங்கு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - சி. மௌனகுரு.
- வன்னிப் பிராந்தியக் கூத்துக்கள் - அருணா செல்லத்துரை.
- மலையகக் கூத்துக்கள் - காரை செ. சுந்தரம்பிள்ளை.



**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.4 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை வாசித்து நாடகப் பொருத்தமாகச் சொல்லாடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.4.1 :** "நாடக எழுத்துருவை வாசிப்போம்".

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- எழுத்துருவை அர்த்தப்பாங்குடன் வாசிப்பார்.
- எழுத்துருவை நாடகவியல் அம்சங்களுடன் வாசிப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவான குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் 'ஆரொடு நோகேன்' நாடகத்தை வாசித்து அறிதல் என்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- 'ஆரொடு நோகேன்' நாடகத்தை எழுதியவர் நாடறிந்த நாடகக் கலைஞர், நாடகாசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் ஆவார்.
- இது ஒரு பாடசாலை நாடகம் ஆகும் (School play).
- நாடகத்தை வாசிக்கும்போது வாசிப்பு அரங்கிற்குரிய நுட்பங்களுடன் வாசிப்பது நன்மை பயக்கும். அதாவது:
  * மெய்யசைவு / அங்க அசைவு எதுவுமின்றித் தனியே குரலை மாத்திரம் பயன்படுத்தி வாசிப்பது ஆகும்.
  * பாத்திரத்தின் பண்புகளை உணர்ந்து வாசிப்பது ஆகும்.
  * குரலில் ஏற்ற இறக்கத்துடன் வாசிப்பது ஆகும்.
  * நிறுத்தற் குறிகளை அவதானித்து அதற்கேற்ப வாசிப்பது ஆகும்.
  * ஒவ்வொரு சொற்களும் வசனங்களும் விளங்கக்கூடியவாறு வாசிப்பது ஆகும்.
  * வசனத்தின் இறுதி வார்த்தையும் இறுதி எழுத்தும் புரியும் வண்ணம் வாசிக்க வேண்டும் என்பதாகும்.
  * சொல்லாடலுக்கு அழுத்தம் கொடுத்து, அதற்கேற்ப வாசிக்க வேண்டும்.
  * உச்சரிப்புக்களிற் கவனம் செலுத்தி வாசிக்க வேண்டும் என்பதாகும்.
  * கவிதை மற்றும் பாடல்கள் வரும்போது அவற்றின் அர்த்தம் புலப்படும் வகையில் வாசிக்க வேண்டும் என்பதாகும்.
- நாடக எழுத்துருவின் ஒரு பகுதியைச் சாதாரண நிலையிலும் உணர்வுகளுக்கு அழுத்தம் கொடுத்தும், இரு வேறு முறைகளில் வாசித்துக் காட்டுங்கள்.
- இரண்டு முறைகளுக்குமிடையேயான வேறுபாடுகளையும் தெளிவாக விளக்குங்கள்.

  நாடகம் ஒன்றை வாசிக்கும்போது வாசிப்பு அரங்கின் (Reading theater) தன்மைகளை விளங்கி வாசிக்க வேண்டும் என்று கூறுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- அழுத்தம்.
- உச்சரிப்பு.
- நாடகவியல் அம்சம்.
- பாடசாலை நாடகம்.
- மெய்யசைவு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இறுவட்டு.
- ஆரொடுநோகேன் - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- நாடகாசிரியரின் ஒளிப்படம்.
- வாசிப்பு நுட்பங்கள் அடங்கிய அட்டைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாடகம் ஒன்றை வாசிக்கும் முறை பற்றித் தெரிந்து கொள்வார்.
- விதந்துரைக்கப்பட்ட நாடக எழுத்துருவை அர்த்தப்பாங்குடன் வாசிப்பார்.
- வாசிக்கும்போது கவனிக்க வேண்டிய நுட்ப முறைகளை ஒவ்வொன்றாகக் கூறுவார்.
- நாடக எழுத்துருவைத் திரும்பத் திரும்ப வாசிக்கும் விருப்பத்தைப் பெறுவார்.
- தாமாக முன்வந்து பல்வேறு நாடக எழுத்துருக்களையும் வாசிப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**

- ஆரொடு நோகேன் - ம. சண்முகலிங்கம்.
- நாடகப் பனுவல் வாசிப்பு - வீ. இராசு, கோ. பழனி.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.4 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை வாசித்து நாடகப் பொருத்தமாகச் சொல்லாடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.4.2 :** "சொல்லாடலில் ஈடுபடுவோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- நாடக அம்சத்துடன் சொல்லாடலில் ஈடுபடும் ஆற்றல் கொண்டிருப்பார்.
- சொல்லாடல்களினூடாக நாடகங்கள் வளர்த்துச் செல்லப்படுகின்றன என்பதை அறிந்திருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவான 'ஆரொடு நோகேன்' (குழந்தை ம. சண்முகலிங்கம்)ஐ வாசித்துப் பொருத்தமான சொல்லாடல்களில் ஈடுபடுதல்.

- பின்வரும் விடயங்கள் தொடர்பிற் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைக் கட்டியெழுப்புங்கள்.
  - * பாடசாலை நாடகத்திற்குரிய சொல்லாடல்களின் தன்மைகள் யதார்த்த வாழ்வோடு பின்னிப்பிணைந்தவை. ஆயினும் அவை மோடிமைப் பாணியிலும் அமைந்து காணப் படலாம்.
  - * சிறுவர் நாடகங்கள் யதார்த்த நாடகங்கள் மற்றும் மோடிமைப் பாணி நாடகங்கள் என்பவற்றின் சொல்லாடல்கள் வேறுபட்டவை.
  - * சொல்லாடல்களைக் கவனித்து நாடகவியல் அம்சங்களுடன் சொல்லாட வேண்டும்.
  - * ஆரொடு நோகேன் நாடகச் சொல்லாடல்கள் பெரும்பாலும் யதார்த்தப் பாணியில் அமைந்துள்ளன.
  - * சொல்லாடல்கள் தனிப் பாத்திரங்களாலும் நிகழ்த்தப்படலாம்.

உதாரணம்:- ஷங்கரி எனும் பாத்திரம் மேடையில் நின்று அவையோரை விழித்துப் பேசுதல்.

ஷங்கரி :- அம்மையே அப்பா
உங்கள்
அன்பினில் விளைந்த ஆரமுதம்
.....................................................

* இரு பாத்திரங்களிடையிலும் சொல்லாடல்கள் இடம்பெறலாம்.

உதாரணம்:- சுபத்திரா :- ஷங்கரி
ஷங்கரி :- என்னம்மா
சுபத்திரா :- புது யூனிபோம்! இண்டைக்கு அதைப் போடுவம்.

* இரு பாத்திரங்களிற்கு மேற்பட்டோருக்கிடையிலும் சொல்லாடல் நிகழலாம். (ஷங்கரி, தாய், தந்தையர் சொல்லாடல்)

* சொல்லாடல்கள் பாத்திரப் பண்புகளுடன் இணைந்து இருக்கலாம்.

* பாத்திர இயல்புக்கும் வயது வேறுபாடுகளிற்கும் உணர்வுகளுக்கும் ஏற்ற வகையிற் சொல்லாடல் மாறுபடலாம்.

* சொல்லாடல்களினூடாகவே நாடகம் வளர்த்துச் செல்லப்படுகிறது.

* நாடகப் பாத்திரங்களையும் நாடகச் சூழமைவுகளையும் சொல்லாடல்களினூடாக விளங்கிக் கொள்ளலாம்.

* ஒவ்வொரு பாத்திரமும் கருத்துப் புலப்படவே சொல்லாடல்களில் ஈடுபடுகின்றன.

**முதன்மைப் பதங்கள்** : • சொல்லாடல்கள்.
• சூழ்நிலை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- ஆரொடு நோகேன் - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- சொல்லாடல் அடங்கிய காட்சிப்படுத்தல் அட்டைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடகத்தில் இடம்பெறும் சொல்லாடல்கள் பற்றிக் கூறுவார்.
- நாடகத் தன்மை பொருந்திய சொல்லாடல்களைச் சொல்லாடுவார்.
- சொல்லாடல்களிற் கவனிக்க வேண்டிய பண்புகளை ஒழுங்குமுறையிற் கூறுவார்.
- நாடகங்களில் இருந்து எடுக்கப் பெற்ற சொல்லாடல்களைப் பேசிப் பழகுவார்.
- நாடகப்பாங்கான புதிய சொல்லாடல்களை உருவாக்குவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஆரொடு நோகேன் - ம. சண்முகலிங்கம்.
- ஏழு நாடகங்கள் தொகுதியிலுள்ள புழுவாய் மரமாகி - ம. சண்முகலிங்கம்.
- பஞ்சவர்ண நரியார் - ம. சண்முகலிங்கம்.
- எந்தையும் தாயும் - ம. சண்முகலிங்கம்.
- தப்பி வந்த தாடியாடு - சி. மௌனகுரு.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.5 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவிலுள்ள பாத்திரங்களைச் சித்திரிக்கக் கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.5 :** " 'ஆரொடு நோகேன்' எழுத்துருவிலுள்ள பாத்திரங்களைச் சித்திரிப்போம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- எழுத்துருவிலுள்ள பாத்திரங்களை அறிந்திருப்பார்.
- பாத்திரங்களின் இயல்புகளை விளங்கிக் கொண்டிருப்பார்.
- பாத்திரங்களைச் சித்திரித்துக் காட்டுவார்.
- எழுத்துருவிலுள்ள பாத்திரங்களைச் சமகால வாழ்வியலுடன் ஒப்பு நோக்குவார்.

## பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

- பாத்திரங்கள் சித்திரிக்கப் பெற்றுள்ள முறைமையினை நோக்குங்கள்.
  * 'ஆரொடு நோகேன்' எழுத்துருவில் வருகின்ற பாத்திரங்கள்.
  * பாத்திரங்களின் பண்புகள்.
  * பாத்திரப் பண்புகளைச் சித்திரித்தல்.
  * அப்பாத்திரப் பண்புகளைச் சமகால வாழ்வியலுடன் ஒப்பு நோக்குதல்.
- மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைத் திட்ட மிடுங்கள்.

## செயன்முறை - 1

* ஆரொடு நோகேன் நாடகத்தின் பாத்திரங்கள் எவை என மாணவர்களை வினவிப் பட்டியலிடுங்கள்.
* பாத்திரப்பண்பு என்பது என்ன என வினவி அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
  - பாத்திரத்தின் பால், வயது, சமூக அந்தஸ்து, பண்பாடு, காலம், தோற்றம், நிறம், உளவியற் பண்புகள் மற்றும்.
* 'ஆரொடு நோகேன்' நாடகப் பாத்திரங்களை ஒவ்வொருவருக்கொன்றாக வழங்குங்கள்.
* அவ்வப் பாத்திரங்களுக்குரிய பண்புகளைக் கண்டறியச் செய்யுங்கள்.
  (1) பாத்திரத்தின் பௌதிகப் பண்புகள்
     - பால், வயது, தோற்றம் மற்றும்.
  (2) பாத்திரத்தின் உளவியற் பண்புகள்
     - இயல்புகள், பிரச்சினையில் முடிவெடுக்கும் தன்மை மற்றும்.
  (3) பாத்திரத்தின் சமூகக் குணாம்சங்கள்
     - தொழில், அந்தஸ்து, சமயம் மற்றும்.
  (4) அப்பாத்திரத்திற்கும் ஏனைய பாத்திரங்களுக்குமான உறவுகள்.

* அவர்களின் கண்டறிவை முன்வைக்கச் செய்து கலந்துரையாடுங்கள். அவர்கள் பாத்திரங்களின் பண்புகளை முன்வைத்துள்ள முறைமையினை அவதானித்து முழுமைப்படுத்துங்கள்.
  உதாரணமாக:- ராஜ்குமார் பாத்திரம்.
  - ஆண், தந்தை, குடும்ப தலைவன்.
  - சற்று உயரமானவர்.
  - தோற்றத்தில் நேர்த்தியாக இருப்பவர்.
  - தான் எண்ணுவதே சரி என நினைப்பவர்.
  - போலி கௌரவம் பார்ப்பவர்.

- கண்டிப்பானவர்.
- இலட்சியத்துக்காகக் குடும்பத்தவரைத் துன்பப்படுத்த அஞ்சாதவர்.

* மாணவர்கள் கண்டறிந்த பாத்திரத்தினைச் சித்திரிக்கத் தயாராக வருமாறு அறிவுறுத்துங்கள்.

**செயன்முறை - 2**

* மாணவர்கள் பகுப்பாய்வு செய்த பாத்திரத்தினைச் சித்திரிப்பதற்குப் பணியுங்கள். இனங்கண்ட பாத்திரத்தின் பண்புகளை உடல் மொழி, குரல் உணர்வுகளால் வெளிப் படுத்த அறிவுறுத்துங்கள்.
* தொடர்புபடுகின்ற பாத்திரங்களை இணைத்துச் சித்திரிப்பினை மேற்கொள்ளச் செய்யுங்கள்.
  உதாரணமாக:- ராஜ்குமார் → செல்வராணி → ரஜீவ் → ஷீலா
* சித்திரிப்பின் அனுபவத்தைக் கொண்டு பாத்திரச் சித்திரிப்பு பற்றிக் குறிப்பு எழுதுவதற்கு வகை செய்யுங்கள்.
* 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் வரும் பாத்திரங்கள் போன்று சமகால வாழ்வில் எவரும் உள்ளனரா என வினவிக் கலந்துரையாடுங்கள். அக்கலந்துரையாடல் மூலம் நாடகம் உலக இயல்பைப் போலச் செய்யும் கலை என்பதனை வலியுறுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- சித்திரிப்பு.
- சமூக, பௌதிக, உளவியற் குணாம்சங்கள்.
- வாழ்வியல்.
- பாத்திரப் பண்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஆரொடு நோகேன்' எழுத்துரு.
- பாத்திரச் சித்திரிப்புக்கான கைப்பொருள்கள்.
- பாத்திரப் பண்புகள் எழுதப் பெற்ற அட்டைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- 'ஆரொடு நோகேன்' நாடகத்தில் வரும் பாத்திரங்களைக் கூறுவார்.
- அப்பாத்திரங்களின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- பாத்திரமொன்றினைச் சித்திரிக்கும்போது கவனிக்க வேண்டிய விடயங்களை உணர்ந்து கொள்வர்.
- பாத்திரங்களை வினைத்திறனுடன் சித்திரிப்பார்.
- நாடகம் வாழ்வியலுடன் கொண்டுள்ள தொடர்பை உணர்ந்து கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- அரங்கியல் - சி. மௌனகுரு.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.6 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.6.2 :** "விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவுக்கு அமைவாக மேடைப் பொருள்களைத் திட்டமிடுவோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- விதந்துரைக்கப் பெற்ற எழுத்துருவுக்குப் பொருத்தமானவாறு மேடைப் பொருள்களைத் தீர்மானிப்பார்.
- மேடைப் பொருள்களும் காண்பிய நிலையில் நாடக பேசுபொருளுக்குத் துணையாக நிற்பவை என்பதனை உணர்ந்தவராவார்.
- துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடும்போது அரங்க வெளி, காட்சிவிதானிப்பு. நாடக அசைவொழுங்கு என்பவற்றோடு மேடைப் பொருள்களும் தொடர்புபடுகின்றன என்பதனை விளங்கியிருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- நாடகத்தின் துணைக்கலை அம்சங்களிலொன்றாகிய 'மேடைப் பொருள்கள்' ஆரொடு நோகேன் நாடகத்திற்கு வழங்கக்கூடிய பங்களிப்பினை விளங்கிக் கொள்வதும், அதனை நாடகமாகச் சித்திரிக்கும்போது பயன்படுத்திக் கொள்வதற்கான ஆற்றலைப் பெறுவதுமே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும். எனவே,
    - ஆரொடு நோகேன் நாடகத்தில் வருகின்ற மூன்று குடும்பங்களினதும் மத்திய தர வர்க்கச் சூழலை மேடைப் பொருள்களால் இனங்காட்டக்கூடியதாக இருத்தல்.
    - ரஞ்சித்குமார், ராஜ்குமார், இராசதுரை ஆகியோரின் மூன்று குடும்பங்களும் மேடையில் அவ்வப்போது காட்சியில் தோன்றும்போது காட்சிச் சூழலை வெளிப்படுத்தத் 'தட்டு முட்டுக்களை' மாற்றுவதனூடாக அவரவர் சமூக அந்தஸ்தினைச் சித்திரிக்க கூடிய வகையிற் செய்வதற்கு, மேடைப் பொருள்கள் நன்கு திட்டமிடப்பட்டு,
        * குடும்பங்களின் சமூக அந்தஸ்தைப் புலப்படுத்துவனவாய்.
        * இலகுவாக நகர்த்தக்கூடியனவாய்.
        * அரங்க வெளியில் அழகியற் தோற்றப்பாட்டினை ஏற்படுத்துவதற்குத் துணைபுரிவனவாய்.
        * நடிப்புக்கும், நாடகச் செயல் இயக்கத்துக்கும் உதவுவனவாய் அமையத்தக்க வகையிற் திட்டமிடப்பட வேண்டும்.
- மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு, கற்றல்-கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுங்கள்.
- ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவினை நன்கு வாசித்த பின்னர் இச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- ஏற்கெனவே இந்நாடகத்தினைத் தயாரித்தவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் விவரங்களைக் கருத்திற் கொண்டு ஆரொடு நோகேன் நாடகத்தின் மேடைப் பொருள்கள் தொடர்பாகக் கலந்துரையாடலைக் கட்டி எழுப்புங்கள்.
    * மேடைப் பொருள்கள் பற்றிய விவரங்கள் எழுத்துருவில் எழுதப்பட்டிருக்கலாம். அவற்றை நாடக எழுத்துருவை நன்கு வாசிப்பதனூடாகக் கண்டு கொள்ளலாம்.
      **உதாரணம்:** ராஜ்குமாரின் மகள் ஷீலா "நிலைக்கண்ணாடியின் முன் சென்று நின்று தன்னைத்தானே முதன்முதலாகப் பார்ப்பது போல்..." என்ற வரிகள் மூலம் நிலைக்கண்ணாடியின் தேவைப்பாட்டினைக் கண்டுகொள்ளல்.
    * எழுத்துருவில் எழுதப்படாமலே நாடகத் தயாரிப்பில் உணரப்படுவதுவாய்த் திட்டமிடலில் கண்டுபிடிக்க வேண்டிய மேடைப் பொருள்கள் இருக்கலாம்.
    * அரங்க வெளியின் சமநிலை பேணல், காட்சி விதானிப்புக்கு முழுமை சேர்த்தல் என்ற வகையில் அரங்கப் பொருள்கள் இனங்காணப்படலாம்.

* ஆரொடு நோகேன் நாடகத்தில் ''வீட்டுக்கு வீட்டுக்கு வாசற்படி வேண்டும்'' என்ற பாடல் வரிக்குள் காட்சிகளைப் பாடுநர் மாற்ற வேண்டிய தேவை இருப்பதால் அவை பாரம் குறைந்தவையாக, இலகுவாக நகர்த்தக்கூடியவாறு அமைதல் வேண்டும்.
* நாடக எழுத்துருவை வாசிக்கும்போது உருவான மனப்படத்திற் தோன்றிய மேடைப் பொருள்களைப் பட்டியலிடச் செய்து அவற்றின் பொருத்தப்பாடு குறித்துக் கலந்துரை யாடுங்கள்.

- இவற்றின் வழியாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  * அரங்கின் காண்பியப் பரிமாணத்தில் மேடைப் பொருள்களும் முக்கியத்துவம் பெறுகின்றன.
  * நாடகத்தின் பேசு பொருளாகவும் அவை அமையலாம்.
  * நடிகனுக்கு நடிப்புக்கு அதிகம் உதவுகின்றன.
  * சமூக அந்தஸ்தினை வெளிப்படுத்துவதிலும், காலம், கலாசாரம், சமயம் போன்ற பல விடயங்களை வெளிப்படுத்துவதிலும் காட்சி விதானிப்புக்கு முக்கிய பங்களிப்பு உண்டு.

**முதன்மைப் பதங்கள்** :
- தட்டு முட்டுக்கள் (மேடைப் பொருள்கள்).
- காட்சி விதானிப்பு.
- அரங்கவெளி.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- ஆரொடு நோகேன் நாடக எழுத்துரு.
- மேடைப் பொருள்கள் வெளிப்படும் காட்சிப் படங்கள்.
- மாதிரித் தட்டுமுட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- ஆரொடு நோகேன் நாடகத்திற் பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தக்கூடிய மேடைப் பொருள் களின் அட்டவணையைத் தயாரிப்பார்.
- மேடைப் பொருள்களை இலகுவாகத் தயாரிக்கும் முறையை எடுத்துரைப்பார்.
- ஆரொடு நோகேன் நாடகத்தில் வருகின்ற மூன்று குடும்பங்களின் மேடைப் பொருள்களின் தள வரைபடத்தினை வரைந்திருப்பார்.
- நாடகத்தின் முழுமையில் மேடைப் பொருள்கள் தொடர்புபடும் பாங்கினை விளங்கிக் கூறுவார்.
- மேடைப் பொருள்களைப் புதிதளித்தல் செய்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- சமூக மாற்றத்துக்கான அரங்கு - க. சிதம்பரநாதன்.
- அரங்கவியல் - முனைவர். சக்திப் பெருமாள்.



**தேர்ச்சி 3.0** : நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்3.6** : விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.6.2** : "ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரங்களுக்கான வேட உடைகளை விதானிப்போம்"

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :
- ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரங்களின் பண்புகளை அறிந்திருப்பார்.
- அந் நாடகப் பாத்திரங்களுக்கேற்ற வேடஉடைகளுக்கான வர்ணங் களைத் தெரிந்தெடுப்பார்.
- குறித்த வேட உடைகளின் வடிவமைப்பைச் செய்வார்.
- வேட உடை விதானிப்பு தொடர்பில் ஏனையோருடன் கலந்துரை யாட முன்வருவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- வேட உடையை விதானிக்கும்போது முக்கியம் பெறும் விடயங்களைக் கருத்திற் கொள்ளுங்கள்.
  * நடிகர் பாத்திரமொன்றை ஆள்மேற்கொள்வதற்கு வேட உடை அவசியமாகும்.
  * 'ஆள்பாதி ஆடை பாதி' என்பதற்கு இணங்கப் பாத்திரச் சித்திரிப்பை முழுமைப்படுத்து வதற்கு வேட உடைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன.
  * வேட உடையானது குறித்த பாத்திரத்தின் உடலியல், உளவியல், சமூகவியற் குணாதிசயங்களை முன்னிறுத்துவதாக சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களுக் கூடாக மேற்கிளம்புவதாக அமையும்.
  * வேட உடை விதானிப்பில் நாடக மோடி செல்வாக்குச் செலுத்தும்.
- ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு வேட உடை விதானிப்பிற்கான கற்றல் - கற்பித்தற் செயன்முறையைத் திட்டமிடுங்கள். அதில் மனதிற் கொள்ளவேண்டிய விடயங்களின் பாற் கவனஞ் செலுத்துங்கள்.
  * ஆரொடு நோகேன் பெருமளவிற்கு யதார்த்தம் சார்ந்த நாடகம் என்ற போதிலும் மோடியுற்ற ஆற்றுகைக்கும் இடமளிக்கக்கூடியது என்பது.
  * பாத்திரங்கள் வகை மாதிரியானவை என்பது.
  * பாடகர் குழு பெரிதும் சமூகத்தைப் பிரதிபலித்து நிற்கிறது என்பது.
  * பிரதான பாத்திரங்களான ஷங்கரி, ஷீலா, அம்பிகா ஆகியோரிடத்தில் எடுத்துரைப்புப் பண்பும் காணப்பெறுகின்றது என்பது
  * நாடகத்தில் இடம்பெறுகின்ற மூன்று குடும்பங்களும் மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவை என்பது.
  * கட்டிளமைப் பருவத்து மாணவர்களது கல்விசார், சமூகஞ்சார் மனவெழுச்சிகளை மையப் பொருளாகக் கொண்டது என்பது.
- வேட உடையின் வர்ணம், இழைமானம், வடிவம் என்பவற்றில் மேற்குறித்த விடயங்கள் செல்வாக்குச் செலுத்தும் என்பதை வலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

- மாணவர்களைச் சிறுகுழுக்களாகப் பிரியுங்கள்.
- பிரிக்கப்பட்ட குழுக்களுக்குப் பல்வேறுவிதமான வேட உடைகளின் படங்களை வழங்குங்கள்.
- அவற்றைப் பற்றிய சிறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துருவினை நினைவுபடுத்துங்கள்.

- அனைவரையும் சிறிது நேரம் கண்களை மூடி, நாடக எழுத்துருவில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொன்றும் அணியும் வேட உடைகள் பற்றிய சிந்தனையைக் கிளறுங்கள்.
- கண்களைத் திறந்து தமது கற்பனையை மற்றவர்களுடன் பகிரச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுக்களும் பகிர்ந்து கொண்ட விடயங்களுக்கு ஏற்ப, பொருத்தமான வேட உடையைத் திட்டமிடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஒவ்வொரு குழுவும் திட்டமிட்டதை ஏனைய குழுக்களுக்கு முன்வையுங்கள்.
- பாத்திரங்களின் வேட உடைகளை வரைந்து அன்றேல் ஆக்கிக் காட்சிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- வேடஉடை.
- வர்ணம்.
- இழைமானம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- வேடஉடை தொடர்பான படங்கள்.
- வேட உடை மாதிரிகைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- வேட உடைகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வார்.
- வேட உடைகளின் நிறங்களின் செல்வாக்கினை அறிந்து கொள்வார்.
- நாளாந்த வாழ்க்கையில் பாத்திரங்களின் உடைகளின் தன்மைகளைத் தெரிந்திருப்பார்.
- வேட உடைகள் மேற்கொள்ளத் தேவையான பொருள்களைக் கூறுவார்.
- புறவாரியான அழகுபடுத்தல்களின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- அரங்கு ஓர் அறிமுகம் - க. சிவத்தம்பி, சி. மௌனகுரு, க. திலகநாதன்.

**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.6 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.6.3 :** "ஆரொடு நோகேன் நாடகப் பாத்திர ஒப்பனையைத் திட்டமிடுவோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- பாத்திர ஒப்பனைக்கான திட்டத்தை வரைந்திருப்பார்.
- ஒப்பனைக்குத் தேவையான பொருள்களை அறிந்திருப்பார்.
- ஒப்பனைக்கான மோடி பற்றி முடிவு செய்திருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவை வாசித்து ஒப்பனைக்கான திட்டத்தைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.
  * ஆரொடு நோகேன் பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் இனங்காண்பதற்கு முகம் மற்றும் உறுப்புக்களின் தளவடிவங்களும் மெய்நிலைகளும் துணைபுரிகின்றன.
  * மெய்நிலைகளைக் காட்டும் தளவடிவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடும்.
  * முகம், உடலுறுப்புக்களின் வடிவம் என்பன வெவ்வேறு வயது மட்டம், ஆண், பெண் பாலின வேறுபாடு என்பவற்றிற்கு அமைய வித்தியாசப்படும்.
  * ஆரொடு நோகேன் யதார்த்த நாடகம் என்பதால் ஒப்பனையில் அந்தப் பண்பு இடம்பெற வேண்டும்.

  ஆகிய விவரங்களைத் துணைக்கொண்டு ஒப்பனைத் திட்டத்தை வடிவமைக்க வழிப்படுத்துங்கள்.
- தேவையான ஒப்பனைப் பொருள்களைச் சேகரித்து வர அறிவுறுத்துங்கள்.
- பல்வேறு ஒப்பனை மாதிரிகைகளைப் (Samples) பார்வையிடச் செய்யுங்கள்.
- மாணவர்களைச் சிறுகுழுக்களாக்கி ஆரொடு நோகேன் பாத்திரங்களை அவர்களுக்கு வழங்கி, ஒப்பனைக்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு கேளுங்கள்.
- அத்திட்டத்தின்படி அந்தப் பாத்திரங்களுக்கு ஒப்பனை செய்யுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாடுகளை மற்றைய குழுவினர் அறிந்து கருத்துப் பகிர இடமளியுங்கள்.
- பாத்திர இயல்புக்கும், மாணவரின் திட்டத்திற்குமுள்ள ஒருமைப்பாடு பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கருத்துக்களை அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- தளவடிவம்.
- மெய்நிலை.
- மாதிரிகை.


**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- ஆரொடு நோகேன் நாடக எழுத்துரு.
- ஒப்பனைப் பொருள்கள்.
- ஒப்பனை தொடர்பான நூல்கள்.
- ஒளிப்படங்கள்.
- கணினி.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஒவ்வொரு பாத்திரங்களுக்கும் ஒவ்வொரு விதமான ஒப்பனை தேவை என்பதை அறிந்திருப்பார்.
- புறவாரியான அழகுபடுத்தல்களிற் கவனம் செலுத்துவார்.
- ஒப்பனையின்போது கவனிக்க வேண்டிய விடயங்களை முன்வைப்பார்.
- ஒப்பனைப் பொருள்களை அட்டவணைப்படுத்துவார்.
- ஒப்பனையின் வகைப்பாடுகளைப் பட்டியலிடுவார்.

**உசாத்துணை நூல்கள்:**

- ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- ஈழத்து ஒப்பனைக் கலை - கலாநிதி சி. பாலசுந்தரம்.





**தேர்ச்சி 3.0 :** நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.6 :** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.6.4 :** "துணைக்கலைகளை வடிவமைப்பதற்குக் கணினியைப் பயன்படுத்துவோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- விதந்துரைக்கப் பெற்ற எழுத்துருவுக்குப் பொருத்தமானவாறு பின்வரும் துணைக்கலை அம்சங்களின் வடிவமைப்பினைத் திட்ட மிடுவார் (மேடைப் பொருள்கள், வேட உடை, ஒப்பனை).
- துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுதலில் அரங்க வெளி செல்வாக்குச் செலுத்துவதை அறிந்து கொண்டிருப்பார்.
- கணினி மென்பொருள்களைப் பயன்படுத்தித் துணைக்கலை அம்சங்களை இலகுவாக ஆக்கிக் கொள்ள முடியும் என்பதனை அறிந்திருப்பார்.
- அரங்கின் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுதலிலும் தயாரிப்பதிலும் கணினியைப் பயன்படுத்திப் பார்ப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு பொருத்தமான கற்பித்தல் முறைமையைத் தெரிந்தெடுத்துச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
  * கணினி இன்று பல்வேறு செயற்பாடுகளையும் இலகுபடுத்தியுள்ளது.
  * அரங்கின் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுவதில் கணினி அதிக முன்னேற்றத் தினை வழங்கவல்லது.
  * கணினியினூடான இணையத் தளப் பயன்பாட்டின் மூலம் துணைக்கலைகள் அனைத்தினதும் சர்வதேச மாதிரிகளைப் பார்வையிட முடியும். (உ+ம்:- Google Image)
  * காட்சி விதானிப்பு, வேடஉடை, ஒப்படை, மேடைப் பொருள் ஆக்கம் போன்றவற்றினைத் திட்டமிடுவதற்கும் அது பற்றிய காட்டுருவைத் தயாரித்துக் கொள்வதற்கும் வர்ணக் கலவைகள், அவற்றின் பொருத்தங்களைச் செய்து பார்த்துக் கற்றுக் கொள்வதற்கும் கணினியைப் பயன்படுத்த முடியும். (உ+ம்:- painting, Photo shop)
  * ஒளி, ஒலி விதானிப்புக்களில் கணினியின் பயன்பாடு இன்று அதிகரித்துள்ளது. ஒளித் தொழினுட்பத்தினைக் கணினி மென்பொருளுடன் இணைத்து, ஒளிக்குறைப்பான் ஆளிகள், வர்ணக்கலப்பு வேலைகள் அனைத்தையும் 'நிகழ்ச்சிப்படுத்தி' அதனைத் தானியங்கித் தன்மையுடன் இயங்கச் செய்யமுடியும். நகரும் பொட்டொளிகள் கூட அவ்வாறு இயக்கு விக்கப்படுகின்றன. அவ்வாறே ஒலியானது நன்கு சமநிலைப்படுத்தப்படவும், செதுக்கப் படவும், தொலைவிற் கேட்கப்படவும், நுண்தன்மையுடன் உள்வாங்கப்படவும், ஒலிப்பதிவு செய்யப்படவும் பல்வேறு மென்பொருள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்படி விடங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்க்கண்டவாறோ அன்றேல் உங்களுக்குத் தெரிந்த வேறு வகையிலோ திட்டமிடுங்கள்.


- I.C.T. ஆசிரியரின் உதவியுடன் மாணவர்களைக் கணினிக் கூடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- இணையத் தளத்தினைத் திறந்து Google அன்றேல் வேறு தேடும் பொறியினூடாக வேட உடை, ஒப்பனை, மேடைப் பொருள் போன்ற விடயங்களை 'Image' பகுதி வழியாகத் தேடுங்கள். அதன் மூலம் வரும் மாதிரிகைகளைப் (Samples) பார்வையிடச் செய்து கலந்துரையாடுங்கள்.

- Painting பகுதியைக் கிளிக் செய்து, வர்ணங்களைக் கலவை செய்தும், மாதிரிகளை வரைந்தும் காட்சிகளை உருவாக்கக் கற்றுக் கொடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, வெவ்வேறு விடயப் பொருள்களை முன்வைத்துக் கணினியில் அவற்றினை உருவாக்கும் வகையிற் கலந்துரையாடுங்கள்.
- இணையத் தளத்தின் மூலம் அன்றேல் அருகில் இருக்கக்கூடிய கலையகத்திற்கு (Audio/ Video-Studio) மாணவர்களை அழைத்துச் சென்று கணினி மூலம் ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, செவ்விதாக்கம் (Editing) போன்றவற்றினை மேற்கொள்வதனைப் பார்வையிடச் செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- கணினி மென்பொருள்.
- தேடும்பொறி பங்களிப்பு.
- ஒளிக்குறைப்பான்.
- வர்ணக்கலப்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இணையத் தளங்கள்.
- Intel teach program (Intel) போன்ற கையேடு / நூல்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- மேடைப் பொருள் ஆக்குதல், உடை விதானிப்பு, ஒப்பனை தொடர்பில் படைப்பாக்கற்றிறனை வெளிப்படுத்துவார்.
- அவற்றை வடிவமைப்பதற்கான நவீன சாத்தியப்பாடுகளை எடுத்துரைப்பார்.
- அரங்கின் துணைச் சாதனங்களை வடிவமைப்பதிற் கணினி வகிக்கும் இடத்தினைக் கூறுவார்.
- அரங்கின் துணைச் சாதனங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்படும் கணினி மென்பொருள்களை இனங்காண்பார்.
- கணினி கற்பதில் விருப்பம் காட்டுவார்.





**தேர்ச்சி 3.0** : நாடகக் கொள்நெறிகள் நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.7** : பொருத்தமான அரங்க உத்திகளைக் கையாண்டு நாடகத்தைத் தயாரிப்பதற்கான திட்டமிடலை மேற்கொள்ளக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 3.7** : " விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை நாடகமாகத் தயாரிப்பதற்குத் திட்டமிடுவோம்"

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்** :
- நாடகத் தயாரிப்பிற்கான படிமுறைகளைக் கூறுவார்.
- நடிகர் தெரிவு நுட்பங்களைப் பிரயோகிப்பார்.
- நாடக ஒத்திகையை நடத்துவதில் அனுபவம் பெற்றிருப்பார்.
- எதனையும் திட்டமிட்டுச் செயலாற்றும் பண்பினை வெளிப்படுத்துவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு நாடகத் தயாரிப்பினைத் திட்டமிட வழிப் படுத்துங்கள்.
  - * ஆற்றுகை என்பது ஓர் நிகழ்கலை வடிவம் ஆகும்.
  - * ஆற்றுகையில் நடிகனே பிரதான மூலகம் ஆவான்.
  - * எழுத்துரு தெரிவு முதல் ஆற்றுகை வரையில், நாடகத் தயாரிப்பு பல படிமுறைகளைக் கொண்டது.
  - * பாத்திரப் பொருத்தமுடைய நடிகரைத் தெரிவு செய்வது நாடகத் தயாரிப்பின் 50% ஐ பூர்த்தி செய்யும்.
  - * நடிகரைப் பல்வேறு நுட்பங்களின் அடிப்படையிற் தெரிவு செய்யலாம்.
  - * ஆற்றுகையை முழுமை பெறச் செய்வதற்கு நெறியாளர் அவசியம்.
  - * பல்வேறு துறைசார் கலைஞர்களின் பங்களிப்பும், பல்வேறு கலைகளின் இணைப்பும் ஆற்றுகையை முழுமை பெறச் செய்யும்.
- விதிக்கப் பெற்ற நாடக எழுத்துருவான குழந்தை ம. சண்முகலிங்கத்தின் 'ஆரொடு நோகேன்' நாடகத்தைத் தயாரிப்பதற்கான படிமுறைகளை அறிமுகஞ் செய்யுங்கள்.
  - (1) நடிகர் தெரிவும் பாத்திரத் தெரிவும் (Try outs and Casting).
  - (2) ஒத்திகைகள்.
  - (3) ஆற்றுகை.
- 'ஆரொடு நோகேன்' எழுத்துருவிலிருந்து நடிகர் தெரிவையும் பாத்திரத் தெரிவையும் மாணவர்கள் மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பாத்திரத் தெரிவு நுட்பங்களைக் கைக்கொள்ள அறிவுறுத்துங்கள். அவை:-

| திறந்த தெரிவு | மூடிய / மறைமுகத் தெரிவு | சல்லடைத் தெரிவு |
|---|---|---|
| அனைத்து நடிகர்களினதும் முன்னிலையில் தெரிவு இடம் பெறும் (Open try outs). | நெறியாளர், தயாரிப்பாளர் முன்னிலையில், நடிகர் களைத் தனித்தனியாக அழைத்துத் தெரிவு செய்தல் (Closed try outs). | ஒரு பாத்திரத்தின் ஊடாக இன்னொரு பாத்திரத் தினைத் தெரிவு செய்தல் (Screening try outs). |

- நியம அரங்கிற்கு மாறாக நியமமில் அரங்கில் நடிகர் தெரிவிற்காக ஊமம், புதிதளித்தல் போன்ற நுட்பங்கள் பயன்படுத்தப் பெறுவதைத் தெரியப்படுத்துங்கள்.
- பாத்திரத் தெரிவின்போது பின்வருமாறான பாத்திரப் பண்புகளைக் கவனத்திற் கொள்ளுமாறு வலியுறுத்துங்கள் (மாணவர்களது செயற்பாட்டைப் பரிசீலித்து ஆலோசனை வழங்குங்கள்).

| பாத்திரப் பண்புகள் | | |
|---|---|---|
| பௌதிகக் குணாம்சங்கள் | உளவியற் குணாம்சங்கள் | சமூகவியற் குணாம்சங்கள் |
| • வயது<br>• பால்<br>• நிறம்<br>• உயரம்<br>• பருமன் | • பாத்திர மனநிலை<br>• நடத்தைகள்<br>• பாத்திரம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்<br>• விருப்பு வெறுப்புக்கள்<br>• பழக்கவழக்கங்கள் | • தொழில்<br>• அந்தஸ்து<br>• சமயம் |

- மாணவர்களை ஒத்திகையில் ஈடுபடுத்திப் பல்வேறு ஒத்திகைகள் குறித்தும் சொல்விளக்கம் பெற வாய்ப்பளியுங்கள்.
  - * வாசிப்பு, மனன ஒத்திகை.
  - * நகர்வு, வடிவமைப்பு ஒத்திகை, செயல் ஒத்திகை (Blocking).
  - * இணைப்பாக்கம் (Composition).
  - * மெருகூட்டுதல் ஒத்திகை - பாத்திரப்படைப்பு (Pholishing).
  - * தொழினுட்ப ஒத்திகை (technical Rehersal).
  - * இறுதி ஒத்திகை (வெள்ளுடுப்பு ஒத்திகை).
  - * ஆற்றுகை.
- ஆற்றுகையின்போது மேடை முகாமையாளர், எடுத்துச் சொல்லி, காட்சி விதானிப்பாளர், ஒளிவிதானிப்பாளர், ஒலிவிதானிப்பாளர், வேட உடை விதானிப்பாளர், ஒப்பனையாளர், இசையமைப்பாளர் ஆகியோரின் பணிகளது இன்றியமையாமையை உணர்த்துங்கள்.
- அவர்களது பணிகளை ஏற்றுச் செய்ய மாணவர்களை அறிவுறுத்துங்கள். அவர்களது பணிகள் குறித்துத் திட்டமிட வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- நிகழ்கலை.
- நியம, நியமமில் அரங்கு.
- நகர்வு வடிவமைப்பு.
- இணைப்பாக்கம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- ஆரொடு நோகேன் - நாடக எழுத்துரு.
- இறுவட்டு.
- A4 தாள்.
- டிமைன் தாள்.
- அளவுகோல்.
- மாக்கர்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடகத் தயாரிப்புப் படிமுறைகளைக் கூறுவார்.
- நடிகர் தெரிவு நுட்பங்களைப் பயன்படுத்தித் தெரிவை மேற்கொள்வார்.
- ஒத்திகைகளை நிகழ்த்திக் காட்டுவார்.
- முறைமைசார் நாடகத் தயாரிப்பு அனுபவத்தை வெளிப்படுத்துவார்.
- ஆற்றுகையைத் திட்டமிட்டு நிகழ்த்துவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஓர் நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்.
- நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - சே. இராமானுஜம்.
- நாடகம் நாட்டாரியற் சிந்தனைகள் - சு. வித்தியானந்தன்.
- நாடகத் தொழில் நுணுக்கக் காட்சியமைப்பு - இரா. இராசு.

**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.1 :** இலங்கையில் நாடகக் கலையின் வரலாற்றுடன் தொடர்புடைய தொடக்க நிலைகளைப் பயின்று அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை அடையாளப்படுத்தக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு 4.1 :** “ வேட்டைத் திருவிழா, குளுத்தி, ரட்டயகும ஆகியவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளைப் பயில்வோம்”

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- சடங்குகளைப் பார்க்கும் ஆர்வமுடையவராக இருப்பார்.
- சடங்குகளின் நம்பிக்கைகளை உணர்ந்தவராக இருப்பார்.
- சடங்குகளிலுள்ள அரங்காற்றுகைப் பண்புகளைக் கூறுவார்.
- வேட்டைத் திருவிழா, குளுத்தி, ரட்டயகும என்பவற்றின் நிகழ்த்து முறைகளை விவரிப்பார்.
- பண்பாட்டுப் பரிச்சயத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- வேட்டைத் திருவிழா, குளுத்தி, ரட்டயகும போன்ற நாடகம் சார் சமயச் சடங்குகளைப் பார்க்க வாய்ப்பளியுங்கள்.
- அதிற் பொதிந்துள்ள நம்பிக்கை குறித்துக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- வேட்டைத் திருவிழா, குளுத்தி, ரட்டயகும என்பவற்றைப் போலச் செய்ய வழிப்படுத்துங்கள்.
- அந்நிகழ்த்துகையிலுள்ள கூறுகளை ஆராய்ந்து பார்க்கத் தூண்டுங்கள்.
- குறித்த சடங்குகளிற் கையாளப் பெறுகின்ற பொருள்களைச் சேகரித்து வகுப்பறையில் அவற்றிற்கான சூழமைவை உருவாக்க ஏற்பாடு செய்யுங்கள்.
- அச் சடங்குகளின் பிரதான பண்புகளுக்கும் நாடகத்திற்கும் இடையிலான தொடர்பு குறித்து கவனத்தைச் செலுத்தச் செய்யுங்கள்.
- இவற்றிற்கு ஊடாக நாடகத்திற்கும் நாடகம்சார் சமயச் சடங்குகளிற்கும் இடையிலான ஒத்த, வேறுபட்ட பண்புக் கூறுகள் பற்றித் தெளிவுபடுத்துங்கள்.
- பாடச் செயற்பாடுகளைக் கட்டியெழுப்பக் கலந்துரையாடல்கள், கள ஆய்வு, விவாதம், போலச் செய்தல் போன்ற முறையியல்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதைக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- சடங்கு.
- அரங்காற்றுகை.
- நம்பிக்கை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- சடங்குகள் தொடர்பான இறுவட்டுக்கள்.
- ஒளிப்படங்கள்.
- சடங்குப் பாடல்கள்.
- சடங்கிற் பயன்படுத்தப் பெறும் பொருள்கள்.
- இசைக்கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- சடங்குகள் நிகழ்த்தப்படுவதன் பின்னணியை விளக்குவார்.
- வேட்டைத் திருவிழா, குளுத்தி என்பவற்றைப் போலச் செய்வார்.
- சடங்குகளின் முக்கிய பண்புகளை எடுத்துரைப்பார்.
- சடங்குகள் நாடகத்துடன் கொண்டுள்ள தொடர்பை முன்வைப்பார்.
- சடங்குகளை மதிப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**

- சடங்கிலிருந்து நாடகம் வரை - சி. மௌனகுரு.
- மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும் - மகேஸ்வரலிங்கம்.
- ஈழத்து தமிழ் நாடக அரங்கு - சி. மௌனகுரு.



**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2 :** நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் சமூக பண்பாட்டு, வரலாற்று அம்சங்களை அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 4.2 :** ''பறைமேளக் கூத்து, ஒயிலாட்டம், சொக்கறி என்பவற்றைப் பயில்வோம்''

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- நாட்டார் ஆற்றுகைக் கலைகளை அறிந்து கூறுவார்.
- நாட்டார் ஆற்றுகைக் கலைகளின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நாட்டார் கலைகளை நயப்பார்.
- நாட்டார் கலைகளைப் பயிலுவதில் விருப்பம் காட்டுவார்.
- நாட்டார் கலை வடிவங்களைப் பேணிப் பாதுகாக்க முற்படுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- நாட்டார் ஆற்றுகைக் கலைகளான பறைமேளக் கூத்து, ஒயிலாட்டம், சொக்கறி என்பன குறித்துப் பின்வரும் விடயங்களை மாணவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர் பார்க்கப் பெறுகின்றது.
  * அவற்றின் சமூக பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணி.
  * நிகழ்த்தப் பெறும் இடங்கள்.
  * வேட உடை ஒப்பனை.
  * நிகழ்த்து முறை.
  * இடம்பெறும் பாத்திரங்கள்.
- மூன்று பாடவேளைகளுக்கு ஏற்றதாய் இப்பாடப்பகுதியின் கற்றல் - கற்பித்தல் முறை யியலைத் திட்டமிடுங்கள்.
- தரம் 10, 11 முன்னைய பாடத்திட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளைத் துணையாகப் பயன்படுத்துங்கள்.
- இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி, இந்நாட்டார் ஆற்றுகைக் கலைகளை ஆற்றுகை செய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- பாடசாலையின் விழாக்கள், மன்ற நிகழ்வுகள் என்பவற்றை இதற்கான சந்தர்ப்பங்களாகக் கொள்ளுங்கள்.
- குறித்த நாட்டார் ஆற்றுகைக் கலைகள் வழியாக அவற்றை நிகழ்த்துகின்ற சமூகங்கள் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்ள வழிசெய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- நாட்டார் கலைகள்.
- பண்பாடு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இறுவட்டுக்கள்.
- ஒளிப்படங்கள்.
- இசைக்கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாட்டார் ஆற்றுகைக் கலைகளைக் குறிப்பிடுவார்.
- நாட்டார் கலைகளின் சில பகுதிகளை ஆற்றிக் காட்டுவார்.
- பறைமேளக் கூத்து, ஒயிலாட்டம், சொக்கறி என்பவற்றின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை எடுத்துரைப்பார்.

- நாட்டார் கலை வடிவங்களைப் பார்ப்பதில் விருப்பம் காட்டுவார்.
- நாட்டார் கலை வடிவங்களிற் காணப்பெறும் சமூகக் கூட்டுணர்வை மதிப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**


- சிங்கள பாரம்பரிய அரங்கு - கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை.
- நாட்டுப்புறக் கலைகள் - முனைவர் ஆறு. இராமநாதன்.
- சிங்கள கிராமிய நாடகம் - எதிரிவீர சரத்சந்திர.
- பழையதும் புதியதும் - கலாநிதி சி. மௌனகுரு.
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - கலாநிதி சி. மௌனகுரு.




சொக்கறி



**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3 :** இலங்கையில் பயில்நிலையில் உள்ள பிரதேசக் கூத்து மரபு பற்றி எடுத்துரைக்க வல்லவர் ஆவார்.

**செயற்பாடு 4.3 :** "இலங்கையில் பயில்நிலையில் உள்ள பிரதேசக் கூத்துக்களை அறிந்து கொள்வோம்"

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**
- இலங்கையில் தமிழர் வாழ்கின்ற பிரதேசங்களிற் தனித்துவமான கலைவடிவங்கள் உண்டு என்பதை அறிந்திருப்பார்.
- மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், மலையகம் போன்ற பிரதேசங்களின் கூத்துகளைத் தெரிந்து கொள்வார்.
- கூத்து மரபிற்குட் காணப்படும் ஒற்றுமையையும் பண்பாட்டையும் தெரிந்து கூறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு கலந்துரையாடுங்கள்.
  - இலங்கையில் தமிழர்கள் வாழுகின்ற பிரதேசம் பல்வேறு சுதேச பண்பாட்டம்சங்களையும் தனித்துவங்களையும் கொண்டு விளங்குகின்றது.
  - கூத்துக்கள் தமிழ் மக்களின் மரபு வழியான நாடக வடிவங்கள்.
  - மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், மலையகம் போன்ற பிரதேசங்களிற் கூத்துக்கள் பயிலப்பட்டு வருகின்றன.
  - ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் தனித்துவமான கூத்து வடிவங்கள் உள்ளன.

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்ட வாறோ, அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

## செயற்பாடு - 1
- உங்களது பிரதேசம் சார்ந்த அன்றேல் கிடைக்கக்கூடிய கூத்து ஒன்றின் காணொளியை மாணவர்களைப் பார்வையிடச் செய்யுங்கள்.
- அதன் மனப்பதிவினை அடிப்படையாகக் கொண்டு கூத்தில் அடங்கியுள்ள விடயங்களை முன்வைத்தும், கலந்துரையாடியும் பட்டியலிடுங்கள்.
  * கூத்துக்கள் எமது மரபுவழி நாடகங்கள்.
  * இவை ஆடல், பாடல், உரையாடல் மூலமாகக் கதை சொல்லும் பண்பினைக் கொண்டவை.
  * கூத்துக்கள் தனியே பொழுதுபோக்குக்காக ஆடப்பட்டவையன்று.
  * சமயச் சடங்குகளோடும், சமூக பண்பாட்டு அம்சங்களோடும் இரண்டறக் கலந்தவை.
  * பண்பாட்டின் அடையாளமாகவும் அவை விளங்குகின்றன.
  * கூத்துக்கள் எடுத்துரைக்கும் பண்பினை உடையவை.
  * இவற்றின் நடிப்பு, வேட உடை, ஒப்பனை அனைத்தும் மோடிமைப் பண்பினைக் கொண்டவை.
  * பெரும்பாலும் புராண, இதிகாச, வரலாற்றுக் கதைகளே கூத்துக்களாக நிகழ்த்தப் படுகின்றன.
  * சல்லரியும், தோற்கருவிகளும் இன்றியமையாத இசைக் கருவிகளாகப் பயன்படுத்தப் படுகின்றன.
  * கூத்தினை நெறிப்படுத்துபவர் 'அண்ணாவியார்' என அழைக்கப்படுவார்.

* அண்ணாவியார், மத்தளமடிப்போர், பிற்பாட்டுப்பாடுவோர், சல்லரி தட்டுவோர், ஏடு பார்ப்பவர் அனைவரும் இணைந்த தொகுதியினர் ‘சபையோர்’ என அழைக்கப்படு கின்றனர். இவர்களே கூத்தினை வளர்த்துச் செல்பவர்களாகவும் பின்னணிக் கலைஞ ராகவும் இருப்பர்.
* பாரம்பரியமான கூத்தின் அரங்கைக் ‘களரி’ என அழைப்பர். அது பெரும்பாலும் வட்ட வடிவானதாக காணப்படும்.

- ஈழத்தில் கூத்துப் பயிலப்படும் பிரதேசங்களை அறிமுகம் செய்யுங்கள்.
- யாழ்ப்பாணப் பிரதேசக் கூத்துக்கள் எழுதப்பட்ட சுவர்த்தாளைக் காட்சிப்படுத்துங்கள்.
  * வடமோடி.
  * தென்மோடி.
  * வசந்தன்.
  * காத்தவராஜன்.
  * நாட்டை.
- யாழ்பாணத்தில் ஆடப்படும் வடமோடி, தென்மோடி, காத்தவராஜன் கூத்துமரபுகள் பற்றி எழுதப்பட்ட தகவற் குறிப்புக்களை வெவ்வேறு 3 மாணவர்களைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.

**வடமோடி**

* வட்டுக்கோட்டை, அராலி, சுழிபுரப் பகுதிகளில் மட்டும் ஆடப்பட்டு வருகின்றது.
* இராமாயணம், மகாபாரதக் கதைகளே அதிகம் கூத்தாக ஆடப்படுகின்றன.
* பரம்பரை, பரம்பரையாகப் பாத்திரம் ஏற்கும் பாரம்பரியம் இங்கு காணப்படுகின்றது.
* உயர்த்தப்படாத வட்டக்களரியிலேயே அதிகமாக ஆடப்படுகின்றது.
* சபையோர் களரியின் ஒருபுறத்தில் அமர்ந்திருப்பர்.
* ஆடல்கள் கொலுத்தன்மையும் நுட்பமும் மிக்கவை.
* மூன்று காலங்களுக்கும் வேகப்படுத்தும் வழக்கம் உண்டு.
* மட்டக்களப்பு வடமோடிக் கூத்துடன் சில ஒற்றுமைகளையும், சில வேற்றுமைகளையும் கொண்டு காணப்படுகின்றது.
* தர்மபுத்திரன் நாடகம், பப்பிரவாகன், சடாசுரன் வதை போன்றன சில வடமோடிக் கூத்துக் களாகும்.

**தென்மோடி**

* யாழ்ப்பாணக் கரையோரப் பகுதிகளில் அதிகமாகவும், மத்திய பகுதிகளிற் சிற்சில இடங் களிலும் ஆடப்படுகின்றது.
* பூர்வீகத் தென்மோடி மரபில் இருந்து பல மாற்றங்களைப் பெற்றுக் கத்தோலிக்கர்களினால் ஆடப்படுகின்றது.
* நெறிமுறைப்படுத்தப்பட்ட ஆடற்கோலங்கள் குறைவு.
* செம்மையான பாடல் மெட்டுக்கள் விருத்தம், அகவல், கொச்சகம், பரணி, தாழிசை எனப் பல பாவினங்கள் காணப்படுகின்றன.
* கத்தோலிக்க சமயம்சார் கருப்பொருள்களே அதிகம் காணப்பட்டாலும், நாவல்கள், வரலாறுகள், நாடகங்களும் இம்மரபிற் கூத்தாய் எழுதப்பட்டுள்ளன.
* படச்சட்ட மேடைகளிலேயே அதிகம் ஆடப்படுகின்றது.
* ஆர்மோனியம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.
* தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியர், சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை என்பன சில தென்மோடிக் கூத்துக்களாகும்.

**காத்தவராயன் கூத்து / சிந்துநடைக் கூத்து**

* முத்துமாரி அம்மன் வழிபாட்டோடு தொடர்புபட்டது.
* பாடல்களை முதன்மையாக கொண்டது.

* எளிமையான சிந்து வகைப் பாடல்கள் காணப்படுகின்றன.
* பாத்திரங்கள் தம்மைப் படர்க்கையில் அறிமுகம் செய்யும்.
* பெருமளவில் முத்துமாரி அம்மனின் மகன் காத்தவராஜன் கதையே பயிலப்படுகின்றது. சிறிய அளவில் வேறு கதைகளும் ஆடப்படுகின்றன.
* உடுக்கு - இதன் பிரதான இசைக்கருவி.
* பெரும்பாலும் படச்சட்ட மேடைகளிலேயே ஆடப்படுகின்றன.

## செயற்பாடு - 2

- மட்டக்களப்புப் பிரதேசக் கூத்துக்களை அறிமுகம் செய்யுங்கள். அவை தொடர்பான காணொளிகள் கிடைப்பின் அவற்றினைக் காண்பிப்பதன் மூலமோ அன்றேல் அப்பிரதேசக் கூத்துப் பாடல் ஒன்றினைப் பாடிக் காட்டுவதன் மூலமோ பாடப் பிரவேசம் செய்யலாம்.
- மட்டக்களப்புக் கூத்துமரபுகள் எழுதப்பட்ட சுவர்த்தாளைக் காட்சிப்படுத்துங்கள்.
  * வடமோடி.
  * தென்மோடி.
  * வசந்தன்.
  * மகிடி.
  * பறைமேளம்.
- வடமோடி, தென்மோடிக் கூத்து மரபுகளின் இயல்புகளும், வேறுபாடுகளும், எழுதப்பட்ட விடயத்தாள்களைக் காட்சிப்படுத்துங்கள். மாணவர்களை உரத்து வாசிக்கச் செய்து கலந்துரையாடுங்கள்.

### வடமோடி

* மகாபாரத, இராமாயணக் கதைக் கருக்களை அதிகமாக கொண்டு ஆடப்படுவது (வடநாட்டுக்கதை).
* போர், வீரம், வெற்றி தொடர்பான கருப்பொருள்கள் முதன்மைப்படுத்தப்பட்டிருக்கும்.
* ஆடல்கள் வேகமும் விறுவிறுப்பும் கொண்டவை; நுணுக்கம் குறைந்தவை.
* பாடல்கள் இழுத்துப் பாடப்படாது நறுக்கிப் பாடும் தன்மையானது.
* 'கந்தார்த்தம்' என்ற பாடல் மெட்டு அதிமுக்கியத்துவமுடையது.
* நடிகர்களே வரவுப் பாடல்களைப் பாடி ஆடுவர்.
* நடிகர்கள் அரங்கை விட்டுப் போகும்போது 'காலமேற்றுதல்' என்னும் வேகமான ஆடல் காணப்படும்.
* பாரங்கூடிய கிரீடமுடி, கரப்புடை போன்ற பலவும் பயன்படுத்தப்படுகின்றன.
* ஆடப்படும் கூத்துக்களில் - இராம நாடகம், தர்மபுத்திரன் நாடகம், கர்ணன் போர், வாலி வதை, 18ஆம் நாட்போர் என்பவை குறிப்பிடத்தக்கவை.

### தென்மோடி

* காதல், சோகம், காதலில் வெற்றி போன்ற கருப்பொருள்கள் அதிகம் காணப்படுகின்றன.
* இராமாயணம், மகாபாரதத்தினை விட, கிராமியக் கதைகள், கற்பனைக் கதைகள் போன்றவை அதிகம் ஆடப்படுகின்றன.
* ஆடல்கள் நுணுக்கம் கூடியவை.
* பாடல்கள் இழுத்துப் பாடும் தன்மையிலானவை.
* பாத்திர வரவுப் பாடல்கள் சபையோராற் பாடப்படும்.
* காலமேற்றுதல் போன்ற வேகமான ஆடல்கள் இல்லை.
* மத்தளமே பிரதானமான இசைக்கருவி.
* அனுவுத்திரன், அலங்கார ரூபன், நொண்டி நாடகம் போன்ற கூத்துக்கள் இம்மரபில் எழுதப்பெற்ற குறிப்பிடத்தக்க கூத்துக்கள் ஆகும்.

## செயற்பாடு - 3

- வடமோடி தென்மோடிக் கூத்துக்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனங்கண்டு பட்டியலிடச் செய்யுங்கள்.
    * மன்னார், முல்லைத்தீவுப் பிரதேசக் கூத்துக்களை அறிமுகம் செய்யுங்கள்.
        - காணொளி மூலம் அன்றேல் கூத்துப்பாடல் ஒன்றினைப் பாடிப் பாடப்பிரவேசம் செய்யுங்கள்.
    * மாணவர்களை 3 குழுக்களாகப் பிரியுங்கள்.
    * ஒவ்வொரு குழுவினருக்கும் வடபாங்கு, தென்பாங்கு, கோவலன் கூத்துக்களில் ஒவ்வொன்றினை ஒவ்வொரு குழுவுக்கு வழங்குங்கள்.
    * அக்கூத்து மரபுகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து வெளிப்படுத்தப் பணியுங்கள். உதவியாகத் தகவற் குறிப்புக்களையும் நூல்களையும் வழங்குங்கள்.
    * குழுவாகத் தொகுத்த விடயங்களை அறிக்கை செய்யப் பணியுங்கள்.
    * கூத்துக்கள் பற்றிய முக்கிய விடயங்களை வலியுறுத்திக் கலந்துரையாடச் செய்யுங்கள்.

### வடபாங்கு

* மன்னார்ப் பிரதேசப் பாரம்பரிய கூத்து வடிவம்.
* யாழ்ப்பாணப் பாங்கு என்றும் அழைக்கப்படுகின்றது.
* யாழ்ப்பாணத் தென்மோடிச் சாயலை அதிகமாகக் கொண்டது.
* கிறிஸ்தவக் கதைகளே இம்மரபில் அதிகம் ஆடப்படுகின்றன.
* புலசந்தோர் என்னும் பாத்திரம், கதைச் சுருக்கத்தினை அறிமுகம் செய்யும்.
* காப்புப் பாடல் வெண்பாவிற் பாடப்படும்.
* பாத்திரம் ஒவ்வொரு முறை மேடைக்கு வரும்போதும் வரவுப் பாடல் பாடப்படும்.
* டோலக், மிருதங்கம், ஹார்மோனியம் போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

### தென்பாங்கு

* மன்னாருக்குரிய தனித்துவமான கூத்து மரபு.
* மாதோட்டப் பாங்கு என்றும் அழைக்கப்படுகிறது.
* நிறுதிட்டமான ஆடல் மரபுகளைக் கொண்டது.
* தனித்துவமான தெம்மாங்குப் பண்புடைய இசைமரபு காணப்படும்.
* கிறிஸ்தவர் கதைகள் மட்டுமன்றி, இராமாயணம், மகாபாரதக் கதைகளும் கூத்தாக எழுதப் பட்டுள்ளன.
* காப்பு, விருத்தமாகப் பாடப்படும்.
* டோலக், மிருதங்கம், ஹார்மோனியம் ஆகிய இசைகருவிகள் அதிகம் பயன்படுத்தப் படுகின்றன.

### கோவலன் கூத்து

* முல்லைத்தீவுப் பிரதேசத்துக்குரிய தனித்துவமான கூத்துமரபு.
* கண்ணகி அம்மன் வழிபாட்டோடு தொடர்புடையது.
* வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் ஆடல், பாடற் சாயல்கள் காணப்படுகின்றன.
* பாடல்கள் அதிகம் தென்மோடிச் சாயலை உடையவை.
* 'வஞ்சிப்பத்தன்' என்னும் பாத்திரத்தின் ஆடற்கோலம் தனித்துவமானதும் வேகமும் விறுவிறுப்பும் கொண்டது.
* மத்தளம், மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.
* இதனை 'முல்லை மோடி' என்றும் தற்போது அழைக்கின்றனர்.

## செயற்பாடு - 4

- மலையகக் கூத்துக்களான காமன்கூத்து, பொன்னர் சங்கர், அர்ச்சுனன் தபசு ஆகியவற்றை அறிமுகம் செய்யுங்கள். காணொளி மூலமான கவன ஈர்ப்பு பொருத்தமானது.
- முன்னாயத்தம் செய்த மூன்று மாணவர்களைக் கொண்டு மூன்று வகைக் கூத்துக்கள் பற்றியும் பேச்சு நிகழ்த்துவதற்குப் பணியுங்கள்.
- ஏனைய மாணவர்கள் அவற்றினை அவதானித்து அவை பற்றிக் கருத்துக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் வகையில் அக்கூத்துக்கள் பற்றிய தகவல்களை முதன்மைப்படுத்திக் கலந்துரை யாடுங்கள்.

**காமன் கூத்து**

* மலையகத்தின் தேசியக்கூத்து என அழைக்கப்படுகிறது.
* காமன் பண்டிகையுடன் தொடர்புபட்டது.
* மாசி, பங்குனி மாதங்களில் நிகழ்த்தப்படும்.
* மன்மதன் - ரதியுடன் தொடர்புடைய கதையே பிரதான கதைப்பொருள்.
* தெம்மாங்குப் பண்புடைய லாவணிப் பாடல்கள் இக்கூத்திற் பயன்படும்.
* தப்பு பிரதான இசைக்கருவி.
* ஆடப்படுவதற்கு நிரந்தரமான அரங்கு பயன்படுத்தப்படுவதில்லை. பல்வேறு களங்களிலும் காட்சி நடைபெறும்.

**அர்ச்சுனன் தபசு:**

* திரௌபதி அம்மன் சடங்குடன் தொடர்புபட்டது.
* அர்ச்சுனனின் தவநிலைக் காட்சி முக்கியமானது.
* இதற்கென உயர்த்தப் பெற்ற 40 அடி தவசி மரம் நடப்படும்.
* சிந்து நடைக் கூத்தினை ஒத்த லாவணிப் பாடல்களிலானது.
* தப்பு பிரதான இசைக்கருவி.

**பொன்னர் சங்கர்**

* குழந்தை வரம் வேண்டி ஆடப்படுவது.
* பாண்டவரின் மறுபிறப்புக் கதையைக் கொண்டது.
* அண்ணமார் வழிபாட்டுடன் தொடர்புடையது.
* 'தப்பு' பிரதான இசைக்கருவி.

- எல்லாப் பிரதேசக் கூத்து மரபுகள் பற்றியும் மீள நோக்கிக் கலந்துரையாடுங்கள். கூத்துக்களின்,
  - ஆடல்.
  - பாடல்.
  - இசைக்கருவிகள்.
  - அளிக்கை முறை.
  - களரி.
  - வேட உடை ஒப்பனை.
  - கதைப்பொருள்.

  போன்ற விடயங்களை முன்வைத்து ஒப்பிடச் செய்யுங்கள். ஒற்றுமைகளையும் வேற்றுமை களையும் கண்டறிய செய்யுங்கள்.

- தேவையான குறிப்புக்களை வழங்கித் தகவல்களைக் குறிக்கச் செய்யுங்கள்.

**முதன்மைப் பதங்கள்** :
- பயில்நிலை.
- மரபுவழி.
- தனித்துவம்.
- மோடிமைப் பண்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- கூத்துக்களின் காணொளி இறுவட்டுக்கள்.
- தகவற் குறிப்புக்கள்.
- பிரதேசக் கூத்துக்கள் எழுதப்பட்ட சுவர்த்தாள்கள்.
- கூத்துக்களின் பாத்திர ஒளிப்படங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- பயிலப்பட்டு வரும் பிரதேசக் கூத்து மரபுகளை அறிந்திருப்பார்.
- ஒவ்வொரு கூத்துக்களையும் பற்றிக் குறைந்தது 5 விடயக் குறிப்புக்களையாவது கூறுவார்.
- கூத்து மரபுகளுக்குட் காணபபெறும் ஒற்றுமைகளை இனங்காண்பார்.
- கூத்துப் பாரம்பரியங்களில் பற்றுறுதி கொள்வார்.
- பண்பாட்டின் ஒரு அம்சமாகக் கூத்து இருக்குமென்பதனை ஒத்துக் கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - சி. மௌனகுரு.
- வட இலங்கை நாட்டார் அரங்கு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- மன்னார் மாதோட்ட கத்தோலிக்க நாடகங்கள் - அருட்திரு. செ. அன்புராசா.
- மலையக கூத்துக்கள் - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- வன்னிப் பிரதேசக் கூத்துக்கள் - அருணா செல்லத்துரை.
- ஆற்றுகை -காட்சி 10 - திருமறைக்கலாமன்றம்.





**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.4 :** இலங்கையில் பயில்நிலையில் உள்ள இசை நாடக மரபின் சமூக, பண்பாட்டு ஆற்றுகை அம்சங்களை அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 4.4.1 :** "இலங்கை இசை நாடக வரலாற்றினை அறிந்து கொள்வோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- இலங்கைத் தமிழ் நாடக மரபுகளில் இசை நாடகமும் ஒன்று என்பதனை அறிந்திருப்பார்.
- இசை நாடகத்தினூடாக அறிமுகம் செய்யப்பட்ட விடயங்களை அறிந்து கூறுவார்.
- இசை நாடகத்தின் சுருக்கமான வரலாற்றினைத் தெரிந்து முன்வைப்பார்.
- இசை நாடகப் பாடல்களைப் பாடுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பின்வரும் விடயங்களை மனதிற் கொண்டு கலந்துரையாடுங்கள்.
  - இலங்கையில் இசை நாடக அறிமுகம்.
  - இசை நாடகத்தின் இயல்புகள்.
  - இசை நாடக மரபு அறிமுகம் செய்த புதிய விடயங்கள்.
  - இசை நாடகக் கொள்கைகள்.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்டவாறோ, அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

**படிமுறை - 1**
- 'தொன்று திகழ்ந்திடு இன்று இலங்கிடு சீர்பெறு யாழ்நகரே' என்ற பூதத்தம்பி இசை நாடகப் பாடலைப் பாடிப் பிள்ளைகளையும் பாட வைத்துப் பாடப் பிரவேசம் செய்யுங்கள். (இசை நாடகமொன்றினை நேரடியாகப் பார்வையிடச் செய்வது மிகவும் பொருத்தமானது. சந்தர்ப்பம் கிடைக்கும் பட்சத்தில், மாணவரைப் பார்க்கத் தூண்டுங்கள்.)
- இசை நாடகத்திற்கு வழங்கப் பெறும் வெவ்வேறு பெயர்களை அறிமுகம் செய்யுங்கள்.
  * பார்ஸிய நாடகம்.
  * ஸ்பெஷல் நாடகம்.
  * அண்ணாவி மரபு நாடகம்.
  * கொட்டகைக் கூத்து.
- இசை நாடகத்தினால் ஏராளமானவர்கள் கவரப்பட்டு ஈடுபாடு கொண்டமைக்கு காரணமாகிய, அம்மரபு அறிமுகம் செய்த புதிய விடயங்களை முன்வையுங்கள்.
  * படச்சட்ட மேடை.
  * கொட்டகை அரங்குகள்.
  * வர்ணம் தீட்டப்பட்ட காட்சித் திரைகள்.
  * வாயு விளக்குகள்.
  * பாடுதலும், நடித்தலுமென்ற செழுமையான நடிப்பு முறைமை.
  * பொருத்தப்பாடும் கவர்ச்சியும் மிக்க வேடஉடைகள்.
  * ஹார்மோனியம் போன்ற புதிய இசைக்கருவிகள்.
  * நேரச் சுருக்கம்
  * தொழில்முறைப் பாங்கான குழுமமுறை.

- தமிழ்நாட்டில் இசை நாடகம் பிரபல்யம் பெற்ற முறையைச் சுருக்கமாக அறிமுகம் செய்யுங்கள்.

### படிமுறை - 2

- மயான காண்டத்திலுள்ள 'சிட்டுப்பயல்களே' என்ற இசை நாடகப் பாடலைப் பாட வைத்துப் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- மாணவர்களை 3 குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் வேலைப் படிவத்தினையும், விடயக் குறிப்புக்களையும் வழங்கிக் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**குழு - 1**

தமிழ்நாட்டில் இருந்து இங்கு வந்து இசை நாடகம் ஆடிய பிரபல்யமான இசை நாடகக் கலைஞர்களின் பெயர்களைத் தொகுக்கச் செய்யுங்கள்.

உ+ம்:- வேலுநாயக்கர், செந்திவேல் தேசிகர், கிட்டப்பா, கே. பி. சுந்தராம்பாள், எம். ஆர். கோவிந்தசாமி, சங்கரதாஸ் சுவாமிகள்.

**குழு - 2**

ஈழத்தில் இசை நாடகங்களைச் சிறப்பாக ஆடிய, இசை நாடகக் கலைஞர்களில் முக்கியமான கலைஞர்களின் பெயர்களைத் தொகுக்கச் செய்யுங்கள்.

உ+ம்:- கிருஷ்ணாழ்வார், பொன்னாலைக் கிருஷ்ணன், கைவெட்டி சுந்தரம், கரவெட்டி நற்குணம், வி. வி. வைரமுத்து, கன்னிகா பரமேஸ்வரி.

**குழு - 3**

யாழ்ப்பாணத்தில் ஆரம்ப காலத்தில் இசை நாடகங்கள் ஆடப்பட்ட கொட்டகைகளைக் கண்டறியச் செய்யுங்கள்.

* புத்துவாட்டியார் மடுவம்.
* கொட்டடிக் கறுத்தார் மடுவம்.
* றோயல் தியேட்டர்.
* கொண்டலடி மடுவம்.
* அத்தியடி மடுவம்.

- மாணவர்கள் கண்டறிந்து முன்வைத்த விடயங்களினூடாக இசை நாடகம் இலங்கையிற் பரவிய முறைமையின் வரலாற்று அறிமுகத்தினைத் தொகுப்பாக முன்வையுங்கள்.
  * இசை நாடகம் நாட்டுக்கோட்டைச் செட்டிமாரினால் இலங்கைக்குக் கொண்டு வந்து அறிமுகப்படுத்தப்பட்டது.
  * தொழில் முறை நாடகக் குழுக்களின் மூலமே இங்கு அறிமுகமாகியது.
  * 1919ம் ஆண்டுக்கு முன் இந்திய கலைஞர்கள் மாத்திரமும் 1919-1939க்கு இடைப்பட்ட காலகட்டத்தில் இந்திய கலைஞர்களுடன், ஈழத்துக் கலைஞர்களும், 1939க்குப் பின்னர் ஈழத்தவர்கள் தனித்தும் இசைநாடகங்களை ஆடினர்.
  * இவ்வாறு ஆடத் தொடங்கிய பாரம்பரியத்தில் இருந்து தோன்றிய நடிகமணி வி. வி. வைரமுத்து தனித்துவம் மிக்க கலைஞனாக மேற்கிளம்பியதுடன், இசை நாடக மரபில் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தினார். அவரது 'வசந்த கான சபா' இலங்கை முழுவதிலும் நாடகங்களை மேற்கொண்டது.
  * இவரது வழியில், இரத்தினம், செல்வம் தைரியநாதன் போன்றவர்கள் இசைநாடக மரபிற் தொடர்ந்து ஈடுபட்டனர்.

- இவ்வாறு 18ம் நூற்றாண்டில் அறிமுகமானாலும், ஈழத்தின் மரபுவழி நாடகங்களிலொன்றாக இது கொள்ளப்படுகின்றது.

**முதன்மைப் பதங்கள்** : • கொட்டகை அரங்கு.
• மடுவம்.
• இசைநாடகம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இசை நாடகப் பாடல்கள்.
- பாடல் இறுவட்டுகள்.
- விடயக் குறிப்புக்கள்.
- இசைக் கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- இலங்கையின் மரபுவழி நாடகங்களில் இசை நாடகமும் ஒன்று என்பதனை ஏற்பார்.
- இசை நாடகக் கலைஞர்கள் பற்றி அறிந்து கொள்வார்.
- இசை நாடகத்தின் சுருக்கமான வரலாற்றினைக் கூறுவார்.
- மரபுவழி நாடகங்களின்பாற் பற்றுக் கொள்வார்.
- இசை நாடகப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஈழத்து இசை நாடக வரலாறு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- நடிகமணியின் வாழ்வும் அரங்கும் - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- ஆற்றுகை இதழ் 14, 15.





**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.4 :** இலங்கையில் பயில்நிலையில் உள்ள இசை நாடக மரபின் சமூக, பண்பாட்டு ஆற்றுகை அம்சங்களை அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 4.4.2 :** “ இசை நாடகத்தின் அடிப்படையான அம்சங்களை அறிவோம்”

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- இசை நாடகத்தின் அடிப்படைப் பண்புகளை இனங்காணுவார்.
- இசை நாடகங்களை நயந்துரைப்பார்.
- இசை நாடகப் பாடல்களைப் பாடுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கலந்துரையாடுங்கள்.
    - இசையின் முதன்மை.
    - பாடலே அரங்காக அமைதல்.
    - பாடுதலால் நடித்தல், நடித்தலாற் பாடுதல்.
    - கர்நாடக இசை.
    - ஹார்மோனிய இசைக்கருவி.
    - வர்ணம் தீட்டிய காட்சித்திரைகள்.

மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்ட வாறோ, அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.
- இசை நாடகமொன்றின் பகுதியைக் காணொளி மூலமாக மாணவர்களைப் பார்வையிடச் செய்யுங்கள் (நேரடியாக பார்வையிடுவது மிகவும் சிறந்தது).
- பார்த்தலின் அனுபவத்தினைக் கொண்டு கலந்துரையாடுங்கள்.
- ‘‘நீங்கள் பார்வையிட்ட நாடகம் நவீன நாடகங்களில் இருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது’’ என வினவி அவர்கள் குறிப்பிடும் விடயங்களைப் பட்டியலிடுங்கள்.
- அவர்கள் முன்வைக்கும் விடயங்களில்,
    * இசைநயம்.
    * நடிப்பு.
    * வேட உடை ஒப்பனை.
    * காட்சித்திரைகள்.
    * இசைக் கருவிகளின் பிரயோகம்.

  எனப் பல்வேறுபட்ட விடயங்களில் வேறுபாட்டினை இனங்கண்டு கூறலாம். அவற்றினை அடிப்படையாகக் கொண்டு இசை நாடகத்தின் அடிப்படைப் பண்புகளை முன்வையுங்கள்.
    * இசை நாடகத்தில் அனைத்து விடயங்களும் பாடலினாலேயே நிகழ்த்தப்படுகின்றது. உரையாடல், நடத்தல், தேடுதல், வேட்டையாடுதல், அழுதல், தண்ணீர் அள்ளுதல் என அனைத்தும் பாடலினாலேயே வெளிப்படுத்தப்படுகின்றது.
    * பாடுதலால் நடித்தலும், நடித்தலாற் பாடுதலும் இரண்டற்று ஒன்றுபடுதலிலேயே நடிப்பு சிறப்புப் பெறுகின்றது.
    * சாரீர வளமே (குரல்) இசை நாடகத்தின் மூலதனமாக இருப்பதனால், சுருதி வளத்தையும், இசைஞானத்தினையும் கொண்டவர்களால் மட்டுமே இசை நாடகத்தினைச் சிறப்பாக நடிக்க முடியும்.
    * நவரசங்களையும் வெளிப்படுத்தவல்ல இராகங்கள், இசை மெட்டுக்கள், இந்நாடகங்களில் அதிகம் பயன்படுத்தப்பட்டிருக்கும்.

* பாடல்களுக்கிடையே மிகவும் குறைந்த அளவிலேயே ஊட்டு வசனங்கள் பயன்படுத்தப்படும்.
  உ+ம்:- "நாதா......"
  "ஐயோ! வெட்கமாக இருக்கிறதே"
  "என் செல்வமே ...... நீயா சொல்கிறாய்"
* இசைக் கலைக்குரிய சுருதி, தாளம், இழைமானம், தொனி, குரல் வீச்சுக்கள், பாவம், லயம் என ஒவ்வொரு இசைக்கூறுகளும் நாடகமயப்பட்டு, இசை நாடகங்களிற் பிரயோகிக் கப்படுவதாற் 'பாடலே அரங்காக' இங்கு மாறுகின்றது. பாடலின் கமகங்கள், ஏற்ற இறக்கங்கள், மெட்டுகளின் இயல்போடும், நாடக உணர்வுச் சூழமைவோடும் இணைந்து நின்று உணர்வுகளை வெளிப்படுத்துவதால் இங்கு கேட்கப்படும் பாடல்கள் பார்க்கப்படும் தன்மைக்குரியதாக அரங்கில் மாறுகின்றன.
* மிருதங்கம், தபேலா போன்ற தோற்கருவிகளும் இதற்கு அடிப்படையானதாகும். பாடுதலால் நடித்தல் என்ற அடிப்படையில் நடிப்பில் சற்று மிகையான பாவமும் உணர்வுகளுக்கு அதிகம் அழுத்தம் கொடுக்கின்ற தன்மையும் காணப்படும்.
* காட்சி விதானிப்பாகக் காட்சித் திரைகளே பெருமளவிற் பயன்படுத்தப் பெறும். காடு, அரண்மனை, பூங்கா, தெரு/வீதி, சிறை போன்ற பல்வகைத் திரைகளும் இசை நாடகங் களிற் பயன்படுத்தப்படுகின்றன. முப்பரிமாண வசதி கருதிய வெட்டுத்திரைகளும் இங்கு பயன்படுத்தப்படுகின்றன.
* வேட உடைகளாக மினுங்குகின்ற, பட்டாடைகள், சேலைகள் போன்றவை பயன்படுத்தப் படுகின்றன.
* ஒப்பனை யதார்த்த மாயை நிரம்பிய அழகியல் முதன்மையுடைய தன்மையிற் செய்யப் படுகின்றன.
* இசை நாடகத்தின் கதைகள் பெருமளவிற் புராண இதிகாசக் கதைகளாகவும், நாட்டார் கதைகளாகவுமே காணப்படுகின்றன. சிறிய அளவில் வரலாற்றுக் கதைகளும் காணப்படுகின்றன.
  உ+ம்:- சம்பூரண அரிச்சந்திரா, சத்தியவான் சாவித்திரி, ஸ்ரீவள்ளி, பக்த நந்தனார், கோவலன் கண்ணகி, ஞானசௌந்தரி, பூதத்தம்பி.

- மாணவர்களைப் பொருத்தமான அளவிற் குழுக்களாகப் பிரியுங்கள். இசை நாடகத்தின் அடிப்படை அம்சங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குழுவுக்கு வழங்கி, அவர்கள் பார்த்த நாடகத்தில் அவை எவ்வாறு காணப்படுகின்றன என்பதனைக் கலந்துரையாடிக் கண்டு கொள்ளச் செய்யுங்கள்.
- தெரிந்தெடுக்கப் பெற்ற இசைநாடகக் காட்சியொன்றிற்கு விதானிப்பு மாதிரியைத் தயாரிக்க வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள்** : • காட்சித்திரை, பாடலே அரங்கு, கர்நாடக இசை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- இசை நாடகக் காணொளி.
- இசை நாடகம் பற்றிய தகவற் குறிப்புக்கள்.
- ஒளிப்படங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- இசை நாடகத்தின் இயல்பினை விளங்கி இனங்காண்பார்.
- இசை நாடகத்தின் அடிப்படை அம்சங்களைக் கூறுவார்.
- இசை நாடகத்தின் பண்புகளை எழுதுவார்.
- இசை நாடகங்களைப் பார்ப்பதில் / பயில்வதில் ஆர்வம் கொள்வார்.
- இசை நாடகங்கள் பற்றித் தேடி அறிவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஈழத்து இசை நாடக வரலாறு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும்- காரை செ. சுந்தரம்பிள்ளை.
- ஆற்றுகை இதழ் 2, 14, 15
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி (2008) - தரம் 11.

**தேர்ச்சி 4.0 :** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்4.4 :** இலங்கையில் பயில்நிலையில் உள்ள இசை நாடக மரபின் சமூக, பண்பாட்டு ஆற்றுகை அம்சங்களை அறிந்தவர் ஆவார்.

**செயற்பாடு 4.4.3 :** "இலங்கையின் இசை நாடக ஆளுமைகளை அறிந்து கொள்வோம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- இசை நாடகக் கலைஞர் விவரங்களைத் தேடிக் கொள்வார்.
- இசை நாடகக் கலைஞர்களின் தனித்துவத்தை உணர்வார்.
- இசை நாடகக் கலைஞர்கள்பால் மதிப்பும் மரியாதையுமுடைய வராவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- கீழ்வரும் விடயங்களை மனதிற் கொண்டு கலந்துரையாடுங்கள்.
  - இசை நாடகங்களிற் சிறப்பான ஆளுமைகளை வெளிப்படுத்திய ஈழத்து இசை நாடக ஆளுமையினர்
    - நடிகமணி வி. வி. வைரமுத்து.
    - எம் வி. கிருஷ்ணாழ்வார்.
    - பொன்னாலை கிருஷ்ணன்.
    - செல்வரெத்தினம்.
  - இசை நாடகக் கலைஞர்களின் சிறப்பான ஆளுமைப் பண்புகள்.

மேற்படி விடயங்களை கருத்திற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்ட வாறோ, அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.
- கிடைக்கக்கூடிய இசை நாடகக் கலைஞர்களின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஈழத்தில் இசை நாடகங்களை நிகழ்த்திப் புகழ்பெற்ற கலைஞர்களின் பெயர்களைக் காட்சிப் படுத்துங்கள்.
  - இணுவில் ஏரம்பு சுப்பையா, நாகலிங்கம் சகோதரர்கள், புத்துவாட்டி சின்னத்தம்பி, கொக்குவில் நமசிவாயம், நல்லூர் சுந்தரம்பிள்ளை, அண்ணாவி இராமர், அண்ணாவி பைரவி, அண்ணாவி பெரிய பொடி, எஸ். கே. செல்லையாப்பிள்ளை, கிருஷ்ணாழ்வார், பொன்னாலை கிருஷ்ணன், கந்தவனம், சரவணமுத்து, கன்னிகா பரமேஸ்வரி, கைப்பெட்டி சுந்தரம், கே. எஸ். ஜெயராசா, சி. ரி. செல்வராஜா, எஸ். வி. மாசில்லாமணி, எம். பி. அண்ணாச்சாமி, டி. கே. இரத்தினம், சி. என். செல்வராஜா, மார்க்கண்டு, நற்குணம், வி. வி. வைரமுத்து, தம்பிஜயா சின்னமணி, இரத்தினம், செல்வரெத்தினம், தைரியநாதன்.
- இசை நாடகத் துறையிற் தமது சிறப்பான வெளிப்பாடுகளாற் புகழ்பெற்ற 'முன்மாதிரி' களாகக் கொள்ளத்தக்க சில கலைஞர்களை அறிமுகம் செய்யுங்கள்.
  (1) கிருஷ்ணாழ்வார் - பெண்பாத்திரம், வரகவி.
  (2) பொன்னாலை கிருஷ்ணர் - பபூன்.
  (3) மார்க்கண்டு - இயமன்.
  (4) சரவணமுத்து - நகைச்சுவை - துணைப் பாத்திரம்.
  (5) செல்வரெத்தினம் - பெண் பாத்திரம்.

(6) வி. வி. வைரமுத்து - எல்லா வகையிலும்.

- இசை நாடகங்களுக்குச் சிறப்பாக ஹார்மோனியம் இசைத்த கலைஞர்கள் சிலரை அறிமுகம் செய்யுங்கள்.
  (1) காதர் பாச்சா.
  (2) பிலிப் (ஜோன் கவாஸின் தந்தை).
  (3) ஜோன் கவாஸ்.
- மாணவர்களை 4 குழுக்களாகப் பிரியுங்கள்.
  நடிகமணி வி. வி. வைரமுத்து, கிருஷ்ணாழ்வார், பொன்னாலை கிருஷ்ணன், செல்வரெத்தினம் ஆகிய கலைஞர்களின் பெயர்களைக் குழுவுக்கு ஒன்றாக வழங்குங்கள். அவர்கள் பற்றிய விவரங்களை வழங்கி அவர்களின் தனித்துவங்களை இனங்கண்டு முன் வைப்பதற்குப் பணியுங்கள்.
- மாணவர்களின் முன்வைப்புக்களை முழுமைப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

**(1) நடிகமணி வி. வி. வைரமுத்து**

- ஈழத்தின் இசை நாடகத்துறைக்கு மாபெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்.
- 'வசந்த கான சபா' என்னும் தொழில்முறை நாடக சபையை உருவாக்கி அதன் மூலம் செழுமைமிக்க, ஜனரஞ்சகப் பண்பு மேவிய இசை நாடக முறைமையைப் பயில்வுக்குட்படுத்தியவர்.
- தனது சாரீர வளத்தாலும், இசைஞானத்தாலும் நடிப்புத் திறனாலும், மனிதப் பண்பினாலும் இசை நாடகக் கலைஞனுக்குரிய 'முன்மாதிரி' (Roll Model) யாகத் திகழ்ந்தவர்.
- இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று இசை நாடகங்களை நிகழ்த்தியதனூடாக அதனை வளர்த்தவர்.
- பல சிறந்த இசை நாடகக் கலைஞர்களை ஒன்றிணைத்து 'ஸ்பெஷல்' நாடகப் பாரம்பரியத்திற்குத் தொடர்ச்சியை ஏற்படுத்தியவர்.
- அரிச்சந்திரன், நந்தனார், அந்திராசி, சத்தியவான் பாத்திரங்களை மிகச் சிறப்பாக நடித்துப் புகழ்பெற்றவர்.
- தனக்குப் பின் இரத்தினம், செல்வம், தைரியநாதன் என இசை நாடகப் பரம்பரையினை உருவாக்கினார்.
- இசை நாடகத்திற்குரிய 'பாடுதலால் நடித்தல்' என்பதனை மிகச் சிறந்த நுட்பத்துடன் குரல் வளத்தாலும், உடல்மொழிகளாலும், உணர்ச்சிப் பிரவாகங்களாலும் வெளிப் படுத்தி 'இசை நாடகம் இப்படித்தான் இருக்க வேண்டும்' என எண்ணும்படியான பரிமாணத்தினைத் தோற்றுவித்தவர்.

**(2) எம். வி. கிருஷ்ணாழ்வார்**

- பெண் பாத்திரங்களை மிகச் சிறப்பாகச் சித்திரிக்கவல்லவராக இருந்தார்.
- 'சுபத்திரை' பாத்திரத்தைச் சிறப்பாக ஆடி 'சுபத்திரை ஆழ்வார்' என்றும் கிருஷ்ணன் பாத்திரத்தினை ஆடிக் 'கிருஷ்ணாழ்வார்' என்றும் சிறப்பிக்கப்பட்டவர்.
- வரகவியாக இருந்து மேடையிலேயே பாடல் இயற்றிப் பாடுந்திறன் கொண்டிருந்தார்.
- இந்தியக் கலைஞர்களோடும் இணைந்து நடித்துப் புகழ்பெற்றவர்.
- இந்தியா, மலேசியா போன்ற நாடுகளுக்கும் சென்று நாடகங்களை நடித்துப் புகழ்பெற்றவர்.
- 'ஈழத்துச் சங்கரதாஸ்' என்றும் புகழ்பெற்றவர்.
- சுபத்திரை, கிருஷ்ணன், பவளக்கொடி, அல்லி, நல்லதங்காள் போன்ற பாத்திரங்களால் அதிகம் புகழப்பட்டார்.

**(3) பொன்னாலைக் கிருஷ்ணன்**

- சுயமாகப் பாடல் இயற்றிப் பாடும் திறன் கொண்டவர்.
- ‘பபூன்’ பாத்திரச் சித்திரிப்பினால் அதிகம் புகழப்பட்டவர்.
- பபூன் பாத்திரந் தாங்கி, சமகால விடயப் பொருள்களை நகைச்சுவையாக, உடன் பாடலாய் இயற்றிப் பாடிப் பலராலும் வரவேற்கப்பட்டவர்.
- இந்தியக் கலைஞர்களுடனும் ஈழத்துக் கலைஞர்களோடும் இணைந்து நடித்தவர்.

**(4) செல்வரெத்தினம் (செல்வம்)**

- பெண் பாத்திரச் சித்திரிப்பினை மிகவும் சிறப்பாக மேற்கொண்டவர்.
- பெண்ணாக நடிப்பதற்குரிய சிறந்த நுட்பங்களைக் கையாண்டவர்.
- நடிகமணி வி. வி. வைரமுத்துவோடு இணைந்து பல நூற்றுக்கணக்கான மேடை களில் நடித்த அனுபவத்தை உடையவர்.
- சந்திரமதி, நல்லதங்காள், சாவித்திரி, அல்லி, ஞானசௌந்தரி போன்ற பாத்திரங் களைத் தனது நடிப்பாற்றலாற் சிறப்பித்தவர்.
- இசை நாடகத்தினைப் பயிற்றுவிக்கக்கூடிய ஆளுமையும் தொழின்முறைத் தேர்ச்சியும் கொண்டவராக இருந்தவர்.

- இன்று வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இசை நாடகக் கலைஞர்களைத் தெரியுமா? என வினவி, அவர்களின் தகவல்களை முழுமைப்படுத்துங்கள்.
  - ரி. தைரியநாதன், சரவணமுத்து, இரத்தினகுமார், சின்னமணி, கலாமணி, இயமன் அப்பா.

- மாணவர்கள் தமது பிரதேசத்தில் வாழுகின்ற இசை நாடகக் கலைஞர்கள் பற்றிய விடயங் களைத் தேடி அறிந்து சேகரித்து வரப் பணியுங்கள்.

- இசை நாடகம், நடிகனின் இயற்கையான சாரீர வளத்திலும், நடிப்புத் திறனிலும், இசைஞானத் திலும் தங்கி இருக்கின்ற கலை வடிவம் என்ற வகையில், இசை நாடகக் கலைஞர்களின் முக்கியத்துவத்தினை வலியுறுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இசை நாடக கலைஞர்களின் ஒளிப்படங்கள்.
- இசை நாடக ஆளுமைகள் பற்றிய குறிப்புக்கள்.
- கலைஞர்களின் பெயர்கள் எழுதப்பட்ட சுவர்த்தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இசை நாடகக் கலைஞர்களின் முக்கியத்துவத்தினை உணர்வார்.
- இசை நாடக மரபின் முக்கியமான ஆளுமைகளாக மிளிர்ந்தவர்களை இனங்கண்டு கூறுவார்.
- நடிகமணி வி. வி. வைரமுத்துவினுடைய முக்கியத்துவத்தினை எடுத்துரைப்பார்.
- இசை நாடகக் கலைஞர்களின் விவரங்களை சேகரிப்பார்.
- இசை நாடகக் கலைஞர்களை மதிப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**

- ஈழத்து இசை நாடக வரலாறு - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- நடிகமணி வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும் - காரை செ. சுந்தரம்பிள்ளை.
- பருத்தித்துறை ஊராம் - பா. இரகுவரன்.
- நினைவு மலர் - கிருஷ்ணாழ்வார்.
  நினைவு மலர் - இரத்தினம்.
  நினைவு மலர் - செல்வம்.

**தேர்ச்சி 5.0 :** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்5.1 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு 5.1.1 :** " ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவை நயப்போம்"

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**
- நாடக எழுத்துருவைத் தனியாகவும், கூட்டாகவும் நயந்துரைப்பார்.
- நாடக எழுத்துருவினூடு சமூகத்தை நோக்குவார்.
- நயத்தல் வழியாக நாடகத்தின் கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பனவற்றை முன்வைப்பார்.
- நாடக எழுத்துருக்களை வாசிப்பதில் விருப்பம் காட்டுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**

- ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவின் கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பவற்றை இனங்கண்டு, அதன்வழியாக எழுத்துருவை நயத்தலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துரு குறித்த முக்கிய விவரங்களை மாணவர்கள் அறியச் செய்ய வேண்டும்.
  - * அது கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப் பெற்றது என்பது.
  - * 1993 ஆம் ஆண்டில் யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்காக எழுதப் பெற்று மேடையிடப் பெற்றது என்பது.
  - * இது யதார்த்தப் பண்பு மேலோங்கி நிற்கும் நாடகமாகும். எனினும் சிறியளவில் மோடிமைப் பண்பும் கலந்துள்ளது. ஆதலால் மோடிமை கலந்த யதார்த்த நாடகம் எனலாம் என்பது.
  - * மத்திய தர வர்க்கத்துக் குடும்பங்கள் மூன்று, இந்நாடகத்தில் எடுத்தாளப்பெற்றுள்ளன என்பது.
  - * கட்டிளமைப் பருவத்து மாணவர்களின் மனவெழுச்சிப் பிரச்சினையைக் கதைப்பொருளாகக் கொண்டது. அதாவது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே நிலவுகின்ற இடைவெளி, பிள்ளைகளைப் புரிந்து கொள்ள இயலாத நிலையைப் பெற்றோருக்குத் தருகிறது. ஆனால் பிள்ளைகள் தம் பெற்றோரைப் புரிந்து கொள்கிறார்கள். எனவேதான் அவர்கள் மீது ஆத்திரம் கொள்ளாது பொறுமையுடன் இருக்கிறார்கள். நாடகத்தின் கரு "தம் பிள்ளைகளின் பாற் கொண்டுள்ள அன்பின் நிமித்தமாய், கல்விக்காகப் பெற்றோர் தம்மையறியாது தாமும் வருந்திப் பிள்ளைகளையும் வருத்தும் நிலை" என்பதாகும்.
  - * இக்கருவைச் சூழவே கதை பின்னப்பட்டுள்ளது. பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளுக்கும் பெற்றோரின் அணுகுமுறைக்கும் இடையிலான உறவும், முரணுமே இந்நாடகத்தினூடே பேசப்பெறும் கதையாகும்.

    "பெற்றோரது அன்பின் இனிய சோகத்தாற் தனது சுயத்திற்கான இடம் மறுக்கப்படுவதாய் ஆதங்கறும் ஷங்கரி, தந்தையின் அன்பின் அதிகார நிலைப்பட்ட வழிநடத்தல் அணுகுமுறையால் அதிருப்தியுறும் ரஜீவ் மற்றும் ஷீலா, பெற்றோரின் அன்பிற் திளைத்தாலும் தம் சுதந்திரமான சிறகடித்தலுக்கு அது போதுமானதாய் இல்லாததை உணர்த்தும் அம்பிகா என யாவரும் இணைந்து, தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற் தம் விருப்பங்களையும் எண்ணங்களையும் பெற்றோருக்குக் குறிப்பால் எடுத்துரைக்க விளைவதே" இந் நாடகத்தின் கதை ஆகும்.

* நாடகாசிரியர் இக்கதையின் சாரத்தை முன்னறி குறிகாட்டல் வழியாக வெளிப்படுத்துகின்றார்.
  "அப்பனுக்கே அப்பனானான்
  அப்பன் சுவாமியானான்"
* நாடகாசிரியர் கதைப்பின்னலின் நகர்த்துகைக்காகப் பிள்ளைகளையும், பாடகர் குழுவையும் உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார்.

மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் - கற்பித்தல் முறையியலைக் கீழ்கண்ட வாறோ, அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.

- 'ஆரொடு நோகேன்' ஆற்றுகையின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- நாடகத்தின் கதை தொடர்பாகச் சுருக்கமாகக் கூறுங்கள். மாணவர்களின் உணர்வுகளைக் கேட்டறியுங்கள்.
- இந்நாடகத்தின் யதார்த்த மற்றும் மோடிமைப் பண்புகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
  குழு I - குடும்பம் 1.
  குழு II - குடும்பம் 2.
  குழு III - குடும்பம் 3.
  குழு IV - பாடகர் குழு.

- கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பவற்றைக் கருத்திற்கொண்டு எழுத்துருவை வாசிப்பதற்கு இடமளியுங்கள்.
- மேற்படி விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடி முன்வைப்புச் செய்வதற்குச் சந்தர்ப்ப மளியுங்கள்.
- கலந்துரையாடல் மூலம் அறிந்து கொண்ட விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்ள இடமளியுங்கள்.
  இவை தவிர, கீழ்வருமாறும் செயற்படுத்தலாம்.
- 'ஆரொடு நோகேன்' எழுத்துருவை ஆற்றுகையாகப் பாடசாலை நிகழ்வுகளில் நிகழ்த்து வதற்கான மாணவர்களின் ஆர்வம் தொடர்பிற் கேட்டறியுங்கள்.
- எழுத்துரு நயத்தலுக்காகப் பொருத்தமான பிற முறைகளையும் பின்பற்றலாம்.

**முதன்மைப் பதங்கள்** :
- கதைப்பின்னல்.
- மோடி.
- நாடக எழுத்துரு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- 'ஆரொடு நோகேன்' - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- A4 தாள்.
- ஆரொடு நோகேன் - ஒளிப்படங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- நாடக எழுத்துருவைத் தனியாகவும் கூட்டாகவும் நயப்பார்.
- நயத்தலினூடாகக் கரு, கதை, கதைப்பின்னல், மோடி என்பவற்றை அறிந்திருப்பார்.
- நாடக எழுத்துருவினூடு சமூகத்தை நோக்குவார்.
- எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்யும் அடிப்படைத் திறன்களைப் பெற்றிருப்பார்.
- பல்வேறு நாடக எழுத்துருக்களைத் தேடி அறிந்து வாசிப்பார்.

**உசாத்துணை நூல்கள்:**
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி 5.0 :** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு 5.1.2 :** "ஆரொடு நோகேன் நாடக எழுத்துருவின் பாத்திரங்கள், மோதுகை மற்றும் மேடைக் குறிப்புகளைப் பகுப்பாய்வு செய்து நயப்போம்"

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**
- 'ஆரொடு நோகேன்' நாடகத்தின் பாத்திரப் படைப்பை ஆராய்ந்து அவற்றின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- நாடக எழுத்துருவிற்கு ஊடாக மேற்கிளம்பும் மோதுகையினை இனங்கண்டு கூறுவார்.
- நாடக எழுத்துருவை விளங்கிக் கொள்வதற்கு மேடைக் குறிப்புக்கள் பங்காற்றியுள்ள விதம் பற்றி விளக்குவார்.
- சமகால வாழ்க்கையுடன் ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரங் களை ஒப்பு நோக்குவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- பாத்திரங்கள்.
- மோதுகை.
- மேடைக் குறிப்புக்கள்.
  என்பன தொடர்பிற் கவனஞ் செலுத்துவது 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துரு தொடர்பில் இங்கு முக்கியம் பெறுகின்றது.
- மூன்று குடும்பங்களிலும் உள்ள பிள்ளைகள் இந்நாடகத்தின் பிரதான பாத்திரங்களாக விளங்குகின்றனர்.
- இந் நாடகப் பாத்திரங்கள் வகை மாதிரியானவையாகும்.
  - பெற்றோரைக் குறிப்பன.
  - பிள்ளைகளைக் குறிப்பன.
  - சமூகத்தைச் சுட்டிநிற்கும் பாடகர் குழு.
- 'ஆரொடு நோகேன்' நாடகப் பாத்திரங்கள் எழுதப்பெற்ற சுவர்த்தாளைக் காட்சிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறையியலைப் பயன்படுத்தி, ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரங்களின் பண்புகளை மாணவர்கள் அறிந்து கொள்ள வகை செய்யுங்கள்.
- நாடகப் பாத்திரங்களைப் பாகமேற்று நடிக்கச் செய்வதன் மூலம் ஏற்கெனவே பெற்ற அனுபவத்தை நினைவுபடுத்துங்கள்.
- குறித்த நாடகத்தில் மேடைக் குறிப்புக்கள் கையாளப் பெற்றுள்ள விதம் குறித்து மாணவர்களை எழுதி வரச் செய்யுங்கள்.
- நடித்தலுக்கு அம்மேடைக் குறிப்புக்கள் உதவியதா? என வினவிக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- பாடவிடயத்தின்பால் மாணவர்களை ஈர்ப்பதற்காகப் பல்வேறு வழிமுறைகளையும் கையாளுங்கள்.
  * ஆரொடு நோகேன் ஒளிப்படங்களைப் பார்க்கச் செய்தல்.
  * நாடகத்தில் வரும் பாடல்களைப் பாடுதல்.
  * சொல்லாடல்களை நிகழ்த்துதல்.
  * குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களுடனான சந்திப்பிற்கு ஒழுங்கு செய்த கொடுத்தல்.
  * ஏற்கெனவே அந்நாடகத்தில் நடித்தோரின் அனுபவங்களைக் கேட்டறியச் செய்தல்.
  * அந்நாடகங்களை நெறிப்படுத்திய குழந்தை ம. சண்முகலிங்கம், கலாநிதி க. சிதம்பரநாதன், க. இ. கமல்நாதன் ஆகியோரின் நெறியாள்கை அனுபவங்களைப் பகிரச் செய்தல் போன்றவை.
- பெற்றோரின் எதிர்பார்ப்புக்களுக்கும் பிள்ளைகளின் விருப்பங்களுக்குமிடையிலான முரணே இந்நாடகத்தின் பிரதான மோதுகையாகும்.

**முதன்மைப் பதங்கள்** :
- வகைமாதிரி.
- பாகமேற்றல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துரு.
- ஒளிப்படங்கள் .
- சுவர்த்தாள்.
- A4 தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- பாத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு சம்பவங்கள் கட்டியெழுப்பப்படுவதை அறிந்திருப்பார்.
- நாடகத்தின் பிரதான மோதுகையை இனங்காண்பார்.
- நாடகத்தின் புரிந்து கொள்ளலுக்கு மேடைக் குறிப்புக்கள் துணைபுரியும் என்பதை ஏற்றுக் கொள்வார்.
- பல்வேறு எழுத்துருக்களைத் தேடியறிந்து வாசிக்கும் ஆர்வம் பெறுவார்.
- படைப்பு (நாடக எழுத்துரு மூலம்) தரும் அனுபவத்தை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வார்.

**உசாத்துணை நூல்கள்:**
- 'ஆரொடு நோகேன்' - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- 'புழுவாய் மரமாகி' - குழந்தை ம. சண்முகலிங்கம்.
- நாடக வழக்கு - (தொகுப்பு) கந்தையா ஸ்ரீகணேசன்.
- சண்ணரது கல்வியியல் அரங்கு - சி. ஜெயசங்கர்.
- கவின்தமிழ் - தமிழ் விழா மலர் வெளியீடு வடக்கு மாகாணம் - 2012.

**தேர்ச்சி 5.0 :** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு 5.2.1 :** "ஆரொடு நோகேன் நாடகத்தின் ஆற்றுகை மோடியினை அறிந்து கொள்வோம்"

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- 'ஆரொடு நோகேன்' நாடக எழுத்துருவை நாடகமாக்கும்போது கையாளத்தக்க மோடியை விளங்கியிருப்பார்.
- ஆற்றுகை நிலையில் குறித்த நாடகத்தின் மோடியை நயந்து கூறுவார்.
- எழுத்துருவிற்கும் ஆற்றுகைக்கும் இடையிலான நாடகமோடி நிலைப்பட்ட தொடர்பை இனங்கண்டிருப்பார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- 'ஆரொடு நோகேன்' என்கின்ற நாடக எழுத்துருவின் ஆற்றுகை நிலை நயத்தலின் வழியான மோடியைப் புரிந்து கொள்ளல் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் எதிர்பார்க்கப் படுகின்றன.
- நாடகத்தின் மோடியானது யதார்த்தம், யதார்த்த விரோதம் என இரு பிரதான வகைப் பாட்டிற்குள்ளாக்கப்படுகின்றது என்பது.
- இதனையே பரதர் உலகவழக்கு, நாடக வழக்கு என்கிறார் என்பது.
- யதார்த்த மோடிக்குரிய உள்ளது உள்ளவாறே சித்திரிக்கப் பெறும் பண்பு ஆரொடு நோகேன் நாடகத்தில் எவ்விதத்திற் காணப்பெறுகின்றது? அவ்வாறே மோடிமைப் பண்பு எவ்விதம் வெளிப்படுகின்றது?
- எழுத்துருவை நாடகமாக்கும்போது பாத்திரங்கள் சித்திரிக்கப் பெறும் முறைமை, காட்சி விதானிப்புச் செய்யப் பெற்ற விதம், சொல்லாடற் கையாளுகை, வேடஉடை, ஒப்பனை என்பவற்றின் தன்மைகள், என்பவற்றில் எத்தகைய மோடி பின்பற்றப்பட்டுள்ளது என்பன குறித்து மாணவர்களை ஆராய்ந்து முன்வைக்கத் தூண்டுங்கள்.
- அதன்பொருட்டு, நாடகத்தை முழுமையாகப் பார்க்க வசதி செய்து கொடுங்கள்.
- பாடசாலை விழாக்களில் ஆரொடு நோகேன் நாடகத்தை மேடையிட ஒழுங்குகள் செய்யுங்கள்.
- குறித்த நாடகத்தின் எழுத்துருவில் சங்கரி, ஷீலா, அம்பிகா ஆகிய பாத்திரங்களின் எடுத்துரைப்பும், பாடும் குழுவினது கையாள்கையும், யதார்த்த விரோதப் பண்பைக் கொண்டிருந்தன. இவை ஆற்றுகையில் எத்தகைய மோடியில் வெளிப்பட்டன என்பதைக் கேட்டறியுங்கள்.
- நெறியாளரின் தனித்தன்மைக்கு ஏற்ப, ரஞ்சித் - சுபத்திரா - ஷங்கரி குடும்பத்தை முழுமையாக மோடியுற்ற முறையிற் சித்திரிக்க வாய்ப்புள்ளதா என வினவியறியுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- நாடக மோடி.
- யதார்த்தம்.
- மோடிமை.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- A4 தாள்.
- ஆரொடு நோகேன் - காணொளி இறுவட்டு.
- நேரடி ஆற்றுகை.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஆரொடு நோகேன் நாடகத்தை யதார்த்த, யதார்த்த விரோதப் பண்புகள் வெளிப்படுமாறு ஆற்றுகை செய்வார்.
- ஆற்றுகை நிலையில் நாடகத்தை நயந்து கருத்துரைப்பார்.
- நாடக மோடிகள் பற்றி விளக்கமளிப்பார்.
- நாடக மோடி தொடர்பில் எழுத்துருவிற்கும் ஆற்றுகைக்கும் இடையிலான தொடர்பை விவரிப்பார்.
- யதார்த்த, யதார்த்த விரோத நாடகங்களைப் பார்ப்பதில் விருப்பம் காட்டுவார்.

**உசாத்துணை நூல்கள்:**

- நடிப்பிலக்கணம் - ஜீவன் . M. A.
- பரதநாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீராம தேசிகர்.

**தேர்ச்சி 5.0 :** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்5.2 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு 5.2.2 :** "ஆரொடு நோகேன் பாத்திரங்கள் சித்திரிக்கப் பெற்ற முறைமையினை நயப்போம்"

**பாடவேளை :** 03

**கற்றற் பேறுகள் :**
- நாடகப் பாத்திரங்களை இனங்காண்பார்.
- பாத்திரச் சித்திரிப்பு வழியாய் வெளித்தெரியவரும் பாத்திரக் குணாம்சங்களை நயப்பார்.
- பாத்திரங்களுக்கு இடையிலான ஊடாட்டத்தினை நயப்பார்.
- பாத்திரங்கள் சித்திரிக்கப் பெற்ற விதத்தினைச் சிலாகித்துக் கூறுவார்.
- நாடகப் பாத்திரங்களைச் சமூக வாழ்நிலைகளோடு ஒப்பு நோக்குவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- 3.4 முதல் 3.7 வரையிலான செயற்பாடுகளை நினைவுபடுத்துங்கள்.
- ஆரொடு நோகேன் எழுத்துருவில் இருந்து எடுத்துக்காட்டாகச் சில பாத்திரங்களைச் சித்திரிக்கச் செய்யுங்கள்.
- நாடகத்தின் மையக்கரு, பாத்திரச் சித்திரிப்பிற்கு ஊடாக வெளிப்படும் விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பெற்றோரின் அதீத அன்பு, அதிகாரம், பாராமுகம் போன்றவையும், பிள்ளைகளின் விருப்பங்களும் பாத்திரச் சித்திரிப்பின் வழியாகத் தாக்கம் விளைவித்தனவா? என வினவுங்கள்.
- மாணவர்களிடத்தில் அவை ஏற்படுத்திய தாக்கத்தினைக் கேட்டறியுங்கள்.
- மெய்நிலைகளாலும், சொல்லாடும் முறைமையினாலும் பாத்திரச் சித்திரிப்பு மேம்பட்ட விதம் குறித்துக் கேட்டறியுங்கள்.
- நாடக ஆற்றுகையைப் பார்வையிட்ட பின்னர், அவர்களுக்குப் பிடித்த பாத்திரம் எது என்பதை வினவியறியுங்கள்.
- அத் தெரிவிற்குக் காரணமாய் அமைந்த பாத்திரச் சித்திரிப்பின் சிறப்புக்களை முன்வைக்கச் செய்யுங்கள்.
- சித்திரிப்பை மேம்படுத்தச் செய்யத்தக்க விடயங்களை எழுதிவரச் செய்யுங்கள்.
- நாடகப் பாத்திரங்களின் சித்திரிப்புக்கு நெருக்கமான சமகால சமூகப் பாத்திரங்கள் மற்றும் நிலைமைகள் குறித்து ஒப்படை ஒன்றைச் செய்து வர அறிவுறுத்துங்கள்.
- பாத்திரச் சித்திரிப்பின் வழியாக மேற்கிளம்பும் செய்தி தொடர்பில் மாணவர்களது சொந்தக் கருத்துக்களை முன்வைக்க இடமளியுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**
- மையக் கரு.
- மேம்பாடு.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- நாடக ஆற்றுகை.
- மாணவரது சுயவெளிப்படுத்தல்கள்.
- காணொளி இறுவட்டு.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- ஆரொடு நோகேன் நாடகப் பாத்திரங்களில் இருந்து தமக்குப் பிடித்த பாத்திரத்தைக் கூறுவார்.
- பாத்திரச் சித்திரிப்பு தொடர்பான வலிவு, நலிவுகளை முன்வைப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பை மேம்படுத்துவதற்கான வழிவகைகளை விதந்துரைப்பார்.
- நாடகப் பாத்திரங்களைச் சித்திரிப்பார்.
- பாத்திரச் சித்திரிப்பை நயந்து கூறுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தரம் 10, 11.
  முன்னைய பாடத்திட்டம்
- நடிப்பிலக்கணம் - ஜீவன் . M. A.

**தேர்ச்சி 5.0 :** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்5.2 :** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார்.

**செயற்பாடு 5.2.3 :** " ஆரொடு நோகேன் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்கள் பிரயோகிக்கப் பெற்ற முறைமையினை நயப்போம்"

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள் :**
- ஆரொடு நோகேன் நாடக ஆற்றுகையில் பயன்படுத்தப் பெற்ற நால்வகைச் சித்திரிப்புக்களையும் இனங்கண்டுரைப்பார்.
- ஆற்றகையின் சிறப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்கள் பங்களித்த விதத்தினை முன்வைப்பார்.
- நாடக நயப்பை முனைப்புறுத்திய நால்வகைச் சித்திரிப்பு அம்சங் களைச் சிலாகித்துக் கூறுவார்.
- நால்வகைச் சித்திரிப்பால் மகிழ்வுறுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:**
- நால்வகைச் சித்திரிப்புக்கள், ஆரொடு நோகேன் நாடகத்திற் பயன்படுத்தப் பெற்றுள்ள முறைமையினைப் பகுப்பாய்வு செய்து, நாடக நடிப்பிற்கு அது வழங்கிய பங்களிப்பை அறிந்து கொள்வதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- இதன்படி பின்வரும் விவரங்கள் முக்கியமானவை.
  * நால்வகைச் சித்திரிப்புக்கள் எவை என்பதை நினைவுபடுத்திக் கொள்வது.
  * ஆரொடு நோகேன் நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பிரயோகத்தை இனங் கண்டு கொள்வது.
  * நாடக நயப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்களின் பங்களிப்பினை அறிந்து கொள்வது.
  * நயப்பின் காரணமாக மாணவர்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வது.
- இந்த விவரங்களை மனங்கொண்டு இரண்டு பாடவேளைகளுக்கு ஏற்றதான கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடுங்கள்.
- தேர்ச்சி மட்டங்கள் 3.4, 3.5, 3.6 என்பவற்றில் கற்ற விடயங்களை நினைவுபடுத்துங்கள்.
- ஆரொடு நோகேன் நாடகச் சொல்லாடல்கள், பாத்திரச் சித்திரிப்பு, அரங்கப் பொருள்கள், வேட உடைகள், ஒப்பனை, பாடல்கள் என்பவற்றின் காட்சி முன்வைத்தலுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- மூன்று குடும்பங்களின் வெவ்வேறு சூழமைவுகளை நால்வகைச் சித்திரிப்பினால் வேறுபடுத்த வேண்டும் என்பதனை வலியுறுத்துங்கள்.
- பின்வரும் விவரங்களைக் கருத்திற் கொண்டு நாடகத்தில் நால்வகைச் சித்திரிப்புக்களின் பிரயோகம் தொடர்பிற் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  * பாத்திரச் சித்திரிப்பிற்காகப் பயன்படுத்தப் பெற்ற உடல் மொழி, மெய்நிலைகள், மெய்யசைவுகள், மட்டங்கள், திசைகள் பற்றியது.
  * குரல் வழியான சித்திரிப்பு நிலைப்பட்ட விடயங்கள், பேச்சு, பாடல் என்பவற்றிற் கையாளப் பெற்ற குரலின் ஓசை, அசைவு, நெகிழ்ச்சி, லலிதம், லாகவம், கவர்ச்சி, ஏற்ற இறக்கம், அழகு, புறத்தெறிகை போன்றன.
  * உணர்ச்சிகள் சித்திரிக்கப் பெற்ற விதம்.
  * நாடகத்திற் கையாளப் பெற்ற வேட உடைகள், ஒப்பனைகள், மேடைப் பொருள்கள், கைப்பொருள்கள், தட்டுமுட்டுகள், நடிகன் மற்றும் இசைக்கருவிகள், பாடகர் குழு முதலியன.

* நாடகத்தில் 3 குடும்பங்கள் வெவ்வேறு சமூக அந்தஸ்துடன் சித்திரிக்கப்படுவதனால் காண்பியம் முக்கியத்துவம் பெறுகின்றது.
* ''ஷீலா நிலைக்கண்ணாடியிற் பார்ப்பது'' போன்றவற்றினால் சில மேடைப் பொருள்கள் நாடகக்கதைச் சூழ்வோடு தொடர்புபட்டிருப்பதனை வலியுறுத்துதல் வேண்டும்.

- இவற்றின் வழியாகப் பின்வரும் விடயங்களை வலியுறுத்துங்கள்.
  * நால்வகைச் சித்திரிப்புக்களின் மூலமே ஆற்றுவோர் - பார்ப்போர் தொடர்பு வலுப் பெறுகின்றது.
  * ஆற்றுகையின் வெற்றி தோல்வியில் இச்சித்திரிப்புக்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.
  * நால்வகைச் சித்திரிப்புக்களின் பொருத்தமான பிரயோகத்தினால் ஆற்றுகையின் அழகியல் முழுமையை நயக்க முடியும்.
  * பார்ப்போர் ஆற்றுகையில் ஓர் மனநிறைவைப் பெற்றுக் கொள்வதற்கு இச் சித்திரிப்புக்கள் துணை செய்கின்றன.

**முதன்மைப் பதங்கள்** :
- நால்வகைச் சித்திரிப்பு.
- உடல் மொழி.
- தட்டுமுட்டுக்கள்.
- கைப்பொருள்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**
- ஆரொடு நோகேன் நாடக ஆற்றுகை.
- தேர்ச்சி மட்டம் 3.4, 3.5, 3.6 இற்குட்பட்ட பாட விடயங்கள்.
- வேட உடைகள்.
- சொல்லாடல்கள் எழுதப்பெற்ற அட்டைகள்.
- கைப்பொருள்கள்.
- தட்டுமுட்டுக்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- ஆரொடு நோகேன் நாடகத்திற் பயன்படுத்தப் பெற்ற நால்வகைச் சித்திரிப்புக்களையும் இனங்கண்டு கூறுவார்.
- ஆற்றுகைக்கு நால்வகைச் சித்திரிப்புக்கள் எவ்விதம் உதவின என எடுத்துரைப்பார்.
- உடல், குரல், உணர்ச்சி மற்றும் காண்மிய வழிச் சித்திரிப்புகளின் பிரதான கூறுகளை அறிந்திருப்பார்.
- நாடக நயப்பிற்கு நால்வகைச் சித்திரிப்புக்களின் பங்களிப்பை எடுத்துக் கூறுவார்.
- நால்வகைச் சித்திரிப்பாற் கிடைத்த அழகியல் உணர்வால் மகிழ்வுறுவார்.

**உசாத்துணை நூல்கள்:**
- பரதக் கலைக் கோட்பாடு - பத்மா சுப்பிரமணியம்.
- பரதக் கலைக் களஞ்சியம் - ஸ்ரீராம தேசிகன்.
- அரங்கவியல் - முனைவர் சக்திப்பெருமாள்.
- தமிழ் அரங்கியல் மரபும் மாற்றங்களும் - எஸ். தெய்வநாயகம்.
  - ம. சண்முகநாதன்.
- ஈழத்தில் ஒப்பனைக் கலை - கலாநிதி இ. பாலசுந்தரம்.
- ஒளியின் வெளி - கட்டுரைத் தொகுப்பு.

## கணிப்பீட்டுக் கருவிகள்

**1. தவணை** : 01

**2. தேர்ச்சி** : 1.0

**3. தேர்ச்சி மட்டம்** : 1.3

**4. விடய உள்ளடக்கம்:**

- நாடகமும் இலக்கியமும்.
- நாடகமும் இசையும்.
- நாடகமும் வானொலி நாடகமும்.
- நாடகமும் தொலைக்காட்சி நாடகமும்.

**5. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**

- ஏனைய கலைகளுடன் ஒப்பிட்டு, நாடகக் கலையின் சிறப்புக்களை இனங்காண்பார்.
- இலக்கியம், இசை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றின் முக்கிய இயல்புகளை அறிந்து கொள்வார்.
- விவாதத் திறனை வெளிப்படுத்துவார்.
- கலைகள் பற்றித் தேடியறிவதில் ஆர்வம் மிகக் கொள்வார்.

**6. நேரம்:** 02 பாடவேளைகள் (மாணவர் எண்ணிக்கைக்கேற்ப மாறுபடலாம்.)

**7. கணிப்பீட்டுக் கருவி:** விவாதம்

**8. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம்:**

நாடகக் கலையை இலக்கியம், இசை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என்பவற்றுடன் ஒப்பிட்டு, அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விவாதம் மூலமாக முன்வைப்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**9. நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுரைப்புக்கள்:**

**ஆசிரியருக்கானவை:**

- மாணவர்களை 05 பேர் கொண்ட பல்வேறு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவில் இருப்போருக்கும் நாடகம், இலக்கியம், இசை, வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் என எழுதப் பெற்ற திருவுளச் சீட்டுக்களை வழங்கி, அவற்றுள் ஒன்றைத் தெரிந்தெடுக்கச் செய்யுங்கள்.
- தமக்குக் கிடைத்த கலை தொடர்பில் விவாதம் புரிவதற்குத் தேவையான தகவல் களைப் பெறுவதற்கு ஒரு வார கால அவகாசம் வழங்குங்கள்.
- ஒவ்வொருவரும் தமது கலையின் சிறப்புக்களை முன்வைக்க மூன்று நிமிடங்கள் வழங்குங்கள்.
- இரண்டாவது சுற்றில், மற்றவர்களின் கருத்துக்களை மறுத்துரைத்துத் மற்றைய நான்கு கலைகளையும் விடத் தமது கலை எவ்வகையில் வேறுபடுகிறது என்பதை விவாதிக்க இரண்டு நிமிடங்கள் வழங்குங்கள்.
- ஆசிரியரே நடுவராய் இருந்து தீர்ப்பளிக்க வேண்டும் என்பதைக் கருத்திற் கொள் ளுங்கள்.

**மாணவர்களுக்கானவை:**

- திருவுளச்சீட்டு மூலம் உங்களுக்கான விவாதப் பொருளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- அத்தலைப்புத் தொடர்பிற் போதிய ஆயத்தங்களைச் செய்து கொள்ளுங்கள்.
- உங்களுக்குக் கிடைத்த கலைவடிவத்தின் சிறப்புக்களை மூன்று நிமிடங்களுக்கு முன்வையுங்கள்.
- மற்ற மாணவர்களது முன்வைப்புக்களைச் செவிமடுத்து, இரண்டாவது சுற்றில் மற்றவர் களின் கலை வடிவத்தை விட உமது கலைவடிவம் வேறுபட்டது என்பதற்கான நியாயங்களை முன்வைக்க இரண்டு நிமிடங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்.
- ஆசிரியரின் தீர்ப்பை மதித்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

## 10. கணிப்பீட்டு நியதிகள்:

| தொடர் இல. | மாணவர் பெயர் | 04 புள்ளிகள் விவாதிப்பதற்கான தயார்நிலையை வெளிப்படுத்துகிறார். | 04 புள்ளிகள் தமது கலையின் சிறப்புக்களை முன்வைக்கிறார். | 04 புள்ளிகள் ஏனைய கலைகளில் இருந்து தமது கலையின் வேறுபாட்டை முன்வைக்கிறார். | 04 புள்ளிகள் விவாதத்தில் மனத்தடைகள் இன்றி ஈடுபடுகிறார். | 04 புள்ளிகள் தர்க்க நியாயங்களுடன் விவாதிக்கிறார். | 20 புள்ளிகள் | 10 புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| 4 | | | | | | | | |
| 5 | | | | | | | | |

| | |
|---|---|
| மிக நன்று | 04 |
| நன்று | 03 |
| சாதாரணம் | 02 |
| மேலும் முன்னேற வேண்டும் | 01 |

# கணிப்பீட்டுக் கருவிகள்

**1. தவணை** : 02

**2. தேர்ச்சி** : 2.0

**3. தேர்ச்சி மட்டம்** : 2.6

**4. விடய உள்ளடக்கம் :**

- சமகாலச் சிறுகதைகளில் இருந்து நாடகப் பொருத்தமான சூழமைவுகளைத் தெரிந்தெடுத்தல்.
- அந்நாடகச் சூழமைவுகளைச் சித்திரித்தல்.

**5. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**

- சமகாலச் சிறுகதைகளை வாசிப்பதில் விருப்பம் காட்டுவார்.
- சிறுகதைக்குட் காணப்பெறும் நாடகப் பொருத்தமுடைய சூழமைவுகளை இனங் காண்பார்.
- நாடகச் சூழமைவுகளைச் சித்திரித்துக் காட்டுவார்.

**6. நேரம்:** 02 பாடவேளைகள் (மாணவர் எண்ணிக்கைக்கேற்ப மாறுபடலாம்.)

**7. கணிப்பீட்டுக் கருவி:** செய்முறைச் செயற்பாடுகள்

**8. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம்:**

ஆசிரியராற் தரப்படுகின்ற சிறுகதையொன்றை வாசித்து, அதிலுள்ள நாடகப்படுத்தக் கூடிய சூழமைவு ஒன்றை இனங்கண்டு குழுவாகச் சித்திரித்துக் காட்டுவதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**9. நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுரைப்புக்கள்:**

**ஆசிரியருக்கானவை:**

- நாடகமாக்கக்கூடியதும், 15 வயதுப் பிள்ளைகளுக்கு ஏற்றதுமான சமகாலச் சிறுகதைகள் சிலவற்றைத் தெரிந்தெடுங்கள்.
- மாணவர்களைத் தேவையான அளவு எண்ணிக்கையிற் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் சிறுகதையொன்றைத் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு செய்து வழங்குங்கள்.
- சிறுகதைகளில் இருந்து நாடகமாக்கக்கூடிய சம்பவங்கள், நிகழ்ச்சிகள் கொண்ட சூழமைவொன்றைத் தெரிந்தெடுக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- சித்திரிப்பிற்கு ஏற்ற வகையிற் பாத்திரங்களைத் தெரிந்தெடுக்குமாறு கூறுங்கள்.
- அந்நாடகச் சூழமைவைச் சித்திரித்துக் காட்டுமாறு கேளுங்கள்.

**மாணவர்களுக்கானவை:**

- ஆசிரியரால் வழங்கப் பெறும் சிறுகதையைக் கூட்டாக வாசியுங்கள்.
- குழுவாகக் கலந்துரையாடி, சிறுகதையில் இருந்து நாடகமாக்கக்கூடிய சூழமைவொன் றைத் தெரிந்தெடுங்கள்.
- சூழமைவுக்கு ஏற்ப, பாத்திரங்களை உங்களுக்கிடையே பொருத்தமான முறையிற் பிரித்துக் கொள்ளுங்கள்.

- சூழமைவின் மையப்பொருள் தெளிவாக வெளிப்படும் வண்ணம் சொல்லாடல்களைச் சுயமாக அமைத்துக் கொள்ளுங்கள்.
- அச்சூழமைவை நாடகமாகச் சித்திரித்துப் பயிற்சி பெறுங்கள்.
- ஆசிரியர் மற்றும் சக மாணவர்களுக்கு முன்னாற் சூழமைவைச் சித்திரியுங்கள்.

## 10. கணிப்பீட்டு நியதிகள்:

| தொடர் இல. | மாணவர் பெயர் | 04 புள்ளிகள் சிறுகதையை ஆர்வத்துடன் வாசிக்கிறார். | 04 புள்ளிகள் நாடகச் சூழமைவைக் குழுவாகக் கலந்துரையாடித் தெரிந்து எடுக்கிறார். | 04 புள்ளிகள் ஏற்றுக் கொண்ட பாத்திரத்தைச் சித்திரித்துக் காட்டுகிறார். | 04 புள்ளிகள் சொல்லாடல்களைச் சுயமாக முன்வைக்கிறார். | 04 புள்ளிகள் கூட்டுணர்வுடன் சூழமைவை முழுமை பெறச் செய்கிறார். | 20 புள்ளிகள் | 10 புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | |
| 2 | | | | | | | | |
| 3 | | | | | | | | |
| 4 | | | | | | | | |
| 5 | | | | | | | | |

| | |
|---|---|
| மிக நன்று | 04 |
| நன்று | 03 |
| சாதாரணம் | 02 |
| மேலும் முன்னேற வேண்டும் | 01 |

## கணிப்பீட்டுக் கருவிகள்

**1. தவணை** : 03

**2. தேர்ச்சி** : 2.0

**3. தேர்ச்சி மட்டம்** : 2.7

**4. விடய உள்ளடக்கம்:**

- நாடக எழுத்துரு எழுதுதல்.

**5. அத்தியாவசியக் கற்றற் தேர்ச்சிகள்:**

- சமகால விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவார்.
- சமகால விடயங்களை நாடக எழுத்துருவின் கருப்பொருளாக்குவார்.
- எழுத்துருவிற்குரிய நுட்பமுறைகளைக் கைக்கொள்வார்.
- நாடக எழுத்துருவொன்றை ஆக்குவார்.

**6. நேரம்:** 01 பாடவேளை

**7. கணிப்பீட்டுக் கருவி:** ஆக்கச் செயற்பாடு

**8. கணிப்பீட்டுக் கருவி அறிமுகம்:**

ஆசிரியராற் தரப்படும் அன்றேல் சுயமாகத் தீர்மானித்துக் கொள்ளும் சமகால விடயப் பொருளை மையமாகக் கொண்டு ஐந்து நிமிடங்களுக்கு ஆற்றுகை செய்யத்தக்க எழுத்துருவொன்றை எழுதுவதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.

**9. நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுரைப்புக்கள்:**

**ஆசிரியருக்கானவை:**

- சமகால முக்கியத்துவம் உடையதும் 15 வயதுப் பிள்ளைக்கு ஏற்றதுமான விடயப் பொருள்கள் சிலவற்றை ஆயத்தம் செய்யுங்கள் அன்றேல் அவ்வாறான விடயப் பொருள்கள் சிலவற்றை யோசித்து வருமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- அச்சமகால விடயப் பொருள்களில் ஒன்றினைத் தெரிந்தெடுத்து, 05 நிமிடங்களுக்கு மேடையிடத்தக்க நாடக எழுத்துருவொன்றை ஆக்குமாறு கூறுங்கள்.
- எழுத்துருவை எழுதுவதற்கு 30 நிமிடங்களை வழங்குங்கள்.
- எழுத்துருவிற்குரிய முக்கிய அம்சங்கள் அதில் அடங்கியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

**மாணவர்களுக்கானவை:**

- நாடக எழுத்துருவொன்றை எழுதுவதற்குப் பொருத்தமான சமகால முக்கியத்துவ முள்ள விடயப் பொருள்கள் சிலவற்றை ஆயத்தம் செய்து வாருங்கள்.
- நீங்கள் ஆயத்தம் செய்த அன்றேல் ஆசிரியரால் வழங்கப் பெறும் விடயப் பொருளிற்கு அமைவாக 05 நிமிடங்கள் ஆற்றத்தக்க நாடக எழுத்துருவொன்றை ஆக்குங்கள்.
- எழுத்துருவிற்குரிய கட்டமைப்பைப் பின்பற்றுங்கள்.

## 10. கணிப்பீட்டு நியதிகள்:

<table>
<tr><th rowspan="2">தொடர் இல.</th><th rowspan="2">மாணவர் பெயர்</th><th>04 புள்ளிகள்</th><th>04 புள்ளிகள்</th><th>04 புள்ளிகள்</th><th>04 புள்ளிகள்</th><th>04 புள்ளிகள்</th><th>20 புள்ளிகள்</th><th>10 புள்ளிகள்</th></tr>
<tr><th>சமகால விடயப் பொருள்களை ஆயத்தம் செய்கிறார்.</th><th>எழுத்துருவிற்குரிய கட்டமைப்பைப் பேணுகிறார்.</th><th>எழுத்துருவிற்கு ஊடாக மையப் பொருளை வெளிப்படச் செய்கிறார்.</th><th>எழுத்துருவை மேடைக்குரியதாக எழுதுகிறார்.</th><th>தம் கற்பனையாற்றலை வெளிப் படுத்துகிறார்.</th><th></th><th></th></tr>
<tr><td>1</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>2</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>4</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
<tr><td>5</td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>

| | |
|---|---|
| மிக நன்று | 04 |
| நன்று | 03 |
| சாதாரணம் | 02 |
| மேலும் முன்னேற வேண்டும் | 01 |